# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

இரண்டாம் பதிப்பு

விலை: 20

பக்கங்கள்: 24

சுடர் 32 கதிர் 303 புரட்டாதி 09ஆம் நாள் திங்கட்கிழமை 25 செப்ரெம்பர் 2017 வள்ளுவர் ஆண்டு 2048


### கூட்டாட்சிக் கோட்பாடுகளுக்கு உள்பட்ட

# அதியுச்ச அதிகாரப் பகிர்வையே கூட்டமைப்பு ஏற்றுக்கொள்ளும்

### தமிழரசுக் கட்சிக் கூட்டத்தில் சம்பந்தன் ஆணித்தரம்

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 25

"வடக்கு - கிழக்கு இணைக்கப்பட்ட, கூட்டாட்சிக் (சமஷ்டி) கோட்பாட்டுக்கு இணங்க அதியுச்ச அளவில் அதிகாரங்கள் பகிரப்பட்ட தீர்வையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்றுக் கொள்ளும். கூட்டமைப்பு அதில் உறுதியாக இருக்கின்றது"

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மையக் குழுக் கூட்டம் அம்பாறையில் நேற்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதிய அரசமைப்புக்கான இடைக்கால அறிக்கையே தற்போது வெளிவந்துள்ளது. இது இறுதி அறிக்கை அல்ல. இடைக்கால அறிக்கை தொடர்பில் நாடாளுமன்றில் அடுத்த மாதம் விவாதிக்கப்படவுள்ளது. அதன் பின்னர் அரசமைப்பு வரையப்படும். அதுவும் அறிக்கையாக வெளிவந்து அரசமைப்பு நிர்ணய சபையான நாடாளுமன்றில் விவாதிக்கப்படும்.

பின்னர் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் அரசமைப்பின் இறுதி அறிக்கை நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட வேண்டும். அது மக்களின் ஒப்புதலைப் பெறுவதற்கு பொது வாக்கெடுப்புக்கும் விடப்பட்டு வெற்றிபெற வேண்டும். அதன் பின்னரே புதிய அரசமைப்புக்கு நடை



>> 21



## தியாக தீபம் திலீபனின் இறுதிநாள் நினைவேந்தல்

### நல்லூரில் நாளை

யாழ்ப்பாணம் செப். 25

அமைதிப் படையாகக் காலடி எடுத்து வைத்து ஆக்கிரமிப்புப் படையாக மாறி ஈழத் தமிழர்களை வேட்டையாடி சூறையாடி அழித்தொழித்த இந்

>> 21

## துன்னாலையில் நேற்றிரவும் இருவர் கைது

யாழ்ப்பாணம், செப். 25

துன்னாலையில் அரச சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்த குற்றச்சாட்டில் நேற்றிரவு 2 பேர் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வடமராட்சி கிழக்கில் மணல் கடத்தலைத் தடுப்பதாகத் தெரிவித்து பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டார். அதனைய

>> 21

### வடக்கு முதலமைச்சர் அறிவிப்பு

# இடைக்கால அறிக்கை நோய்க்கு மருந்தில்லை

### தொடர்ந்து போராடும் நிர்ப்பந்தத்துக்குள் தமிழர் தள்ளப்பட்டுள்ளனர் எனத் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், செப். 25

"வெளிவந்துள்ள இடைக்கால அறிக்கை நோய்க்கான தீர்வு கிடையாது. அரைகுறைத் தீர்வு ஒரு போதும் நோய்க்கு மருந்தாகாது. தொடர்ந்து போராட வேண்டிய நிர்ப்பந்தத்தையே இடைக்கால அறிக்கை உருவாக்கியுள் ளது"

இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ் வரன் தெரிவித்தார்.

வெளியாகியுள்ள இடைக்கால அறிக்கை தொடர்பில், கேள்வி பதிலாக அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

>> 21

### வழக்கு விசாரணை இடமாற்றம்:

## அரசியல் கைதிகள் மூவர் உணவு ஒறுப்பு

யாழ்ப்பாணம், செப். 25

வவுனியா மேல் நீதிமன்றிலிருந்து வழக்கு இடமாற்றம் செய்யப்படுவதற்கு எதிராகத் தமிழ் அரசியல் கைதிகள் மூவரும் இன்று தொடக்கம் உணவு ஒறுப்புப் போராட்டத்தை ஆரம்பிக்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

இவர்களது வழக்கு அநுராதபுரம் மேல் நீதிமன்றிலேயே இன்றைய தினம் எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

வவுனியா மேல் நீதிமன்றில் 4 ஆண்டுகளா

>> 21



எல்லாத் தரப்பிலும் எதிர்ப்புத்தான்...

## வடக்கு அமைச்சரவை விவகாரம் தமிழரசுவின் கூட்டத்தில் நிசப்தம்

யாழ்ப்பாணம், செப். 25

வடக்கு மாகாண சபையில் அமைச்சுப் பொறுப்புக்களை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி ஏற்பதில்லை என்று அந்தக் கட்சியின் வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் மேற்கொண்ட தீர்மானம் தொடர்பில், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மையச் செயற்குழுக் கூட்டத்தில் நேற்று ஆராயப்படவில்லை.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மையச் செயற்குழுக் கூட்டம் அம்பாறையில் நேற்றுக் கூடியது. இந்தக் கூட்டத்தில், வடக்கு மாகாண சபை அமைச்சுப் பதவி ஏற்பதில்லை என்ற விவகாரம் ஆராயப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டபோதும் அது தொடர்பில் மூச்சும் காட்டப்படவில்லை என்று

>> 21

## புதிய அரசமைப்பு உருவாக்கம் இலங்கைக்கான சாவுப் பொறி

### கடும்போக்காளர் குணதாஸ அமரசேகர குத்திமுறிவு

கொழும்பு, செப். 25

புதிய அரசமைப்பு உருவாக்கப்படுவது இலங்கைக்கான சாவுப்பொறி என்று விமர்சித்துள்ள தேசிய ஒருங்கிணைப்பு ஒன்றியத்தின் தலைவர் குணதாஸ அமரசேகர, அந்தப் பொறியில் சிக்காமல் இருப்பது பற்றி ஆழமாகச் சிந்திக்க வேண்டும் எனவும் சுட்டிக் காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போதைய அரசின் பயணமானது நாட்டுக்குப் பெரும் அச்சுறுத்தலாக இருக்கின்றது. நாட்டைமீட்டெடுப்பதற்கே முன்னுரிமை வழங்கவேண்டும்.

பிரிவினையை ஊக்குவிக்கும் வகையில் புதிய அரசமைப் பொன்றைக்

>> 21

### பனம் பழம் 5 ரூபா பனம் விதை 1 ரூபா

(விரிவு பக். 6)

## நாடு பிளவடையாமல் பாதுகாக்க விகாரைகளில் புதனன்று வழிபாடு

### பிக்குகள் பாதுகாப்பு அமைப்பால் ஒழுங்கு

>> 21

## கடலுக்கு சென்ற மீனவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், செப். 25

கடலுக்கு தொழிலுக்குச் சென்ற மீனவர் நெஞ்சுவலி ஏற்பட்டு படகில் உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

குருநகரைச் சேர்ந்த டி. தர்மராசா (வயது - 60) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார். அவர் 4 பிள்ளைகளின் தந்தை.

நண்பர் ஒருவருடன் நேற்றுமுன்தினம்

>> 21

# குருதி சிந்தித் தக்கவைத்த ஒற்றையாட்சியை புதிய அரசமைப்பின் ஊடாக ஒழிக்க முயற்சி

### சிங்கள மக்களைக் கிளர்ந்தெழுமாறு வீரவன்ச அறைகூவல்

கொழும்பு, செப். 25

"அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்குத் தனது மாமாவான ஜே.ஆர்.ஜெயவர்த்தன கையாண்ட வழிமுறையைப் பின்பற்றியே புதிய அரசமைப்பை நிறைவேற்றுவதற்கு மருமகனான தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க முயற்சிக்கின்றார். குருதி சிந்தித் தக்கவைத்த ஒற்றையாட்சி நாட்டை அழிக்கவே புதிய அரசமைப்பின் ஊடாக முயற்சிக்கின்றனர். இதற்கெதிராக சிங்கள மக்கள் அணி திரள வேண்டும்"

இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச அறைகூவல் விடுத்தார்.

தேசிய சுதந்திர முன்னணியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தா

>> 21



# கிரான்புல்சேனை அணைக்கட்டுக்கு நேற்று அடிக்கல்

மட்டக்களப்பு, செப். 25

மட்டக்களப்பு செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவில் அமைக்கப்படவுள்ள கிரான் புல்சேனை அணைக்கட்டுக்கான அடிக்கல் நேற்று நடப்பட்டது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமாகிய இரா சம்பந்தன், மத்திய நீர்ப்பாசன அமைச்சர் விஜித் விஜயமுனி செய்சா, கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் அகமட், நாடாளுமன்ற உறுப்பினர்களான சீ.யோகேஸ்வரன், ஞா.ஶ்ரீநேசன் உள்ளிட்ட குழுவினர் அணைக்கட்டுக்கான அடிக்கல்லை நட்டனர்.

கிழக்கு மாகாண விவசாய நீர்ப்பாசன அமைச்சர் கிருஸ்ணபிள்ளை துரைராசசிங்கம் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது. அதில் மாவட்டச் செயலர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ், மாகாண மாகாணசபை உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

மத்திய நீர்ப்பாசனத் திணைக்களத்தின் 650 மில்லியன் ரூபா ஒதுக்கீட்டில் இந்த நீர்ப்பாசன அணைக்கட்டு அமைக்கப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

"நாட்டில் வாழும் மக்கள் அனைவருக்குமாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன புதிய அரசமைப்பை உருவாக்கவுள்ளார். புதிய அரசமைப்பில் பௌத்த மதத்துக்கு முதலிடம் கொடுத்து பௌத்த மதத்தைக்காப்போம். அதுபோன்று ஏனைய மதங்களுக்குப் பாதுகாப்பும் மதங்களை போதிப்பதற்கான உத்தரவாதமும் வழங்கப்படும். பௌத்த மதத்தின் வளர்ச்சிக்கு அடிப்படைக் காரணமே இந்து மதமாகும். தற்போது நாடு ஒரு சமாதான சூழ்நிலையில் உள்ளது" என்று நீர்ப்பாசன அமைச்சர் கமினி விஜித் விஜயமுனி செய்சா நிகழ்வில் உரையாற்றும் போது தெரிவித்தார். (ஐ-10-47)

# திலீபனின் தியாகத்துக்கு இன்னமும் பரிகாரமில்லை

## எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் சுட்டிக்காட்டு

மட்டக்களப்பு, செப். 25

"தமிழ் மக்கள் மத்தியில் விடுதலைத் தீயை விதைத்த தியாக தீபம் திலீபனின் தியாகத்துக்கு இன்னமும் பரிகாரம் கிடைக்கவில்லை. அந்தப் பரிகாரத்தைப் பெறும் நடவடிக்கையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அயராது பாடுபட்டுக்கொண்டிருக்கின்றது.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுத் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் அம்பாறை மாவட்டத்தின் கல்முனை வாடிவீட்டு வீதியில் அமைந்துள்ள ஜெயா மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. அதில் தியாக தீபம் திலீபனுக்கும் அஞ்சலி செலுத்தப்பட்டது.



நிகழ்வில் திலீபனின் திருவுருவப் படத்துக்கு தமிழரசுக்கட்சியின் அரசியல்குழுத் தலைவர் இரா.சம்பந்தன் மாலை அணிவித்து, சுடரேற்றி அஞ்சலி செலுத்தினார். அதனைத் தொடர்ந்து தமிழரசுக் கட்சியின் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா, தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரும் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான பொன்.செல்வராஜா ஆகியோர் திலீபனின் திருவுருவப் படத்துக்கு மாலை அணிவித்துச் சுடரேற்றினர்.

தமிழரசுக் கட்சியின் மூத்த உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான பா.அரியநேத்திரன் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது.

"தியாகங்கள் அளப்பரியன. அந்தவகையில் தியாக தீபம் திலீபனின் தியாகம் உன்னதமானது. தமிழர் தாயகத்தில் இந்திய ஆக்கிரமிப்புப் படையினருக்கு எதிராக 12 நாள்கள் உணவு ஒறுப்புப் போராட்டம் நடத்தி வீரச்சாவடைந்தவர் திலீபன். முப்பது வருடங்களுக்குப் பின்னர் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் தியாக தீபம் திலீபனை பகிரங்கமாக நினைவுகூருவதில் பெருமையடைகின்றோம். தியாகங்கள் மதிக்கப்படவேண்டும். திலீபனின் தியாகமும் மதிக்கப்படவேண்டும்" என்று நிகழ்வில் உரையாற்றி எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கில் அமைதிப் படையாகக் காலடி எடுத்து வைத்து ஆக்கிரமிப்புப் படையாக மாறி ஈழத் தமிழர்களைக் கொன்று குவித்த இந்திய இராணுவத்துக்கு எதிராக, அகிம்சை வழியில் 12 நாள்கள் உணவு ஒறுப்புப் போராட்டம் நடத்தி, வீரச்சாவடைந்த தியாக தீபம் லெப்.கேணல் திலீபனின் 30ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு தாயக மண்ணிலும், புலம்பெயர் தேசமெங்கும் உணர்வெழுச்சியுடன் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-10-30)

# 304 மாணவர்கள் பொலிஸாரிடம் சிக்கினர்

## காதல் சோடிகளாக இருந்தனராம்

கொழும்பு,செப்.25

அநுராதபுரத்தில் பொலிஸாரால் நேற்று மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது மாணவர்கள் 304 பேர் கைது செய்யப்பட்டனர்.

அநுராதபுரம் நகரத்தில் அமைந்துள்ள ரிவர் பார்க், நேச்சர் பார்க் ஆகிய இடங்களில் சோடிகளாக உல்லாசமாக இருந்தபோதே இவர்கள் கைது செய்யப்பட்டனர். இவர்கள் அனைவரும் அநுராதபுரத்துக்குப் பிரத்தியேக வகுப்புக்குச் செல்வதாகப் பெற்றோரிடம் பொய் கூறிவிட்டு, அந்த இடங்களுக்கு வந்துள்ளனர் என்று ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

மாணவர்கள் அனைவரையும் இரண்டு பேருந்துகளில் அநுராதபுரம் பொலிஸ் நிலையத்துக்குப் பொலிஸார் அழைத்துச் சென்றனர். பின்னர் அவர்கள் கடும் எச்சரிக்கையின் பின்னர் விடுவிக்கப்பட்டனர் என்று அநுராதபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சிறப்புச் சோதனை நடவடிக்கைகளுக்காக பொலிஸ் அதிகாரிகள் 45 பேர் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-33)



அக்கினிச் சிறகுகள் அமைப்பின் முதலாவது மாநாடு வவுனியா றோயல் கார்டின் மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. அதில் வரவேற்பு நடனம், புத்தகம் வெளியீடு, பாடல் வெளியீடு போன்ற பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்றன. நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் , வடக்கு மாகாண கல்வி அமைச்சர் சர்வேஸ்வரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ஐ-10)

# 2 ஆயிரம் கிலோ கழிவுத் தேயிலை மீட்பு

கொழும்பு, செப். 25

கொட்டக்கலையில் கலப்படம் செய்யப்பட்ட தேயிலையை விற்பனை செய்து வந்த உரிமையாளர் மற்றும் தேயிலையை ஏற்றி வந்த வாகனத்தின் சாரதி ஆகியோர் நேற்றுக் கைது செய்யப்பட்டனர். கொட்டகலை நகர் மைதானத்துக்கு அருகில் உள்ள கட்டடம் ஒன்றில் இவ்வாறு தேயிலை கலப்படம் செய்யப்பட்டு வேறு இடங்களுக்கு விற்பனை செய்யப்பட்டு வந்தது.

கடந்த ஒரு மாதத்துக்கு மேலாகக் கலப்படம் செய்யப்பட்ட தேயிலை விற்பனை செய்யப்பட்டு வந்துள்ளது. வாகனத்தில் ஏற்றப்பட்ட 2ஆயிரம் கிலோ கிராம் கலப்படம் செய்யப்பட்ட தேயிலையைப் பொலிஸார் மீட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-10- 41)

# பொய்யான தகவல் வழங்கியவரைத் தேடி பொலிஸார் வலைவீச்சு


வவுனியா, செப். 25

பொலிஸாரின் அவசர சேவை 119 தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பு எடுத்து, விபத்து இடம்பெற்றதாகப் பொய்யான தகவல் வழங்கிய நபர் தொடர்பாகப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

வவுனியா மன்னார் வீதி நெளுக்குளம் பகுதியில் விபத்து இடம்பெற்றதாகவும், அதில் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார் என்றும் பொலிஸாரின் அவசர சேவை இலக்கமான 119 இலக்கத்துக்கு, வவுனியாவில் இருந்து பொதுமகன் ஒருவரால் நேற்று மதியம் 2.45 மணியளவில் தகவல் வழங்கப்பட்டது.

அதனையடுத்து கொழும்பு அவசர பொலிஸ் இலக்கத்திலிருந்து, வவுனியா போக்குவரத்துப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. வவுனியாவிலிருந்து நெளுக்குளம் நோக்கி விரைந்த போக்குவரத்துப் பொலிஸார், நெளுக்குளம் பகுதி முழுவதும் தேடுதல் நடத்தினர். அங்கு விபத்துக்கள் எதுவும் இடம்பெறவில்லை என்பதை அறிந்தனர்.

அதனையடுத்து பொய்யான தகவலை வழங்கிப் பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்த நபரைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-10)



# வியாபார நிலையத்தில் தீ விபத்து

கொழும்பு, செப். 25
கோகாலை கலிகமுவ நகரத்தில் அமைந்துள்ள மூன்று மாடிக் கட்டட வியாபார நிலையத்தில் நேற்றுத் தீ விபத்து ஏற்பட்டது.
வியாபாரநிலையத்தில்தீபரவியதைஅடுத்து, பின்னாலிருந்த வீட்டுக்கும் தீ பரவியது எனத் தெரிவிக்கப்பட்டது.
தீயணைப்புப் பிரிவினருக்குத் தகவல் வழங்கப்பட்டது.
அங்கு விரைந்த மூன்று தீயணைப்பு வாகனங்கள் தீயணைப்புப் பணிகளில் ஈடுபட்டன.
மின் கசிவு காரணமாகத் தீ விபத்து ஏற்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. (ஜ-10)



# அக்கரை விவகாரம் ஒரு வாரத்தில் தீர்வு

## பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் உறுதியளிப்பு

வடமராட்சி,செப்.25
தொண்டமனாறு அக்கரைக் கடற்கரைப் பிரச்சினைக்கு இன்னமும் ஒரு வாரத்தில் தீர்வு பெற்றுத் தருவதாகப் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் நேற்று நேரில் சென்று உறுதியளித்தனர்.
அக்கரை உல்லாசக் கடற்கரையில் இடம்பெறும் கலாசாரச் சீரழிவுகளைக் கட்டுப்படுத்துமாறு கோரி, அந்தப் பகுதி மக்கள் சிலர் நேற்று ஆறாம் நாளாகவும் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
அவர்களை வடமாகாண சபை உறுப்பினர்களான சுகிர்தன், தர்மலிங்கன் ஆகியோரும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் சிலரும் மற்றும் பொலிஸாரும் நேரில் சென்று சந்தித்தனர்.
தமது கோரிக்கை தொடர்பாகப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் அவர்களிடம் எடுத்துக் கூறினர்.
"இந்தப் பிரச்சினைக்கு உரிய தரப்புக்களுடன் கலந்துரையாடி இன்னமும் ஒரு வாரத்தில் தீர்வு பெற்றுத் தருகிறோம். எவரும் உணவு ஒறுப்பில் ஈடுபட வேண்டாம். கிராமத்தின் நற்பெயருக்கு அவமதிப்பு ஏற்பட விடமாட்டோம். நியாயமான உங்கள் கோரிக்கை நிறைவேற்றப்படும்" என்று பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் உறுதியளித்தனர்.
"போராட்டத்தில் ஈடுபட்டு வரும் எங்களிடமும் உணவு வாங்கித் தரவா என்று கடற்கரைக்கு வரும் சிலர் எம்மிடம் கேலியும் கிண்டலுமாகக் கேட்கிறார்கள்.
அதனால் எங்களுக்குப் பாதுகாப்பு இல்லை" என்று போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மக்கள் பொலிஸாரிடம் தெரிவித்தனர்.
அதனையடுத்து 24 மணி நேரமும் கடற்கரைச் சுற்றுப்புறத்துக்குப் பொலிஸ் பாதுகாப்பு வழங்குவதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ஜ-ரி4-26)

யாழ்ப்பாணம் வந்த அமைச்சர் ரஜிதவால்

# வட்டுக்கோட்டை, காவலூர் மருத்துவமனைகளின் புதிய கட்டடங்கள் திறப்பு

யாழ்ப்பாணம்,செப்.25
வடக்கு மாகாணத்தில் சுகாதார சேவையை மேம்படுத்தும் திட்டத்தில் வட்டுக்கோடை, ஊர்காவற்றுறை மருத்துவமனைகளில் அமைக்கப்பட்ட புதிய கட்டடங்கள் நேற்றுத் திறக்கப்பட்டன.
சுகாதார போசனை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் ராஜித சேனாரத்ன முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு கட்டடங்களைத் திறந்தார்.
எய்ட்ஸ், காசநோய் மற்றும் மலேரியா தடுப்புக்கான உலக நிதியத்தின் நிதிப்பங்களிப்புடன் வடக்கு மாகாணத்தில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. நாட்டிலுள்ள பிரதேச மற்றும் ஆதார மருத்துவமனைகளை அபிவிருத்தி செய்வதற்கு 2 ஆயிரம் பில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



அதில் வட்டுக்கோட்டைப் பிரதேச மருத்துவமனையில் 30 மில்லியன் ரூபா நிதியுதவியில் இரண்டு மாடிகளைக் கொண்டதாக வெளிநோயாளர் பிரிவுக்கான புதிய கட்டம் அமைக்கப்பட்டது.
அத்துடன் 68 மில்லியன் ரூபா நிதியுதவியில் ஊர்காவற்றுறை ஆதார மருத்துவமனையில் வெளிநோயாளர் பிரிவு மற்றும் நிர்வாக அலகுக்கான இரண்டு மாடிக் கட்டம் அமைக்கப்பட்டது. அந்த இரு கட்டடங்களையும் சுகாதார அமைச்சர் திறந்தார்.
வட்டுக்கோட்டைப் பிரதேச மருத்துவமனையில் இடம்பெற்ற நிகழ்வு மருத்துவமனைப் பொறுப்பதிகாரி மருத்துவ கலாநிதி திருமதி காந்தநேசன் ரதினி தலைமையில் நடைபெற்றது.
திறப்பு விழாவைத் தொடர்ந்து அமைச்சர் தலைமையிலான குழுவினர் மருத்துவமனைப் பொறுப்பதிகாரியைச் சந்தித்துக் கலந்துரையாடினர். மருத்துவமனையில் அடிப்படை வசதிகள் உட்பட மருத்துவர், தாதியர் பற்றாக்குறை நிலவுவதாக பொறுப்பதிகாரி எடுத்துக் கூறினார்.



மருத்துவமனையின் சகல தேவைகளையும் விரைவில் நிறைவேற்றித் தருவதாக அமைச்சர் உறுதியளித்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.
அதனைத் தொடர்ந்து ஊர்காவற்றுறை மருத்துவமனைக்குச் சென்ற குழுவினர். அங்கு அமைக்கப்பட்ட புதிய கட்டடத்தைத் திறந்தனர். மருத்துவமனைப் பொறுப்பதிகாரி மற்றும் மருத்துவர்களுடன் சந்தித்துக் கலந்துரையாடினர். மருத்துவமனையின் உடனடித் தேவைகள் தொடர்பாகவும் கேட்டறிந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.
இந்த நிகழ்வுகளில் சுகாதாரப் பிரதி அமைச்சர் பைசர்ஹாசிம், வடமாகாண ஆளுனர் ரெஜினோல்ட் குரே, யாழ். மாவட்டஇராணுவத் தளபதி மேஜர்.ஜெனரல் தர்சன ஹெட்டியராச்சி, உலக நிதி நிறுவனத்தின் திட்ட பணிப்பாளர் லின்டா உள்ளிட்ட குழுவினர் கலந்து கொண்டனர். (ஜ-ரி4-106-32)



இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் ஏற்பாட்டில் குருதித்தான நிகழ்வு மன்னார் மெதடிஸ்த திருச்சபையில் நேற்று இடம் பெற்றது. மன்னார் பொது மருத்துவமனையின் குருதி வங்கிப் பிரிவினர் குருதி சேகரிப்பில் ஈடுபடடனர். (ஐ-10-56)

# துன்னாலைச் சம்பவம் மற்றொருவர் கைது

வடமராட்சி,செப்.25
துன்னாலையில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.
வட்டுக்கோட்டைப் பகுதியில் உள்ள வீடொன்றில் மறைந்திருந்த அவரை வட்டுக்கோட்டைப் பொலிஸார் கைது செய்தனர்.
துன்னாலைப் பகுதியைச் சேர்ந்த 37 வயதுடைய சந்தேகநபரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.
பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் துன்னாலை இளைஞன் ஒருவர் உயிரிழந்தார். இந்தச் சம்பவத்தை அடுத்து அந்தப் பகுதியில் தொடர்ச்சியாக வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றன. பொலிஸார் மீதும், பொலிஸ் காவலரண் மீதும் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.
இந்தச் சம்பவங்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டிலேயே சந்தேகநபர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். மேலதிக விசாரணைகளை வட்டுக்கோட்டைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-ரி4-26)

# பேருந்தில் முதியவரிடம் பணம் திருடியவர் கைது

யாழ்ப்பாணம், செப். 25
யாழ்ப்பாணம் தனியார் பேருந்து ஒன்றில், முதியவரின் கைப்பையில் இருந்து பணத்தைத் திருடியவர் கையும் மெய்யுமாகப் பிடிபட்டார்.
யாழ்.நகரிலிருந்து குறிகாட்டுவான் நோக்கி நேற்று மதியம் பயணித்த பேருந்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.
பேருந்தின் நெரிசலான பயணத்தைச் சாதகமாகப் பயன்படுத்திய நபர், முதியவர் ஒருவரின் கைப்பையில் இருந்து 3ஆயிரத்து 500 ரூபா பணத்தைத் திருடிக் கொண்டு தப்பிச் செல்ல முற்பட்டார்.
சம்பவத்தை நேரில் கண்ட பொலிஸ் உத்தியோகத்தர், உடனே சாதுரியமாகச் செயற்பட்டுத் திருடன் தப்பிப்போகாதவாறு விரட்டிப் பிடித்தார். திருடனிடம் இருந்து முதியவரின் பணம் மீளப்பெறப்பட்டது.
சந்தேகநபர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஜ-10)

# நவாலிப் பிரதேச மக்களுக்கு சுன்னாகம் குழாய்நீர் போதாது

## பிராந்திய முகாமையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம். செப்.25
சுன்னாகத்தில் இருந்து குழாய் மூலம் நவாலிக்கு வரும் குடிதண்ணீர் பொதுத் தொட்டிகளுக்கு வழங்கவே போதுமானது.

எனினும், மேலதிகமான குடிதண்ணீரை வழங்குவதற்கான சாத்தியம் உள்ளது எனப் பொறுப்பதிகாரி சிபார்சு செய்தால் நவாலி வடக்குக்கான குடிதண்ணீர் வழங்கப்படும் என தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் யாழ்ப்பாணப் பிராந்திய முகாமையாளர் எந்திரி ஜெகதீஸ்வரன் தெரிவித்தார்.

நவாலி வடக்கு மக்கள் குடிதண்ணீர் வசதியின்றி அல்லலுறுகின்றனர் எனத் தெரிவித்துத் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் பிராந்திய முகாமையாளர், திட்டப் பணிப்பாளர் எந்திரி தி.பாரதிதாசனுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்திலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த ஐந்து வருடங்களுக்கு முன்னர் மறைந்த சி.பொ.வ.ம.கா முதலியார் மற்றும் நவாலி ஹேமலதா ஞாபகார்த்த சனசமூக நிலையம் இணைந்த வகையில் திட்டம் ஒன்று முன்வைக்கப்பட்டது.

அந்தத் திட்டத்துக்கு சுன்னாகத்தில் இருந்து நவாலி வடக்கு, தெற்கு வரையான குடிதண்ணீர் திட்டம் முன்னகர்த்தப்பட்டது.

தற்போது நவாலி வடக்கு முதன்மைச் சாலையில் உள்ள மக்கள் குடிதண்ணீரைப் பெறுகின்றனர். ஆனால், நவாலி வடக்கு வரகுசாட்டி மற்றும் தலுவில் சாலை மக்கள் குடிதண்ணீர் இன்றி அவதிப்படுகின்றனர்.

இரவுவேளைகளில் நீண்டதூரம் பயணித்தே அவர்கள் குடிதண்ணீரைப் பெறுகின்றனர்.

எனவே, நவாலி வடக்கு முதன்மைச் சாலை வழியாகவரும் குடிதண்ணீரை வரகுசாட்டியில் உள்ள 12 குடும்பங்களுக்கும் வழங்கி உதவவேண்டும் என்றுள்ளது.

வரகு சாட்டியில் உள்ள 12 குடும்பங்கள் கையொப்பம் இட்ட கடிதங்கள் கடந்த 21ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்ட தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் பிராந்திய முகாமையாளர் எந்திரி ஜெகதீஸ்வரனுக்கு வழங்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தகக்து.

(ய-50)

## நெல்லியடியில் கலைவிழா

யாழ்ப்பாணம், செப்.25
நெல்லியடி மத்திய கல்லூரி தேசிய பாடசாலையின் கலைவிழா இன்று திங்கட்கிழமை மு.ப 9.30 மணிக்கு கல்லூரிக் கலையரங்கில் நடைபெறும்.

அதிபர் க.கிருஷ்ணகுமார் நிகழ்வுக்கு தலைமை தாங்குவார்.

முதன்மை விருந்தினராக ஓய்வுநிலை சங்கீத உதவிக் கல்விப் பணிப்பாளர் சங்கீத பூஷணம் செல்வி.சரோஜா தம்பு கலந்து கொள்வார்.

(ய-35)

**கண்ணீர் அஞ்சலி**



அருள்மிகு உரும்பிராய்
பர்வதவர்த்தனி அம்மன் கோவில்
பரிபாலன சபை முன்னாள்
பொருளாளரும் அம்பாளின்
தீர்த்தோற்சவத்தின் ஒரு
உபயகாரருமான

**பொன்னம்பலம்
விக்கினேஸ்வரன்**

அவர்கள் காலமான செய்தி எம்மை ஆழ்ந்த துயரத்தில் ஆழ்த்துகிறது. அன்னாரை இழந்து தவிக்கும் அவர் தம் குடும்பத்தினருக்கு எமது அனுதாபத்தை தெரிவிப்பதோடு அவரது ஆன்மா என்றென்றும் அம்பாள் அடியில் நித்திய இன்பம் பெற எல்லாம்வல்ல அருள்மிகு அம்பாளை பிரார்த்திக்கிறோம்.

**பரிபாலன சபையினர்
உரும்பிராய் பர்வதவர்த்தனி அம்மன் கோவில்.**

**மரண அறிவித்தல்**

**படைவீரசிங்கம் சேனாதிராசா**
**(ராஜா மெடிக்கல் ஸ்ரோர்ஸ், சுன்னாகம்)**



மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும், விழிசிட்டி தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் கொண்ட படைவீரசிங்கம் சேனாதிராசா (24.09.2017) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.09.2017) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணியளவில் விழிசிட்டி (ஞானவைரவர் அருகில்) தெல்லிப்பழையிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொப்பிலாவுடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

021 205 9700,
075 041 0869

**தகவல்: மனைவி**

**மரண அறிவித்தல்**

**கந்தரத்தினம் காராளசிங்கம்**
*(ஓய்வுபெற்ற ஊழியர் - இலங்கை மின்சாரசபை)*



பிறப்பு 31.12.1937
இறப்பு 24.09.2017

மலேசியாவை பிறப்பிடமாகவும் தொல்புரம் வழக்கம்பரையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தரத்தினம் காராளசிங்கம் நேற்று (24.09.2017) ஞாயிற்றுக் கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தரத்தினம் - சின்னத்தங்கம் தம்பதியரின் புத்திரரும் சிவஞானபூங் கோதையின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கந்தையா - ஜானகி அம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற ஶ்ரீகரன், வசந்தன், வசந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும் பாமினி, தர்மினி, சிறிகாந் (வலி.தென்மேற்கு பிரதேசசபை, பண்டத்தரிப்பு) ஆகியோரின் மாமனும் காலஞ்சென்றவர்களான நடராசா, சரஸ்வதி, சோதிமதி, வன்னியசிங்கம், நாராயண பிள்ளை, விஜயராமன், காந்திமதி (லண்டன்) ஆகியோரின் அன்பு சகோதரரும் பாலச்சந்திரன், காலஞ்சென்றவர்களான ராமச்சந்திரன், வசந்தாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் லோஜினி, கஜினி, சங்கவி, கோபிசன், வேணுகாந், ஜெயகாந் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.09.2017) திங்கட் கிழமை வழக்கம்பரையில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல்தகனக்கிரியைக்காக பி.ப. ஒரு மணியளவில் வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தொல்புரம் கிழக்கு,
வழக்கம்பரை.**

**தகவல்: குடும்பத்தினர்.
077 958 0245, 077 184 4042**

## இருபாலையில் பெருந்திருவிழா

யாழ்ப்பாணம், செப்.25
இருபாலை கிழக்கு கேணிக்கு எம்பதி அருள்மிகு லிங்க விநாயகர் ஆலய வருடாந்தத் திருவிழா இன்று 25 ஆம்திகதி திங்கட்கிழமை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்ப மாகும். தொடர்ந்து 10 தினங்களுக்கு திருவிழா நடைபெறவுள்ளது. எதிர்வரும் 2ஆம் திகதி காலை 9 மணிக்குத் தேர்த் திருவிழாவும், மறுநாள் 3ஆம்திகதி காலை 10.35 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும், பி.ப 4 மணிக்கு கொடியிறக்கமும் நடைபெறும். (ய)



## சிங்களவர் சிலர் இணைந்து ஜெனிவாவில் ஆர்ப்பாட்டம்

ஜெனிவா செப். 25
ஜெனிவா ஐ.நா. மனித உரிமைகள் சபை முன்றிலில் புலம்பெயர் சிங்கள அமைப்புக்களின் ஏற்பாட்டில் நேற்று ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. சுமார் 50 பேர் வரையிலானர்வர்களே இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

ஐ. நா. மனித உரிமைகள் சபையின் 36ஆவது கூட்டத் தொடர் நடைபெற்று வருகின்ற நிலையிலேயே இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

பிரிட்டன், சுவிற்சர்லாந்து, ஜேர்மனி, இத்தாலி உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளில் வாழும் சிங்களவர்கள் சிலர் ஜெனிவா ஐ.நா. மனித உரிமைகள் சபை முன்றிலில் ஒன்றுகூடி ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

"இலங்கையின் நீதித்துறையில் தலையிடாதே, இலங்கையின் இறையாண்மையைப் பாதுகாப்போம், உள்ளகப் பொறிமுறையிலேயே அனைத்தையும் பார்த்துக் கொள்ள முடியும்" உள்ளிட்ட வாசகங்கள் அடங்கிய பதாகைகளைத் தாங்கியவாறு இருந்ததோடு பேரொலியையும் அவர்கள் எழுப்பியிருந்தனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் ஐ.நா மனித உரிமை சபையில் அமர்வு இடம்பெற்றிருக்கவில்லை. தொழில் நிமித்தமே அதிகளவான பெரும்பான்மையின மக்கள் தங்கியிருப்பதால் விடுமுறை தினமான நேற்று ஆயிரக்கணக்கில் ஒன்று கூடுவார்கள் என்ற எதிர்பார்ப்பில் மேற்படி ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது என்று தெரிவிக்கப்பட்டது. (வ-31)

## ராணுவச் சிப்பாய் கஞ்சாவுடன் கைது

வவுனியா, செப். 25
வவுனியா மையப் பேருந்து நிலையத்தில் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் இராணுவச்சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுப் பிற்பகல் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு விடுமுறையில் சென்ற சிப்பாயே கைது செய்யப்பட்டார். அவர் கலேவல பகுதியைச்சேர்ந்தவர்.

அவரிடமிருந்து 347கிராம் கேளரா கஞ்சா கைப்பற்றப்பட்டது. அவர் வவுனியா பொலிஸ் நிலையத்தில் விசாரணையிலுள்ளார்.

நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (4)

## மருதங்கேணி மீனவர்களுக்கு தொழில் உபகரணங்கள்

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலகத்தின் சமூக வலுவூட்டல் வேலைத் திட்டத்தின் கீழ் சமுர்த்தி கருத்திட்டப் பயனாளிகளுக்கு கடந்த வியாழக்கிழமை கடற்றொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டன. பிரதேச செயலக நிர்வாக அலுவலர் பா.மேகவண்ணன், கணக்காளர் க.சுதர்சன், நிர்வாக கிராம அலுவலர் வ.தவராசா, மருதங்கேணி வங்கிச்சங்க கருத்திட்ட முகாமையாளர் ச.ராகவன் ஆகியோர் பயனாளிகளுக்கு மீன்பிடி வலைகளை வழங்கினர்.

(ய-9)



### யாழ்ப்பாணத்தில் கடந்த ஐந்து நாள்கள் இடம்பெற்ற

# வடக்கு மாகாண விவசாயக் கண்காட்சியில் மண்ணற்ற விவசாயத்துக்கு பெரும் வரவேற்பு

யாழ்ப்பாணம், செப்.25
வடக்கு மாகாண விவசாயக் கண்காட்சியில் இடம்பெற்றிருந்த மண்ணற்ற விவசாய முறையானது மக்களிடையே மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது.

வடக்கு மாகாண விவசாயக் கண்காட்சியானது கடந்த 5 (19ஆம் திகதிமுதல் 23வரை) நாள்களாக திருநெல்வேலி விவசாயத் திணைக்கள வளாகத்தில் நடைபெற்றது.

இதில் மக்கள் இலகுவாகப் பயிரிடக் கூடியதும் பராமரிக்கக் கூடியதுமான மண்ணற்ற விவசாய முறைமை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இப்போது வீட்டுத் தோட்டங்களுக்கு அதிகளவான நிலப்பரபுகள் இல்லை. பயிர்களைப் பாதுக்காப்பது கடினம். இதனால் வீட்டுத்தோட்ட முறைமையை மக்கள் கைவிட்டு வருகின்றனர். இதற்கு மாற்று வழியாகச் சிறிய இடத்தில் மண்ணற்ற விவசாயத்தை மேற்கொள்ள முடியும்.

நீரைத் தேக்கிவைக்கக் கூடிய பெட்டியொன்றைத்தயார்செய்யவேண்டும. அந்த நீரில் மண்ணின் போசனைக் கூறுகளை வழங்கக் கூடிய 'அல்பேட் சொலுசன்' என்னும் பதார்த்தத்தை இடவேண்டும். ஒரு லீற்றர் நீருக்கு 5 கிராம்வீதம் அந்தப் பதார்த்தத்தை இட்டு, பெட்டியின் மேற்பரப்பின் அளவுக்கேற்பதுளைகளைப்போடவேண்டும். அதனுள் பசளை மற்றும் தும்புகளையிட்டுசெடிகளை நடவேண்டும். செடியின் வேர்ப்பகுதி நீரினைத் தொடும்படியாக வைக்கப்படவேண்டும். இந்தமுறை மூலம் மிளகாய், செலாட், தக்காளிபோன்றசெடிகளைப் பயிரிடமுடியும். இதற்குக் குறைந்தளவு நிலப்பரப்பே தேவைப்படும். அதனால் இவற்றை இலகுவாகப்பாதுகாக்க முடியும். அத்துடன் வீட்டுக்கு இது அழகான தோற்றத்தையும் கொடுக்கின்றது. இதனால் இந்த மண்ணற்ற விவசாய முறைமையை அதிகமானோர் பார்வையிட்டுவிளக்கங்களை பெற்றனர். இந்தமுறைமூலம்எமக்குத் தேவையான மரக்கறி வகைகளை இலகுவாக உற்பத்தி செய்யமுடியும் என்று திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ய-ரி)



### பிரதேச,நகர சபைகளில்

## நாடாளுமன்ற உறுப்பினர்களுக்காக தவம் கிடக்கின்றன உதவிப் பொருள்கள்

### பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் கொள்வனவு செய்யப்பட்டவை என சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், செப்.25
பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பொருள்கள் உரிய பொதுஅமைப்புக்கள், சனசமூக நிலையங்களுக்கு வழங்கப்படாது பிரதேச சபைகள், நகரசபைகளில் பல மாதங்களாக தவம் கிடக்கின்றன என தெரிவிக்கப்பட்டது. மேலும் தெரிவிக்கப்பட்டதாவது;
நாடாளுமன்ற உறுப்பினர்களின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் பிரதேச சபைகளினால் சம்பந்தப்பட்ட சனசமூக நிலையங்களுக்கும் பொது அமைப்புக்களுக்கும் வழங்குதற்கெனக் கொள்வனவு செய்யப்பட்ட தளபாடங்கள், விளையாட்டு உபகரணங்களே நாடாளுமன்ற உறுப்பினர்களின் கைகளினால் வழங்கப்படுவதற்காக தவம் கிடப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே நிதி ஒதுக்கீட்டை மேற்கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொள்வனவு செய்யப்பட்ட தளபாடங்களை உரியகாலங்களில் வழங்குவதன் ஊடாக முழுமையான பயன்பாட்டுக்கு உதவுவதுடன் அதனை சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு வழங்கிய ஏதுநிலை சபைகளுக்கு ஏற்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (21-50)

## டிவகலாலாவுக்கு பவளவிழா

யாழ்ப்பாணம், செப்.25
வடக்கு, கிழக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் முன்னாள் செயலாளரும் ஆறுதல் நிறுவனத்தின் தலைமை நிறைவேற்று அதிகாரியுமான சுந்தரம் டிவகலாலாவின் பவள விழா எதிர்வரும் 5ஆம்திகதி காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் தலைமையுரையை ந.அனந்தராஜ்சும், சிறப்புரையை யாழ்ப்பாண பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் சு.மோகனதாசும் நிகழ்த்தவுள்ளனர். (ய)

## யாழ். காணி இணக்க சபை ஆரம்பமாவதில் காலதாமதம்

யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கான காணி சம்பந்தமான சிறப்பு இணக்க சபை இன்னமும் ஆரம்பமாகவில்லை. இந்தச் சிறப்பு இணக்கசபை கடந்த16ஆம் திகதிமுதல் ஆரம்பமாகும் என எதிர்பார்க்கப்பட்டதுஎனத்தெரிவிக்கப்பட்டது.
ஆசியா பவுண்டேசன் நிறுவனம்காணிசம்பந்தமானசிறப்பு இணக்க சபையை உருவாக்குவதற்கான நிதிபங்களிப்பை புடன், கற்றுக்கொண்டபாடங்கள் மற்றும்நல்லிணக்க ஆணைக் குழுவின் சிபார்சின் அடிப்படையின் கடந்த 2015இல் சபைக்கானஆட்சேர்ப்புஇடம்பெற்றது. இதற்கென27சிறப்புஉத்தியோகத்தர்கள் உள்வாங்கப்பட்டுள்ளனர். மாவட்ட மட்டத்தில் 15 பிரதேச செயலர் பிரிவுகள் 17 உள்ளூராட்சி சபைகள் (மாநகரசபை, நகரசபை, பிரதேசசபை) ஊடாக காணிப்பிணக்குகளை சிறப்புக்காணிஇணக்கசபைக்கு வழங்கத் தயாராக உள்ளன. எனினும், நீதி அமைச்சும், காணி இணக்க சபை ஆணைக்குழுவும்இதற்கானஆவணங்களைத், தயார்ப்படுத்திக் கொள்வதில் தாமதம் ஏற்படுகின்றது. இதனால் இணக்கசபையைஆரம்பிப்பதில் மேலும்காலதாமதம்ஏற்படுகிறது எனஅந்தச்சபையின்ஆணைக் குழுவின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (ய-50)

# நாகவிகாரை விடுதியின் கழிவுகள் வடிகாலில் கலப்பதாக குற்றச்சாட்டு

### மாநகரசபை பாராமுகம் எனவும் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.25
யாழ்ப்பாணம் நாகவிகாரை ஓய்வுவிடுதியின் கழிவுகள் நீர் வடிகாலில் கலக்கின்றன. இதனைத் தடுப்பதற்கு இன்றுவரை யாழ்ப்பாண மாநகரசபை நடவடிக்கை எடுக்கவில்லை எனப் பொதுமக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.
இதுதொடர்பாக பொதுமக்கள் தெரிவித்ததாவது:
நாகவிகாரை ஓய்வுவிடுதியின் கழிவுகள் நீர் வடிகாலில் கலப்பதனை வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே நேரில் கண்டார். அவர் அதிர்ச்சி அடைந்தார். சட்டத்தை அமுல் செய்யவேண்டிய மாநகரசபையினரையும் கண்டித்திருந்தார்.
யாழ்ப்பாணம் ஆரியகுளம் மற்றும் அந்தக் குளத்திலிருந்து கடலுக்குச் செல்லும் வடிகால் அண்மையில் ஆளுநரின் ஏற்பாட்டில் சுத்தம் செய்யப்பட்டது. இதன்போது அவர் நீர்வெளியேறும் வாய்க்காலைப் பார்வையிட்டார். கழிவுகள் தேங்கிக் கிடப்பதோடு அதிக துர்நாற்றம் வீசுவது தொடர்பில் அவர் கேள்வி எழுப்பியிருந்தார்.
இதன்போது குறித்த கழிவுநீர் ஆரியகுளம் நாகவிகாரை ஓய்வு விடுதியில் இருந்து மதில் உடைக்கப்பட்டு வாய்க்காலுக்குள் திருப்பப்பட்டுள்ளதை நேரில் கண்டார்.
இதனை பல முறை சுட்டிக்காட்டியும் எவரும் நடவடிக்கை எடுக்கவில்லை என சுட்டிக்காட்டப்பட்டது.
இதுவே சாதாரண ஒரு பொதுமகன் செய்திருப்பின் மாநகரசபை லட்சக் கணக்கில் குற்றப்பணம் அறவிட்டிருக்கும். எனவே, இதனை ஆளுநரே சீர் செய்ய வேண்டும் என மக்கள் கோரினர். இதனையடுத்து மாநகர சபை உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் உத்தரவிட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.
இதுதொடர்பாக யாழ்ப்பான மாநகரசபை ஆணையாளரை தொடர்புகொண்டு கேட்ட போது:
நாகவிகாரை ஓய்வு விடுதியின் கழிவுகள் நீர் வடிகாலில் கலப்பதைத் தடுக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கபட்டு வருகின்றன. எமது சபைக்கு உட்பட்ட அனைத்து வடிகால்களையும் சுகாதார பரிசோதகர்கள் ஊடகக் கண்காணித்து வருகின்றோம். அந்த வகையில் இது தொடர்பாகவும் உரிய நடவடிக்கை எடுத்து வருகின்றோம் ஏன்றார். (ய-8)

## காரைநகர் கிணறுகளில் கடற்படையினர் நீர் எடுப்பதைத் தடுக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், செப்.25
காரைநகர் மற்றும் வேலணைப் பிரதேசத்தில் உள்ள கிணறுகளில் கடற்படையினர் குடிநீர் எடுத்துச் செல்வதைத் தடுக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
இதுதொடர்பில் அந்தப் பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் தெரிவித்ததாவது:
இந்தப் பிரதேசங்களில் இருக்கின்ற பொதுக்கிணறுகளில் கடற்படையினர் நாளாந்தம் அதிகளவான குடிதண்ணீரை எடுத்துச் செல்கின்றனர்.
இதனால் அப்பகுதியின் நீர்வளம் பாதிக்கப்படுகிறது. பொதுமக்களுக்கான குடிதண்ணீரைப் பெற்றுக்கொள்வதிலும் பாரிய சவால்கள் ஏற்பட்டுள்ளன. இதுதொடர்பில் கூட்டங்களில் கதைக்கப்படுகின்ற போதிலும் இன்றுவரை அதற்கான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.
தனியார் மற்றும் பொதுக்கிணறுகளில் கடற்படையினர் நாளாந்தம் நீர் எடுப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. பாவனைக்கு உகந்த கிணறுகளைத் துப்பரவு செய்து மக்களுக்குத் தேவையான குடிதண்ணீரை வழங்குவதற்குப் பிரதேசசபை நடவடிக்கை எடுக்கவேண்டும். அந்தந்தப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களிலும் இப்பிரச்சினை கதைக்கப்பட்டு தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.
ஆனால் இன்றுவரை கடற்படையினர் பொதுமக்களின் கிணறுகளில் நாளாந்தம் பவுசர்களில் குடிதண்ணீரை எடுத்துச் செல்கின்றனர்.
எனவே, எமது நீர்வளத்தைப் பாதுகாக்க மக்கள் பிரதிநிதிகளும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் துணிந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர். (ய-8)

# இளையோரை ஒன்றிணைக்கும் வகையில் கலாசார நிலையங்கள் விளங்கவேண்டும்

## யாழ். மாவட்டச்செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.25
வடக்கு மாகாணத்தில் இளையோரை ஒன்றிணைக்கும் சிறந்த களமாக கலாசார நிலையங்கள் விளங்கவேண்டும் என்று யாழ்ப்பாணமாவட்டச்செயலாளர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண பண்பாட்டுப் பெருவிழாவின் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இளைஞர்கள் ஓய்வுநேரத்தைப்பயனுள்ளதாககழிக்க வேண்டும்.

ஓய்வான நேரத்தில் என்ன செய்யலாம் என்று சிந்திக்கும் போதுதான் சில சமயங்களில் சில சம்பவங்களை இளைஞர்கள் எதிர்நோக்குகின்றனர். அவர்களுக்குப் புதிய விடயங்களைஅறிந்துகொள்வதில் ஆர்வம் இருக்கிறது.

ஆகவே எமது பண்பாடு கலாசாரம் சார்ந்த விடயங்களை அவர்களுக்குத் தெரியப்படுத்தவேண்டும். அவர்கள் அதனைப்பற்றிக்கொள்வார்கள்.

இதற்குக் கலாசாரம் சார்ந்த நிலையங்கள் முன்வர வேண்டும். இவ்வாறு ஒரு நிகழ்வு நடத்தப்படுவதன் மூலம் எமது கலாசாரம் இன்னமும் பாதுகாக்கப்படுகின்றது. மக்களை ஒன்றிணைக்கும் செயல்ப்பாடாகவும் இது அமையும்.

அத்துடன் பல்வேறு இன்னல்களை எதிர்நோக்கி மீளக்குடியமர்த்தப்பட்ட மக்களைஒன்றிணைக்கும் செயல்பாடாகவும் இது அமையும் என்றார். (ய-ரி)

# பனம் பழம், விதைக்கு எகிறுகிறது மவுசு

## ஒருபழம் ரூ.5 க்கும், விதை ரூ.1க்கும் பனை அபிவிருத்தி சபை கொள்வனவு



யாழ்ப்பாணம், செப்.25
பனை அபிவிருத்தி சபையினால் பனம்பழங்கள் மற்றும் பனம் விதைகள் கொள்வனவு செய்யப்படுகின்றன.

தரமான பனம்பழம் 5 ரூபாவாகவும், பனம் விதை ஒரு ரூபாவாகவும் கொள்வனவு செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக பனை அபிவிருத்திச்சபையின் விரிவாக்கல் திட்ட முகாமையாளர் கா.கோபாலகிருஸ்ணன் தெரிவித்ததாவது:

வலந்தலைச்சந்தி காரைநகரில் அமைந்துள்ள பனம்சார் பல்தொகுப்பு நிலையத்திலும், சிங்கை நகர் புலோலியில் அமைந்துள்ள பனைசார் உற்பத்தி நிலையத்திலும் இவை கொள்வனவு செய்யப்படும்.

மக்கள் 07732243022 மற்றும் 0776907125 ஆகிய கைபேசி எண் ஊடாகத் தொடர்புகொண்டு பனம்பழம், பனம்விதைகளை வழங்கமுடியும்.

பனம்சார் உற்பத்திப் பொருள்கள் தற்போது நாடுமுழுவதும் பரவி வருகின்றன. பனம்சார் உற்பத்திப் பொருள்களால் பல குடும்பங்கள் தங்கள் வாழ்வாதாரத்தைப் பெருக்கிக் கொள்கின்றன. இதன் ஊக்குவிப்பாக பனம் பழம், பனம்விதை என்பவற்றைக் கொள்வனவு செய்ய பனை அபிவிருத்திச் சபை முன்வந்துள்ளது.

இதனடிப்படையில் நேற்று முன்தினம் முதல் கொள்வனவு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கொள்வனவு செய்யப்படும் பனம் பழத்தின் மூலம் பனம்களி செய்யப்படவுள்ளது.

பனம்விதை மூலம் பனம் பாத்தி போடப்படவுள்ளது. பனை வளத்தை சார்ந்துள்ள குடும்பங்களின் வாழ்வாதாரத்தை அதிகரிக்கச் செய்வதே இதன் நோக்கமாகும். மக்கள் இதனைச் சாதகமாகப் பயன்படுத்தி நன்மையடையவேண்டும் என்றார். (யு-10)

# கேப்பாப்பிலவில் படையினர் வெளியேறுகின்றனர்

## மாவட்டச் செயலாளர் தகவல்

முல்லைத்தீவு, செப்.25
முல்லைத்தீவு கேப்பாப்பிலவில் படையினர் வசமுள்ள மிகுதிக் காணிகளையும் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அந்தக் காணிகளில் இருந்து படையினர் வெளியேறி வருகின்றனர். பின்னர் அக்காணிகளை மாவட்டச் செயலகம் பொறுப்பேற்கும் என முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் ரூபாவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

கேப்பாப்பிலவு மக்கள் தங்களுடைய காணிகளை விடுவிக்குமாறு கோரி இன்று (நேற்று) 208ஆவது நாளாக போராட்டம் நடத்தி வருகின்றார்கள். அவர்களுடைய போராட்டத்தை அடுத்து கேப்பாபிலவு இராணுவ முகாம்களிலிருந்து படையினர் தற்போது வெளியேறிவருகின்றனர்.

இதற்கமைய 111 ஏக்கர் மக்களுடைய காணிகள் விடு விக்கப்படவுள்ளன. 64பேருக்குச் சொந்தமான காணிகளே இவ்வாறு விடுவிக்கப்படவுள்ளன.

முகாம்களிலிருந்து படையினர் முழுமையாக வெளியேறியதன் பின்னர் அக்காணிகளை மாவட்டச் செயலகம் உத்தியோகபூர்வமாகப் பொறுப்பேற்கும் என்றார்.

இதேவேளை, படையினர் வசமுள்ள காணிகளின் உரிமையாளர்களை இனம்கண்டு அவர்களின் இருப்பை உறுதிப்படுத்தும் நடவடிக்கையும் மாவட்டச் செயலகத்தால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என மக்கள் தெரிவித்துள்ளார்கள். (ய)




# வவுனியா வெளிக்கள அதிகாரிகள் பற்றி முறையிடுவதற்கு தொலைபேசி இலக்கம்

வவுனியா, செப்.25
வவுனியா பிரதேச செயலகத்துக்குட்பட்ட திணைக்களங்களில் பணியாற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்கள் தொடர்பாக தொலைபேசி ஊடாக முறைப்பாடு செய்யமுடியும் என வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராசா தெரிவித்தார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

வெளிக்கள உத்தியோகத்தர்கள் தமக்கு வழங்கப்பட்ட பணிகளை மேற்கொள்ளவதில்லை. வெளிக்களப்பணிகள் என மேலதிகாரிகளிடம் தெரிவித்துவிட்டு வேறு தொழில்கள் புரிந்து வருகின்றனர் என முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

பொதுமக்களுக்கு சேவைபுரிவதற்கே இவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ளன. எனவே, இதுதொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மக்கள் இந்த அதிகாரிகள் தொடர்பாக 0242222202 அல்லது 024 2222236 என்ற கைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு தயக்கமின்றி முறைப்பாடு செய்யலாம். எழுத்துமூல முறைப்பாடு களை பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள முறைப்பாட்டுப் பெட்டியில் போடமுடியும் என்றார். (ய)

# பனைமட்டைக்குள் இருந்த பாம்பு தீண்டியதில் விவசாயி மருத்துவமனையில்

யாழ்ப்பாணம், செப்.25
பனை மட்டைக்குள் மறைந்திருந்த விசப்பாம்பினால் தீண்டப்பட்ட விவசாயி ஒருவர் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று பளை செந்தில் நகரில் இடம்பெற்றது.

இவர் தோட்டம் செய்வதற்காக மண்ணைப் பண்படுத்தியுள்ளார்.

அங்கே காணப்பட்ட பனை மட்டையை எடுத்தபோது அதிலிருந்து பாம்பு தீண்டியுள்ளது. பாம்பினால் தீண்டப்பட்ட நிலையில் பளை மருத்துவமனையில் அவர் சேர்க்கப்பட்டார். பின்னர் அங்கிருந்து நோயாளர் காவுவண்டி மூலம் சாவகச்சேரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். செல்லையா செல்வநாயகம் (வயது-52) என்பவரே இவ்வாறு அனுமதிக்கப்பட்டுள்ளார். (ய-9)

# தரம்குறைந்த அரிசி விற்பனை வர்த்தகருக்கு ரூபா 5000 தண்டம்

கிளிநொச்சி, செப்.25
தரம் குறைந்த அரிசியை விற்பனை செய்ய வைத்திருந்த வர்த்தக நிலைய உரிமையாளர் ஒருவருக்கு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதி மன்று 5 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது. எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது.

கிளிநொச்சி பகுதியின் வர்த்தக நிலைய உரிமையாளர் ஒருவருக்கே இந்த தண்டம் விதிக்கப்பட்டது.

நுகர்வோர் அதிகாரசபையினரால் இவர் வெள்ளிக்கிழமை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அவர் குறறத்தை ஒப்புக்கொண்டார். அவருக்கு 5000 ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

இனிமேல் இவ்வாறான தரக்குறைவான பொருள்களை விற்பனை செய்யக்கூடாது என எச்சரிக்கையும் செய்யப்பட்டு அவர் விடுக்கப்பட்டார். (ய-6)



## வவுனியா ரயில் நிலையத்தை பயணிகள் முற்றுகை

வவுனியா, செப்.25

வவுனியா தொடருந்து நிலையத்தினை நேற்று முன்தின் மாலை 5.45மணியளவில் பயணிகள் முற்றுகையிட்டமையினால் பொலிஸார் குவிக்கப்பட்ட னர்.

இவ்விடயம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது: கொழும்பு புறக்கோட்டையிலிருந்து காலை 5.45 மணிக்கு கே.கே.எஸ் நோக்கிப் புறப்பட்ட தொடருந்து பொல்காவலை பகுதியில் தடம்புரண்டது.

சுமார் இரண்டு மணிநேரம் கழித்து பொல்காவலைப் பகுதியிலிருந்து பயணிகள் இ.போ.ச பேருந்து மூலம் வேறோறு தொடருந்து நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு நின்ற தொடருந்து ஒன்றில் ஏற்றிவிடப்பட்டனர்.

அந்தத் தொடருந்து மாலை 5.45மணியளவில் வவுனியா வந்தடைந்தது . வவுனியா தொடருந்து நிலைய நிர்வாகி இதற்கு மேல் தொடருந்து கே.கே.எஸ் நோக்கிப் பயணிக்காது எனத் தெரிவித்தார். இதனால் ஆத்தரமடைந்த பயணிகள் நிலையத்தினை முற்றுகையிட்டனர். தொடருந்து நிலைய தொடருந்து நிலைய பணிப்பாளர்களுடன் முறன்பட்டனர். இதனையடுத்து சம்பவ இடத்துக்கு வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி வந்தார். நிர்வாகியிடம் சுமார் 10நிமிடத்துக்கு மேல் கலந்துரையாடினார். தொடருந்து நிலையத்தில் பொலிஸார் குவிக்கப்பட்டனர்.

பின்னர் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த தொடருந்து மாலை 6.45மணியளவில் வவுனியாவை வந்தடைந்தது. அது யாழ்ப்பாணம் நோக்கி புறப்படும்போது அந்தப் பயணிகளை ஏற்றிச் சென்றது. சுமார் ஒரு மணிநேரத்துக்கு மேல் வவுனியா தொடருந்து நிலையத்தில் பாரிய பதற்ற நிலை காணப்பட்டது. (ய)

# பயன்படாத நிலையில் நெடுங்கேணி பஸ் நிலையம்

### பொதுமக்கள், வியாபாரிகள் சிரமம்



கடைத் தொகுதி

பேருந்து நிலையம்

வவுனியா, செப்.25

வவுனியா நெடுங்கேணியில் பல மில்லியன் ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்ட பேருந்து நிலையம் பாவனை அற்றநிலையில் தற்போது சீரழிந்து செல்லும் நிலையில் உள்ளது. இதனால் குறித்த பேருந்து நிலையத்தை நம்பி அப்பகுதியில் அமைக்கப்பட்ட கடைத் தொகுதிகளைக் கொள்வனவு செய்த வியாபாரிகள் பெரும் சிரமத்துக்கு உள்ளாகியுள்ளனர் என தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது;

2010ஆம் ஆண்டு மீள்குடியமர்வுக்குப் பின்னரான காலப்பகுதியில் இந்தப் பேருந்து நிலையம் அமைக்கப்பட்டது. பல மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்ட்ட பேருந்து நிலையத்தில் போக்குவரத்து வசதிகளும், தங்குமிட வசதிகளும், 15இற்கும் மேற்பட்ட கடைத் தொகுதிகளும் அமைத்துக்கொடுக்கப்பட்டன.

இந்தக் கட்டடம் அமைத்த காலத்தில் கடைத்தொகுதிகளைப் போட்டி போட்டு வியாபாரிகள் குத்தகைக்கு எடுத்திருந்தனர். ஆனால் கடைகளை ஒழுங்காக திறந்து நடத்திய வரலாறே இல்லை. பேருந்து நிலையத்தில் உள்ள ஏனைய கடைகளை நடத்துவதற்கும் யாரும் முன்வருவது கிடையாது. குறித்த பேருந்துநிலையத்துக்குப் பேருந்துகள் வந்து செல்லாமை, போதியளவு மக்களின் பயன்பாடு இல்லாமை போன்ற காரணங்களாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளது. பேருந்து நிலையம் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டதா என்ற கேள்வி எழுகிறது. இ.போ.ச பேருந்துகள் அறவே வந்து செல்வதில்லை. தனியார் பேருந்துகள் ஒரு சில வந்து செல்கின்றன. இந்தப் பேருந்து நிலையம் தொடர்பாக மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டங்களிலும் சரி ஏனைய அபிவிருத்தி சம்பந்தமான கூட்டங்களிலும் சரி கதைக்கப்படுகின்றதே தவிர அதற்குரிய செயற்பாடுகளில் முன்னேற்றம் காணப்படுவதாகத் தெரியவில்லை. மைய பேருந்து நிலையத்தை மையப்படுத்தி பொதுச்சந்தையும் அதன் அருகில் அமைக்கப்பட்டுள்ளது.

விவசாயப் பிரதேசமான வவுனியாவில் விவசாய உற்பத்திப் பொருள்களைச் சந்தைப்படுத்துவதற்கு இலகு தன்மை கருதியும் அமைக்கப்பட்டதாகும். எனவே அரச, தனியார் பேருந்துகள் நெடுங்கேணி மைய பேருந்து நிலையத்துக்குள் வந்து தரித்து செல்வதற்கும் இப் பேருந்து நிலையத்தினை நடத்தி செல்வதற்கும் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரப்படுகிறது. (21)

## கிளி, பனை, தென்னை வள சங்கத்தின் தலைவராக மீண்டும் மதனரூபன் தெரிவு

கிளிநொச்சி, செப்.25

கிளிநொச்சி பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராக மீண்டும் கனகையா மதனரூபன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

சங்கத்தின் புதிய் நிர்வாகசபைத் தெரிவுக்கான கூட்டம் நேற்றுமுன்தினம் கிளிநொச்சியில் நடைபெற்றது. கரடிப்போக்கில் அமைந்துள்ள சங்கத்தின் முதன் மை தலைமைக் காரியாலயத்தில் காலை 11 மணிக்கு கூட்டம் நடைபெற்றது.



முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் சுபசிங்க கூட்டத்துக்குத் தலைமை தாங்கினார்.

உபதலைவராக துள்ளுக்குட்டி அருளேஸ்வரனும், செயலாளராக பெனடிக் மனோகரனும், பணிப்பாளர்களாக பெ.யூட்கமலதாஸ், ம.நந்தகுமார், செ.செல்வக்குமார், க.ரஞ்சித்குமார், செ.சுபேந்திரன் மற்றும் ஜெ.நிலோஜினி ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (ய-35)

# வவுனியா பாடசாலைகளில் சொற்கணை விவாதப்போட்டி



வவுனியா, செப்.23

மொரட்டுவ பல்கலைக்கழக தமிழ்மன்றம் வவுனியாவில் உள்ள பாடசாலைகளுக்கிடையில் 'சொற்கணை' விவாதப்போட்டிகளை நடத்தியது.

போட்டியில் பங்குகொண்ட பாடசாலைகளில் வவுனியா தமிழ் மகாவித்தியாலயம், இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி, வவுனியா இந்துக்கல்லூரி, பண்டாரிகுளம் விபுலானந்தாக்கல்லூரி என்பன அரையிறுதிப்போட்டிக்கு தெரிவாகின.

இறுதிப்போட்டியில் தமிழ் மகாவித்தியாலயத்தை எதிர்த்து விபுலானந்தாக்கல்லூரி மாணவர்கள் விவாதம் நடத்தினர். .இதில் தமிழ் மகாவித்தியாலயம் வெற்றிபெற்று முதலாம் இடத்தைத் தட்டிச்சென்றது.

இரண்டாம், மூன்றாம் இடங்களை முறையே இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி, விபுலானந்தாக் கல்லூரி என்பன பெற்றுக்கொண்டன.

இதில் தலைமை நடுவராக வவுனியா தெற்கு கல்விவலய உதவிக்கல்விப்பணிப்பாளர் கவிச்சிகரம் கி.உதயகுமார் கலந்து கொண்டார். ஏனைய நடுவர்களாக ஆசிரிய ஆலோசகர் திருமதி த.நிறைமதி, மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் இன்தமிழ் இனியன் எஸ்.எஸ்.வாஸன், ஆசிரியர்கள் திருமதி லதா, திருமதி சிவா, பிரதீஸ் ஆகியோரும் கடமையாற்றினர் .இப்போட்டி மாவட்ட ரீதியில் கடந்த பல வருடங்களாக நடைபெற்று வருகின்றது.

முதலாம் இடத்தைப்பெறும் அணிகளுக்கிடையிலான இறுதிப்போட்டி மொரட்டுவ பல்கலைக்கழக தமிழ்மன்றத்தில் இடம் பெற்று சிறந்த அணி தெரிவுசெய்யப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (ய)



பசறைப் பகுதியின் ஆக்கரத்தன்ன தோட்டத் தொழிலாளர்கள் நேற்று இரண்டாவது நாளாகவும் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். தொழிலாளர்கள் இருவரைக் கைது செய்தமையை ஆட்சேபித்தும் , தோட்டக் காணியை வெளியாருக்கு வழங்குவதை எதிர்த்தும் அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். தாம் கொய்த தேயிலைக் கொழுந்துகள், சேகரிக்கப்பட்ட இறப்பர் பால் தட்டுக்களை வைத்துப் போராட்டத்தில் ஈடுபட்டனர். (ஜ-10-41)

### காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம்

# தமிழ் அரசியல்வாதிகள் தொடர்ந்தும் மௌனம்

## போராட்டத்தில் ஈடுபட்டுள்ள உறவினர்கள் விசனம்

யாழ்ப்பாணம்,செப்.25

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான விடயங்களைக் கையாள, தமிழ் அரசியல்வாதிகள் தொடர்ந்தும் மௌனத்தில் உள்ளனர். மக்கள் பிரதிநிதிகளான அவர்களே இவ்வாறு புறந்தள்ளினால், இந்த விவகாரத்துக்கு யார் தீர்வு பெற்றுத் தருவர்.

இவ்வாறு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விவரங்களை வெளிப்படுத்தக் கோரி வடக்குக் கிழக்கு மாகாணங்களில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள உறவினர்கள் விசனம் தெரிவித்தனர்.



அவர்கள் தெரிவித்ததாவது:

காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவினர்களின் விவரங்களை, அல்லது அவர்களுக்கு என்ன நடந்தது என்ற விவரத்தைக் கூறுமாறு கோரி நாங்கள் தொடர் போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றோம். வெளிநாடுகளின் பிரதிநிதிகள் உட்பட இங்குள்ள அரசியல்வாதிகளும் எம்மிடம் நேரடியாக வந்து பிரச்சினைகளைக் கேட்டறிந்தனர். உண்மை விவரங்களை அவர்களிடம் கூறினோம். அவர்கள் அந்த விவரங்களைப் பதிவுகளாக எடுத்துச் சென்றனர்.

அரசிடம் கூறி எமக்குத் தீர்வு பெற்றுத் தருவதாக உறுதி அளித்தனர். எவரும் எமக்காகக் கதைப்பதாகத் தெரியவில்லை. தமிழ் அரசியல் வாதிகள் எமக்காகக் குரல் கொடுக்க வேண்டும். அரசுக்கு அழுத்தம் கொடுத்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் நிலைமைகளை உலகுக்கு வெளிப்படுத்த வேண்டும்.

பலாத்காரமாகக் காணாமல் ஆக்கப்படுவதிலிருந்து அனைவரையும் பாதுகாப்பது சம்பந்தமாக இலங்கையால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பன்னாட்டு உடன்படிக்கை எதிர்காலத்துக்கு மட்டுமே செல்லுபடியானது. அது இறந்த காலத்துக்கானதல்ல. இந்த வருடம் ஒக்ரோபர் மாதத்தின் பின்னரே அது செல்லுபடியாகும் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார். தலைமை அமைச்சரின் இந்தக் கருத்து எமக்கு அதிர்ச்சியையும், ஏமாற்றத்தையும் தந்துள்ளது.

போர்க்காலத்திலும், போர் நிறைவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னரும் ஓரிரு ஆண்டுகளிலும் காணாமல் ஆக்கப்பட்டவர்களே இலங்கையில் உள்ளனர். எமது உறவுகள் எந்தக் காலப்பகுதியில் காணாமல் ஆக்கப்பட்டார்களோ அந்தக் காலத்துக்கு இந்தச் சட்டம் செல்லுபடியாகாது என்றால், காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளின் நிலை என்ன?, அவர்களுக்கான நீதி எப்படிக் கிடைக்கும்?.

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதி, நியாயம் கிடைக்க வேண்டும் என்றால், அது கடந்த காலத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கானதாகத்தான் இருக்க வேண்டும். தலைமை அமைச்சரின் கருத்துக்குத் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் இதுவரை வாய்திறக்காது இருக்கின்றனர்.

இந்த விடயத்தில் தமிழ் அரசியல்வாதிகளின் தலையீடு அவசியம். உரிய தீர்வைப் பெற்றுக் கொடுக்கப் பன்னாடுகளுடன் இணைந்து அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். இல்லையெனில் எத்தனை வருடங்கள் கடந்தாலும் காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் கிடப்பில் போடப்பட்டதாக இருக்கும். எமது உறவுகளுக்காக வீதியில் காத்திருந்து நாம் சிந்திய கண்ணீருக்குப் பயன் கிடைக்காது. நாம் இந்த அரசின் காலத்திலும் ஏமாற்றப்பட்டவர்களாகவே இருக்கின்றோம் என்றனர். (ஐ)

## இரு மொழித் தேர்ச்சி சகலருக்கும் அவசியம்

### ரணவிரு சேவா அதிகார சபையின் மட்டு. அலுவலர் தெரிவிப்பு

மட்டக்களப்பு, செப். 25

தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிகளினதும் தேர்ச்சி சகலருக்கும் அவசியம் தேவை. அன்றாட வாழ்வுக்கு அது நன்மை தரும் என்று ரணவிரு சேவா அதிகார சபையின் மட்டக்களப்பு மாவட்ட அலுவலர் ரீ.எச். கீர்த்திகா ஜயவர்தன தெரிவித்தார். மட்டக்களப்பு மாவட்டச் சிவில் பிரஜைகள் சபையினால் 80 பேருக்கு இலவசமாக சிங்கள மொழிக் கல்வி வகுப்பு நேற்று ஆரம்பிக்கப்பட்டது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

அரச உத்தியோகமாக இருந்தாலும் அல்லது சாதாரணமாக ஒரு சுற்றுப் பயணம் செய்வதாக இருந்தாலும், பேருந்தில் பயணிப்பதாக இருந்தாலும் இரு மொழிகளிலும் தேர்ச்சி உடையவர் அடுத்தவரை நாடத் தேவையில்லை.

மொழிகளுக்கு இடையில் எழும் முரண்பாடுகளைத் தவிர்த்து, உண்மையான புரிந்துணர்வையும், உதவும் மனப்பான்மையையும், சகவாழ்வையும் சமாதானத்தையும் மொழியூடாக ஏற்படுத்த வேண்டும். மட்டக்களப்பில் தமிழ் பேசும் சமூகத்தவர்கள் சிங்கள மொழி கற்றுக் கொள்ளும் ஆர்வத்தைக் கொண்டிருப்பதையிட்டு நான் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றேன்- என்றார். (ஜ-10-46)

## மட்டு. அகிம்சா நிறுவனத்தால் உதவித்திட்டங்கள் வழங்கல்

மட்டக்களப்பு. செப். 25

மட்டக்களப்பு அகிம்சா சமூக நிறுவனத்தால் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு நேற்று உதவித்திட்டங்கள் வழங்கப்பட்டன.



நிறுவனத்தினூடாக மண்டூர், தேற்றாத்தீவுக் கிராமங்களில் தெரிவு செய்யப்பட்ட இரு மாணவிகளுக்குக் கற்றல் உதவிக்காக, தலா 12ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலைகளும், முனைக்காடு கிராமத்தைச் சேர்ந்த குடும்பத் தலைவி ஒருவருக்கு வாழ்வாதாரத்துக்கு மேம்படுத்தும் பொருட்டு கடை அமைப்பதற்கு 33 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலையும் வழங்கப்பட்டன.

மட்டக்களப்பிலுள்ள அகிம்சா நிறுவனத்தின் காரியாலயத்தில் வைத்து உதவித்திட்டங்கள் வழங்கப்பட்டன.

"மட்டக்களப்பு மாவட்டத்தில் மிகவும் கஷ்ர நிலையில் உள்ள ஆயிரம் மாணவர்களின் கற்றலுக்கு உதவிகளைச் செய்யத் திட்டமிட்டுள்ளோம். புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் வாழ்ந்து வரும் எமது உறவுகள் வழங்கி வரும் உதவிகளைப் பெற்றே, நாம் இங்குள்ள மக்களுக்கு உதவிகளை மேற்கொண்டு வருகின்றோம். இந்த உதவிகளைப் பெறுபவர்கள் அவற்றைச் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்" என்று நிறுவனத்தின் ஆலோசகர் த.வசந்தராசா தெரிவித்தார். (ஜ-10-46)

## பயணிகளிடம் பணம் பறித்துவந்த கில்லாடியை மடக்கியது பொலிஸ்

கொழும்பு,செப்.25

சொகுசுப் பேருந்துகளில் போலியான பயணச் சிட்டைகளைப் பயணிகளுக்கு வழங்கி, பண மோசடி செய்து வந்த நபர் பதுளைப் பேருந்து நிலையத்தில் வைத்து நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டார்.

பேருந்து நடத்துநர் எனத் தன்னை அறிமுகப்படுத்தி, தனியார் சொகுசுப் பேருந்துகளில் பயணிகளுக்குப் போலியான பயணச் சிட்டைகளைக் கொடுத்து, பணம் பெற்று வந்துள்ளார்.

உண்மையான பேருந்து நடத்துநர் பயணச்சிட்டைகளை வழங்கும் முன்பு, அவர் அந்தப் பேருந்தில் ஏறி பயணச்சிட்டைகளை வழங்கி பணத்தைப் பெற்றுக் கொண்டு தலைமறைவாகி விடுவார் எனத் தெரிவிக்கப்பட்டது.

நடத்துநரில் சந்தேகம் கொண்ட பயணிகள் பதுளைப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர். அங்கு விரைந்த பொலிஸார் சந்தேகநபர் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டனர். பொலிஸாரைக் கண்டதும் சந்தேகநபர் முச்சக்கர வண்டியில் ஏறித் தப்பிச் செல்ல முயன்றார்.

அவரைத் துரத்திப் பிடித்த பொலிஸார், போலிப் பயணச் சிட்டைகள் மற்றும் 36 ஆயிரம் ரூபா பணத்தை மீட்டனர். சந்தேகநபரையும் கைது செய்தனர்.

விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஜ-10-41)

## சடலம் மீட்பு

கிளிநொச்சி, செப். 25

கிளிநொச்சி நகர்ப்பகுதியில் ஆணொருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டது.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலை அடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டனர்.

நகரின் பாழடைந்த கட்டடத்துக்குள் சடலம் காணப்பட்டது. அந்தப் பகுதியில் நச்சு மருந்து மணம் வீசியது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் கிளிநொச்சி மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உயிரிழந்த நபர் அடையாளம் காணப்படவில்லை. மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-10-35)

## கட்டுப்பாட்டை இழந்தது லொறி: இருவர் சாவு; அறுவர் படுகாயம்

வேகக்கட்டுப்பாட்டை இழந்த பாரவூர்தி, வீதியை விட்டு விலகி மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானது. அதில் இருவர் உயிரிழந்தனர். அறுவர் படுகாயமடைந்தனர்.

இந்தக் கோரவிபத்து பொல்கஹவலைப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட உடபொலச் சந்தியில் நேற்று அதிகாலை இடம்பெற்றது.

நாரம்மலவிலிருந்து கஹவத்தே எலப் பகுதிக்குப் பயணித்த பாரவூர்தியே, வேகக்கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானது.

விபத்தில் பொல்கஹவலைப் பகுதியைச் சேர்ந்த சமன் பிரியந்த (வயது 50), ரோஷனி பிரியங்கிகா (வயது 48) ஆகியோரே உயிரிழந்தனர். படுகாயமடைந்த சாரதி உட்பட அறுவர் குருநாகல் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொல்கஹவலைப் பொலிஸார் மேற்கொண்டனர். (ஐ)

## அரசின் பங்காளியாயினும் அநீதிக்குக் குரல் கொடுப்போம்

*இப்படிச் சொல்கிறார் அமைச்சர் மனோ*

தமிழ் முற்போக்கு கூட்டணி அரசில் பங்குதாரராக இருந்தாலும், நியாயமான விடயங்களுக்காக அழுத்தங்களை வழங்கும் செயற்பாடுகளைக் கைவிடுவதில்லை என்ற நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளது. இவ்வாறு தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும், தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

அவர் மேலும்தெரிவித்ததாவது: தமிழ் முற்போக்கு கூட்டணியானது வடக்கு கிழக்குக்கு வெளியில் வாழும் தமிழ் மக்களைப்பிரதிநிதித்துவப்படுத்துவதாகவே உள்ளது. அவர்களின் அபிலாசைகளையும், உரிமைகளையும் பாதுகாக்க வேண்டிய கடப்பாட்டையும் கொண்டிருக்கின்றது.

நாம் அரசில் பங்குதாரராக இருந்தாலும் தமிழ் மக்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளுக்கு ஒரு போதும் துணை போகப்போவதில்லை. மாகாண சபைத் தேர்தல் திருத்தச் சட்டவரைவின்போது 50 சதவீதம் தொகுதிவாரி பிரதிநிதித்துவத்தையும், 50 சதவீதம் விகிதாசார பிரதிநிதித்துவத்தையும் கொண்டமைந்த கலப்பு தேர்தல் முறைமையொன்று உள்ளீர்க்கப்படவேண்டும் என்பதில் இறுதிவரையில் உறுதியாக இருந்தோம்.

வடக்கு கிழக்குக்கு வெளியில் வாழும் முஸ்லிம்களைக் கருத்திற்கொண்டு செயற்பட்ட சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய கட்சிகளுடன் இணைந்து அரசுக்கு அழுத்தங்களை பிரயோகத்துக்கு இணக்கப்பாடொன்றை எட்டியிருந்தோம்.

வடக்கு கிழக்கினுள் வாழும் மக்களின் பிரச்சினை களையும் நான் நன்கு உணர்ந்துள்ளேன். அவர்களுக்கு நியாயமான நிரந்தரத் தீர்வொன்றைப் பெற்றுக்கொடுப்பதற்காக பின்னிற்கப்போவதில்லை.

அந்த மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தரப்புக்களின் முன்னகர்வுகளுக்கு என்னாலான உதவிகளையும் ஒத்துழைப்புக்களையும் வழங்குவதற்கு என்றுமே தயாராகவே இருக்கின்றோம் - என்றார். (5.31)

# நிதியை மாத்திரம் எதிர்பார்த்து யாத்திரை செய்யவேண்டாம்

*பிக்குகளிடம் பொன்சேகா மீளவும் கோரிக்கை*

கொழும்பு, செப். 25

பௌத்த மதத்தில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தான யாத்திரையின்போது நிதி மட்டுமே இடவேண்டும் என்று கூறப்படவில்லை. நிதியை மட்டும் இலக்காகக் கொண்டு யாத்திரையொன்றையும் முன்னெடுக்க வேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன். இவ்வாறு அமைச்சர் சரத் பொன்சேகா தெரிவித்தார்.



களனிப் பிரதேசத்தில் விகாரையொன்றில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற சமய வழிபாடுகளில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த காலத்தில் பெரியளவில் ஊழல் மோசடிகள் இடம்பெற்றிருக்கின்றமை படிப்படியாக மக்கள் மத்தியில் அம்பலமாகி வருகின்றது. ஊழல் மற்றும் மோசடிகளில் ஈடுபடுபவர்கள் எவராக இருந்தாலும் அவர்களுக்குப் பாரபட்சம் காட்டப்படக்கூடாது. சட்டத்துக்கு முன் கொண்டுவரப்பட வேண்டியது அவசியமாகும்.

ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கான தண்டனை வழங்கும் வேகமானது மந்தகதியிலேயே உள்ளது. ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்களே தம்மீதுள்ள கறைகளை மறைப்பதற்காக அதிகளவில் கருத்துக்களை வெளியிட்டு அரசுக்கு எதிரான பரப்புரைகளை முன்னெடுத்து வருகின்றார்கள். அத்தகையவர்கள் எத்தகைய பரப்புரைகளை மேற்கொண்டாலும் மக்கள் அவர்களின் உண்மையான முகத்தை அறிந்தே வைத்துள்ளார்கள். அவர்களின் கருத்துக்களால் மக்களை ஒரு நாளும் திசைதிருப்பி விட முடியாது.

ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்கள் யாராக இருந்தாலும் அவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்தி அவர்களுக்கான தண்டனையைப் பெற்றுக்கொடுக்க வேண்டியது அவசியமாகின்றது. இதில் எந்தவொரு பின்னடிப்புக்களையும் செய்ய வேண்டிய அவசியமில்லை.

தேரர்கள் தனத்தைப் பெற்றுக்கொள்ளும் யாத்திரையை முன்னெடுத்திருந்தார்கள். உண்மையிலேயே தேரர்கள் தானம் பெற்றுக்கொள்ளும் யாத்திரையை மேற்கொள்ளும் போது அதில் மக்கள் தமாக முன்வந்து தானபாத்திரத்தினுள் பொருள்களை இடமுடியும். அதனை யாரும் தடுக்க முடியாது. ஆனால் நிதி மட்டுமே அந்தப் பாத்திரத்தினுள் இடவேண்டுமெனக் கூறுவது அபத்தமானகருத்தாகும். பௌத்த மதத்தில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தான யாத்திரையின்போது நிதி மட்டுமே இடவேண்டும் என்று கூறப்பட்வில்லை. நிதியை மட்டும் இலக்காக கொண்டு யாத்திரையொன்றையும் முன்னெடுக்க வேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறான யாத்திரையொன்று முன்னெடுக்கப்படுமாயின் அது தவறான தொரு செயற்பாடாகவே அமையும். அந்த அடிப்படையில் நான் எனது கருத்துக்களைமுன்வைத்திருந்தேன் - என்றார். (5.31)

# விரைவில் பாடம் புகட்டுவேன்!

*ஐ.தே.க. கூட்டத்தில் அவமதிக்கப்பட்ட ஜோசப் மைக்கல் பெரேரா சத்தியம்*

கொழும்பு, செப். 25

ஐக்கிய தேசியக் கட்சியின் உபதலைவர்களுள் ஒருவரான நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்கவின் ஆட்டத்துக்கேற்ப ஜாஎல பகுதியில் அரசியல் செயற்பாடுகளை முன்னெடுக்க இடமளிக்கமுடியாது. அவருக்கு விரைவில் தக்க பாடம் புகட்டப்படும். அரசியல் ரீதியானதீர்மானமொன்றையும் எடுக்கவுள்ளேன். இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த உறுப்பினரும் கம்பகா மாவட்ட அமைப்பாளரும் முன்னாள் அமைச்சருமான ஜோசப் மைக்கல் பெரேரா 'உதயன் பத்திரிகைக்குத்' தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் இளையோர் அணிக்கூட்டம் நேற்று முன்தினம் மாலை ஜாஎல பகுதியில் நடைபெற்றது. ஏற்பாடுகளை கம்பகா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான காவிந்த ஜயவர்தன மேற்கொண்டிருந்தார்.

ரவி கருணாநாயக்க, ஜோசப் மைக்கல் பெரேரா உள்ளிட்ட ஐக்கிய தேசியக் கட்சி பிரமுகர்கள் நிகழ்வில் பங்கேற்றிருந்தாலும் ரவி கருணாநாயக்க, காவிந்த ஜயவர்தன ஆகியோருக்கு மாத்திரமே உரை நிகழ்த்துவதற்கு வாய்ப்பளிக்கப்பட்டிருந்தது.

இதனல் சீற்றமடைந்த ஜோசப் மைக்கல் பெரேரா நிகழ்வின் நடுப்பகுதிக்கு வந்து, மூத்த உறுப்பினரான தனக்கு உரிய மதிப்பு வழங்கப்படவில்லை. உரையாற்றுவதற்கு வாய்ப்பளிக்கப்படாதது பெரும் தவறு என்றும் வாதிட்டார். அங்கு சர்ச்சைநிலை உருவாகியது.

இதையடுத்து உரையாற்றுவதற்கு அவருக்கு வாய்ப்பளிக்கப்பட்டது. ஒலிவாங்கி இயங்கவில்லையென சுட்டிக்காட்டி மறுபடியும் அவர் குழப்பத்தில் ஈடுபட்டார். நிகழ்வு ஏற்பாட்டுக்குழு மீதும், ரவி கருணாநாயக்க மீதும் கடும் விமர்சனங்களை முன்வைத்தார். முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்கவும், ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தனவும் அந்த இடத்திலிருந்து வெளியேறிச் செல்வதற்கு முற்பட்டனர். ரவிக்கு ஆதரவாகவும், ஜோசப் மைக்கல் பெரேராவுக்கு எதிராகவும் அங்கு கோசங்கள் எழுப்பப்பட்டன. இப்படியே சென்றால் ஐக்கிய தேசியக் கட்சி அழிந்துவிடும் என்று எச்சரித்துவிட்டு வாகனத்தில் ஏறிப் புறப்பட்டார் ஜோசப் மைக்கல் பெரேரா.

# அரசின் மூன்றிலிரண்டு பலத்தை தகர்க்க நாமல் ராஜபக்ச களத்தில்

*இளம் எம்.பிக்களுடன் கொழும்பில் பேச்சு*

கொழும்பு, செப். 25



கூட்டுஅரசுக்கெதிராகமுன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்க்கைகள் தொடர்பில் ஆராய்வதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தலைமையில் மகிந்த அணியில் உள்ள இளம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொழும்பில் இந்த வாரம் கூடவுள்ளனர்.

கூட்டரசிலிருந்து வெளியேறிய அருந்திக்க பெர்னாண்டோ, பிரியங்கர ஜயவர்தன ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்களும் இதில் பங்கேற்கவுள்ளனர் எனத் தெரியவருகின்றது.

கூட்டு அரசுமீது அதிருப்தியில் இருக்கும் சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் சிலரும் குறித்த கூட்டத்தில் பங்கேற்பதற்குரிய சாத்தியம் இருக்கின்றது.

கூட்டு அரசின் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைத் தகர்த்தெறியும் நோக்கில் மகிந்த அணி கடும் பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு கட்டமாக மேற்படி சந்திப்பு அமையவுள்ளது. (5)

நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

மண் மகிழ 02 . 10 . 1938



கண் நெகிழ 09 . 10 . 2013

அமரர் சின்னத்தம்பி அப்புலிங்கம்

திதி: 25.09.2017

எம் அருமை அப்பாவே!
நான்கு ஆண்டுகள் ஓடி மறைந்தாலும் எங்களது
இதயத்தில் உங்கள் நினைவு மறையவில்லை
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் நினைவில்...
குடும்பத்தினர்.

ஆனந்தா வீதி,
மானிப்பாய்.

10 ஆம் ஆண்டில் நினைவு கூருவோம்



திருமதி சாரதா பரஞ்சோதி
[இசையாசிரியர்- சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்]

தோற்றம் 03.11.1965
மறைவு 25.09.2007

ஈழத்து இசைவானில்
நீள வலம்வந்து
பாடிப்பறந்த குயில்
கோரப்பருந்துகளால்
மறைந்து போனதையா!
யார் செய்த கோலம்
விதியா சதியா ஏன் இந்தக் கதி
நினைக்க முடியுதில்லை
நினைக்காமல் இருக்கவும்
முடியவில்லை

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மூளாய், சுழிபுரம்.

என்றும் நினைவில்
குடும்பத்தினர்.

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# கூட்டு அரசின் மோசடிகளால் ரூபா 13,000 கோடி இழப்பாம்

## கூறுகிறார் மகிந்த அணி உறுப்பினர்

கொழும்பு, செப். 25
இந்த ஆட்சியில் கடந்த இரண்டு ஆண்டுகளில் மத்திய வங்கி ஊழலைத் தவிர்த்து இடம்பெற்ற ஏனைய ஊழல், மோசடிகள் காரணமாக நாட்டுக்கு 13 ஆயிரம் கோடி ரூபா இழப்பீடு ஏற்பட்டுள்ளதாக மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் டி.பி.சாணக தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
நாம் ஊழல், மோசடிக்கு எதிரானவர்கள். நாம் ஊழல் புரிந்திருந்தால் தண்டியுங்கள். இந்த அரசில் ஒன்றன் பின் ஒன்றாக ஊழல்கள் இடம்பெறுகின்றன.

இந்த ஆட்சியில் கடந்த இரண்டு வருடங்களில் மத்திய வங்கி ஊழலைத் தவிர்த்து இடம்பெற்ற ஏனைய ஊழல், மோசடிகள் காரணமாக நாட்டுக்கு 13 ஆயிரம் கோடி ரூபா இழப்பீடு ஏற்பட்டுள்ளது.

மத்திய வங்கி ஊழலால் மாத்திரம் ஒரு லட்சம் கோடி ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது. இது மக்களின் பணம். இது மீளப் பெறப்பட வேண்டும். சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் பதவி விலகினால் மாத்திரம் போதாது. அதனால் இந்தப் பிரச்சினை தீராது. அந்தப் பணத்தை மீளப் பெற வேண்டும்.

நாட்டில் சமுர்த்திப் பயனாளிகள் நீக்கப்படுகின்றனர். அம்பாந்தோட்டையில் மாத்திரம் 25 ஆயிரம் பேர் இவ்வாறு நீக்கப்பட்டுள்ளனர். அந்த இடத்துக்கு ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள் நிரப்பப்படவுள்ளனர். விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. களஞ்சியப்படுத்துவதற்கு இடமில்லாமல் மத்தள வானூர்தி நிலையத்தில் களஞ்சியப்படுத்திடும் அளவுக்கு நெல் நிரம்பி வழிந்தது. இப்போது அந்த நிலைமாறியுள்ளது. வெளிநாடுகளில் இருந்து அரிசி இறக்குமதி செய்யப்படுகின்றது.

மிளகு உற்பத்தியும் பாதிக்கப்பட்டுள்ளது. வெளிநாடுகளில் இருந்து மிளகு இறக்குமதி செய்யப்படுவதால் உள்நாட்டு உற்பத்தியாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் நஞ்சருந்தி மரணிக்கும் நிலைக்குச் சென்றுள்ளனர். உர மானியம் நிறுத்தப்பட்டுள்ளது. விவசாயம் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இடம்பெற்றுக்கொண்டிருக்கும் ஊழல், மோசடிகள்தான் இந்த நிலமைக்குக் காரணம். இவை நேரடியாக மக்களையே பாதிக்கின்றன. இன்னும் காலம் செல்லச் செல்ல நிலமை மேலும் மோசமடையும். மக்கள்தான் எல்லாவற்றையும் அனுபவிக்க வேண்டி வரும்- என்றார். (5.3)

# போதைப் பொருள் குற்றச்சாட்டுக்களில் 52,000 பேர் இந்த ஆண்டில் கைது

கொழும்பு, செப். 25
போதைப் பொருள் தொடர்பான குற்றச்சாட்டுக்களில் இந்த ஆண்டின் இதுவரையான காலப் பகுதிகளில் நாடு முழுவதிலும் 52 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸார், சிறப்பு அதிரடிப் படையினர், சுங்கத் திணைக்களத்தினர் மற்றும் கடற்படையினர் ஆகியோரால் ஜனவரி முதலாம் திகதி முதல் செப்ரெம்பர் 11ஆம் திகதி வரை இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாரின் தகவல்களுக்கமைய, போதைப்பொருள் தொடர்பான 52 ஆயிரத்து 157 சம்பவங்களுடன் 52 ஆயிரத்து 72 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் புள்ளி விவரங்களை மேற்கோள் காட்டித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கஞ்சா போதைப்பொருள் தொடர்பான 32 ஆயிரத்து 673 சம்பவங்கள் தொடர்பில் 32 ஆயிரத்து 463 பேரும், ஹெரோயின் போதைப்பொருள் தொடர்பான 19 ஆயிரத்து 434 சம்பவங்கள் தொடர்பில் 19 ஆயிரத்து 237 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

4 ஆயிரம் கிலோ கஞ்சாவும், 290 கிலோ ஹெரோயினும் இந்தச் சுற்றி வளைப்புகளின்போது கைப்பற்றப்பட்டுள்ளன.

இதற்கு மேலதிகமாக 220 கிலோ கொக்கேய்ன், 770 மில்லிகிராம் ஒபி முதலான போதைப்பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களுக்கு 27 வெளிநாட்டவர்களும் அடங்குகின்றனர். அவர்கள், பாகிஸ்தான், இந்தியா, பிரான்ஸ், இத்தாலி, நைஜீரியா, மாலைதீவுகள் மற்றும் லட்வியா போன்ற நாடுகளைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5)

# போரில் 75 சதவீதத்தை நானே முடித்து வைத்தேன்

## சந்திரிகா பெருமிதம்

மூன்று தசாப்தங்களாக நிலவிய போரின் பெரும்பகுதியை முடிவுக்குக் கொண்டு வந்த பெருமை என்னையே சேரும் என்று முன்னாள் அரச தலைவர் சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

கம்பஹா பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

விடுதலைப் புலிகளிடமிருந்த 75 வீதமான நிலப்பரப்பை நானே வெற்றி கொண்டேன். முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச 25 வீதம் மாத்திரமே போரை நிறைவு செய்தார் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதே விவகாரம், 2015ஆம் ஆண்டு அரச தலைவர் தேர்தல் காலப் பகுதியிலும் எதிரொலித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (5)

# அமைச்சருக்குத் தெரியாமல் சொகுசு வாகனங்கள் தருவிப்பு

## இறக்குமதிச் சபைத் தலைவரின் பதவி பறிபோனது




அமைச்சர் மலிக் சமரவிக்கிரமவுக்குத் தெரியாமல் இறக்குமதி கட்டுபாட்டுச் சபைத் தலைவர் 30 அதிசொகுசு வாகனங்களை இறக்குமதி செய்துள்ளார். இதனையடுத்து அவரைப் பதவியில் இருந்து நீக்கியுள்ளோம். விசாரணை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இவ்வாறு பன்னாட்டு வர்த்தக மற்றும் மூலோபாய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சுஜிவ சேனசிங்க சபையில் தெரிவித்தார்.

ஏற்றுமதி - இறக்குமதி கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள் மீதான விவாதம் நாடாளுமன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

'பன்னாட்டு வர்த்தக மற்றும் மூலோபாய அபிவிருத்தி அமைச்சர் மலிக் சமரவிக்கிரமவுக்கும் இராஜாங்க அமைச்சருக்கும் தெரியாமல் வேறு அமைச்சரின் கோரிக்கையின் பிரகாரம் இறக்குமதி கட்டுபாட்டு அதிகார சபைத் தலைவர் 30 அதிசொகுசு வாகனங்களை இறக்குமதி செய்துள்ளார். தற்போது இராஜாங்க அமைச்சர் சபையில் உள்ளார். அவர் பதில் வழங்குவார் என்று நம்புகிறேன்' இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த இராஜாங்க அமைச்சர் சுஜிவ சேனசிங்க, அமைச்சர் மலிக் சமரவிக்கிரமவுக்குத் தெரியாமல் வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. இது தொடர்பில் நாம் அவதானம் செலுத்தியுள்ளோம். வேறு அமைச்சரின் கோரிக்கையின் பிரகாரம் இவ்வாறு வாகன இறக்குமதி செய்யப்படவில்லை. சபைத் தலைவரே வாகனங்களை இறக்குமதி செய்துள்ளார். தற்போது அவரை நாம் பதவியில் இருந்து நீக்கியுள்ளோம். இது தொடர்பில் பொலிஸ் விசாரணை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது - என்றார். (5.31)



# வெற்றிடமான ஆசனங்கள் முன் உரையாற்றிய மைத்திரி

கொழும்பு, செப். 25
ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன உரையாற்றிய போது, அரங்கில் பெரும்பாலான ஆசனங்கள் வெறுமையாகவே காட்சியளித்தன என்று நியூயோர்க் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐ.நா. பொதுச் சபையின் 72ஆவது கூட்டத்தொடரின் முக்கிய அம்சமாக, உலகத் தலைவர்களின் பொது விவாதம், கடந்த 19ஆம் திகதி தொடங்கி, நேற்று முன்தினம் நிறைவுபெற்றது.

இந்தக் கூட்டத் தொடரில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, தொடர்ந்து மூன்றாவது ஆண்டாகப் பங்கேற்று உரையாற்றியிருந்தார். பல ஆண்டுகளுக்குப் பின்னர், முதலாவது நாளிலேயே 19ஆம் திகதி பிற்பகல் அமர்வில் அரச தலைவர் மைத்திரிபாலவுக்கு உரையாற்றும் வாய்ப்புக் கிடைத்திருந்தது.

காலை அமர்வில் அமெரிக்க அரச தலைவர் டொனால்ட் ட்ரம்ப் உரையாற்றியிருந்தார். அவரது உரையைத் தொடர்ந்து பெரும்பாலான உலகத் தலைவர்கள், பொதுச்சபையில் இருந்து வெளியே சென்றிருந்தனர்.

இதனால், 27ஆவது பேச்சாளராக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன உரையாற்றிய போது பெரும்பாலான ஆசனங்கள் வெறுமையாகக் காட்சியளித்தன. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தனது உரையைச் சிங்களத்திலேயே நிகழ்த்தினார். (5)

# பாதுகாப்புக் குறைக்கப்பட்டதால் எனது உயிருக்கு அச்சுறுத்தல்

## மகிந்த ராஜபக்ச தெரிவிப்பு



கொழும்பு, செப். 25
எனது பாதுகாப்புக் குறைக்கப்பட்டதாலேயே உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. இவ்வாறு முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்சவின் உத்தியோகபூர்வ இல்லத்தினுள் கத்தியுடன் நுழைய முற்பட்ட இளைஞன் கடந்த வியாழக்கிழமை கைது செய்யப்பட்டிருந்தார். நீதிமன்றில் அவரை முற்படுத்தியபோது, மகிந்தவைச் சந்திக்க முற்பட்ட காரணத்தை அவரிடம் மாத்திரமே தெரிவிப்பேன் என்று கூறியிருந்தார்.

இவ்வாறான நிலையில் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச இந்தச் சம்பவம் தொடர்பில் தெரிவித்ததாவது:
பாதுகாப்பு குறைக்கப்பட்டுள்ளதால் எனது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. எவரேனும் கத்தியை எடுத்துக்கொண்டு என்னை கொலை செய்ய வருவாரேயானால் அவர் பைத்தியகாரனாக இருப்பார் - என்றார். (5)


## மரண அறிவித்தல்

### பர்னாந்து நீற்றையா



ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் நாவாந்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட பர்னாந்து நீற்றையா 22.09.2017 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்க ஆராதனைக்காக நாளை (26.09.2017) செவ்வாய்க்கிழமை பி.ப 3.00 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து புனித நீக்கிலார் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நாவாந்துறை சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளப்படும்.

நாவாந்துறை.

தகவல்:
குடும்பத்தினர்.

# ஐ.நா. பொதுச் செயலரையும் இலங்கைக்கு வருமாறு அழைப்பு

## நேரில் சந்தித்து மைத்திரி விடுத்தார்

கொழும்பு, செப். 25



ஐ.நா பொதுச் செயலர் அன்ரனியோ குரோசை, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன சந்தித்துப் பேசிய போது, அவரை இலங்கைக்கு வருகைதருமாறு அழைப்பு விடுத்துள்ளார்.

ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் பங்கேற்ற நியூயோர்க் சென்றுள்ள அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, ஐ.நா. பொதுச் செயலரை நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேச்சு நடத்தினார். இந்தச் சந்திப்புத் தொடர்பில் அரச தலைவர் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள பத்திரிகை அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

பலமான நல்லிணக்கத்துடன் சுபீட்சமான தேசமாக இலங்கையில் கட்டியெழுப்புவ்தற்கு எடுக்கப்படும் முயற்சிகளுக்கு அனைத்து உதவிகளையும் வழங்கத் தயாராக உள்ளதாக, ஐ.நா. பொதுச்செயலர் உறுதியளித்தார் என்று கூறப்பட்டுள்ளது.

இலங்கையுடன் மிக நெருக்கமாகச் செயற்பட்ட அனைத்து இலங்கையர்களுக்கும் சுபீட்சம் மற்றும் சகவாழ்வு நிறைந்த, உலகின் முன்மாதிரி தேசமாக எழுந்திருப்பதற்கு ஐக்கிய நாடுகள் சபை முழுமையாக உதவும் என்றும் ஐ.நா. பொதுச்செயலர் தெரிவித்தார். இலங்கையுடனான ஒத்துழைப்பு நிகழ்ச்சித்திட்டங்களைப் பலப்படுத்தி நாட்டுக்கும் மக்களுக்கும் முழுமையான உதவிகளை வழங்க தொடர்ச்சியாக, நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஐ.நா. பொதுச் செயலர் அன்ரனியோ குறொஸ் உறுதியளித்தார்.

அதேவேளை, அபிவிருத்தி மற்றும் நல்லிணக்கம் தொடர்பான செயற்பாடுகளில் இலங்கை அரசு அர்ப்பணிப்புடன் உள்ளதாகத் தெரிவித்த மைத்திரிபால சிறிசேன, இதற்கு உலகின் அனைத்து நாடுகளினதும் ஒத்துழைப்பும் நட்புறவும் அவசியம் என்றும் தெரிவித்தார். அபிவிருத்தி இலக்குகளை வெற்றி கொண்டு நல்லிணக்கக் கொள்கையுடன் பயணிக்கும் இலங்கையின் தற்போதைய முன்னேற்றங்களை நேரில் கண்டறிவதற்காக, இலங்கைக்குப் பயணம் செய்யுமாறும் ஐ.நா. பொதுச்செயலருக்கு அழைப்பு விடுத்தார் - என்றுள்ளது. (5)

# அரசிலிருந்து வெளியேறினால் மகிந்தவே எங்களுக்கு தஞ்சம்

## பிரதி அமைச்சர் நிமால் லான்சா தெரிவிப்பு

கொழும்பு, செப். 25

அரசை விட்டுச் செல்வதென்று நாங்கள் தீர்மானித்தால் மகிந்தவிடமே செல்ல வேண்டி வரும் என்று பிரதி அமைச்சர் நிமால் லான்சா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இரண்டு வருடங்களுக்கு மாத்திரமே கூட்டு அரசை நடத்துவதென்று ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டு டிசெம்பர் மாதம் கூட்டு அரசு முடிவுக்கு வருகின்றது. அவ்வாறு முடிவுக்கு வந்தால் ஐக்கிய தேசிய கட்சிதான் ஆட்சியை அமைக்கும்.

கூட்டு அரசு முடிவுக்கு வந்ததும் சுதந்திரக் கட்சி என்ன செய்வது என்று இப்போது பேசி முடிவெடுக்க வேண்டியுள்ளது. இது தொடர்பில் நாம் அரச தலைவரைச் சந்தித்துப் பேசியபோது இந்த நாட்டு மக்கள் அரசு பற்றி என்ன நினைக்கின்றனர் என்பதைக் கூறினேன். உண்மையில் மக்கள் அரசு மீது கடும் அதிருப்தியில் உள்ளனர்.

அரசை விட்டு விலகுவோம் என்று சிலர் கருத்துத் தெரிவித்தபோது சுதந்திரக் கட்சியில் உள்ள 41பேரும் சேர்ந்து ஒரு முடிவை எடுப்போம் என்றும் டிசெம்பர் வரை பொறுமையாக இருப்போம் என்றும் அரச தலைவர் எம்மிடம் கூறினார். அதற்கு நாம் சம்மதித்தோம். இப்போது நாம் அரச தலைவர் மைத்திரிபாலவைத் தலைவராக ஏற்றுச் செயற்படுகின்றோம்.

ஆனால், அரசை விட்டுச் செல்வதென்று நாங்கள் தீர்மானித்தால் மகிந்தவிடமே செல்ல வேண்டிவரும் - என்றார். (5.3)

# இலங்கையின் வரைபடம் மாறுகின்றது

கொழும்பு, செப். 25

கொழும்புத் துறைமுக நகரத்தை உள்ளடக்கிய, இலங்கையின் புதிய வரைபடம் அடுத்த ஆண்டு வெளியிடப்படவுள்ளது. புதிய வரைபடத்தைத் தயாரிக்கும் பணிகள் நிறைவடைந்துள்ளதாகவும், அடுத்த ஆண்டில் அது வெளியிடப்படும் என்றும் நில அளவைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

புதிய வரைபடம், கொழும்பில் அமைக்கப்படும் துறைமுக நகரம் உள்ளிட்ட மாற்றங்களை உள்ளடக்கியதாக இருக்கும் என்று நில அளவைப் பணிப்பாளர் உதயகாந்த தெரிவித்துள்ளார்.

இந்தத் திருத்தப்பட்ட வரைபடம், அம்பாந்தோட்டைத் துறைமுகக் கட்டுமானப் பணிகளின் பின்னரான திருத்தங்களையும் உள்ளடக்கியதாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை உருவாக்குவதற்காக, இலங்கையின் நிலப்பகுதியில் கடல் நீர் நிரப்பப்பட்டதும், கடற்பகுதியில் மண் நிரப்பப்பட்டு கொழும்புத் துறைமுக நகரம் உருவாக்கப்பட்டுள்ளதால், தரைப்பகுதியின் அளவு அதிகரிக்கப்பட்டுள்ளதுமான சூழலில் புதிய வரைபடம் இந்த மாற்றங்களை உள்ளக்கியதாக அமைந்திருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (5)



# அம்பாந்தோட்டையில்சீனாவுக்கு மேலும் இடம் வழங்க அரசு பேச்சு

அம்பாந்தோட்டை துறைமுகம் அருகே 3 பில்லியன் டொலர்செலவில்எண்ணெய்ச் சுத்திகரிப்பு ஆலையை நிறுவுவது தொடர்பாக, இரண்டு சீன நிறுவனங்களுடன் அரசு பேச்சுக்களை நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சீனாவின் மேர்ச்சன்ட்ஸ் போர்ட்ஸ் ஹோல்டிங்ஸ் நிறுவனத்தினால், 99 ஆண்டுகள் குத்தகைக்குப் பெறப்பட்டுள்ள அம்பாந்தோட்டைத் துறைமுகத்தில் புதிய எண்ணெய்ச் சுத்திகரிப்பு ஆலையை அமைக்க இலங்கை திட்டமிட்டுள்ளது.

இந்தஎண்ணெய்ச்சுத்திகரிப்பு ஆலையைஅமைப்பதற்கான கூட்டு முயற்சித் திட்டத்தை இரண்டு சீன நிறுவனங்கள் முன்வைத்திருப்பதாகமுதலீட்டுச் சபையின் பணிப்பாளர் மங்கள யாப்பா தெரிவித்தார். ஆண்டுக்கு 5 மில்லியன் தொன் எண்ணெய்யை சுத்திகரிக்கும்வகையிலான இந்த ஆலைக்கான முதலீடு 2.5 பில்லியன் தொடக்கம் 3 பில்லியன் வரை இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் கூறினார். இந்தத் திட்டத்தை முன்வைத்துள்ள சீன நிறுவனங்களின் பெயர்களை அவர் வெளியிடவில்லை.

இந்த முதலீடு பெரியது. சீன நிறுவனங்கள் இரண்டுடனும் நாங்கள் பேச்சுக்களை நடத்தி வருகிறோம். எண்ணெய்ச்சுத்திகரிப்புஆலைக்கு 500 ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது. நிலத்தை நாம் ஒதுக்கி வைத்திருக்க முடியாது. பலர் முதலில் நிலத்தைப் பெற்றுக் கொள்ள முயற்சிக்கிறார்கள். அதற்குப் பின்னரே முதலீட்டாளர்களைத் தேடுகிறார்கள் என்றார். எனினும் இந்தத் திட்டம் தொடர்பான விரிவான தகவல்களை வெளியிட அவர் மறுத்துள்ளார். (5)

# ரஷ்யாவிடமிருந்து போர்க் கப்பலை வாங்குகின்றது இலங்கை

கொழும்பு, செப். 25

ரஷ்யாவிடம் இருந்து இலங்கைக் கடற்படைக்காக, 158.5 மில்லியன் டொலர் பெறுமதியான ஜிபார்ட் 5.1 ரகத்தைச் சேர்ந்த ஆழ்கடல் ரோந்துக் கப்பல் கொள்வனவு செய்யப்படவுள்ளது. கொள்வனவுத் தொடர்பான அமைச்சரவைப் பத்திரத்தைப் பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அமைச்சரவையில் சமர்ப்பித்துள்ளார்.

2010ஆம் ஆண்டு, ரஷ்யா வழங்கிய 300 மில்லியன் டொலர் கடன் திட்டத்தின் கீழ், இந்த போர்க்கப்பல் கொள்வனவு செய்யப்படவுள்ளது. இந்தக் கடன் திட்டத்தில் 165 மில்லியன் டொலர் பயன்படுத்தப்பட்டு விட்ட நிலையில், 2015ஆம் ஆண்டு வரை பயன்படுத்தப்படாதிருந்த 136 மில்லியன் டொலர் கடன் திட்டம் காலாவதியாகி விட்டது என்று அரச தலைவர் மைத்திரிபால அமைச்சரவையில் தெரிவித்திருந்தார்.

135 மில்லியன் டொலர் கடன் திட்டத்துக்கான காலஎல்லையை மேலும் ஐந்து ஆண்டுகளுக்கு நீடிக்க ரஷ்யா விருப்பம் தெரிவித்துள்ளது என்றும் அரச தலைவர் மைத்திரிபால தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவின் அரச இராணுவ உற்பத்தி ஏற்றுமதியாளர் நிறுவனத்திடம் இருந்து ஜிபார்ட் போர்க்கப்பலை வாங்குவதற்கு இலங்கைதிட்டமிட்டுள்ளது. இந்தக் கப்பலில் படையினருக்குப் பயிற்சி வழங்குவதற்கு மேலதிகமாக 7 மில்லியன் டொலரை இலங்கை செலவிட நேரிடும்.



இதுபோன்றதொரு போர்க்கப்பல் தேவை என்று கடற்படை கோரியிருந்தது. இதனைக் கொள்வனவு செய்வதற்கு ஏற்கனவே பரிந்துரைக்கப்பட்டுள் ளது.

இந்தப் போர்க்கப்பலில் பொருத்தப்படும் ஆயுதங்கள் மற்றும் தளபாடங்களை உள்ளடக்கியதாக, கப்பலுக்கான மொத்தச் செலவு 158.5 மில்லியன் டொலராகும். இதில், 135 மில்லியன் டொலர் ரஷ்ய கடனுதவியுடன் இலங்கை அரசின் 15 வீத பங்களிப்பும் இருக்கும். ரஷ்யாவிடம் பெறப்படும் கடனை ஐந்து ஆண்டு வரிவிலக்குடன், 10 ஆண்டு களில் திருப்பிச் செலுத்த வேண்டும். (5)



# ஐ.எஸ். ஆயுததாரிகள் 200 பேர் படுகொலை

பக்தாத், செப். 25

ஈராக்கின் சலாகுதின் நகரில் ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுததாரிகளுக்கும், ஈராக் அரச படைகளுக்கும் இடையே நடைபெற்ற கடும் போரில் சுமார் 200 ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுததாரிகள் கொல்லப்பட்டனர்.

ஈராக், சிரிய நாடுகளின் சில பகுதிகளைக் கைப்பற்றி அவற்றை ஒரு தனிநாடு என்று அறிவித்திருந்தது ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு. அந்த அமைப்பின் பிடியில் இருந்து ஈராக் விடுவிக்கப்பட்டுள்ள போதிலும், மீண்டும் அந்த நாட்டுக்குள் தமது ஆதிக்கத்தை நிலைநாட்ட ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுததாரிகள் எத்தனித்து வருகின்றனர். அவ்வாறு சலாகுதின் நகருக்குள் நுழைய முற்பட்ட சுமார் 200 ஆயுததாரிகள் நேற்றுமுன்தினம் கொல்லப்பட்டனர். (ம)





மெக்சிக்கோவின் தலைநகர் மெக்சிக்கன் சிற்றியில், கடந்த செவ்வாய்க்கிழமை 7.1 ரிச்டர் அளவில் கடுமையான நிலநடுக்கம் ஏற்பட்டது. 45 கட்டங்கள் தரைமட்டமாகின. 260 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் மீட்புப் பணிகள் தற்போது துரித கதியில் பெற்று வருகின்றன. உயிரிழப்பு அதிகரிக்கலாம் என்று விடப்பட்டிருந்த எச்சரிக்கை நேற்று மதியம் வரை திரும்பப் பெறப்படவில்லை.

# இவன்கா ட்ரம்ப் போன்று தமது முகத்தை மாற்ற அமெ. பெண்கள் ஆர்வம்

வொஷிங்டன், செப். 25

அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்பின் மகள் இவன்கா ட்ரம்ப் போன்று தமது முகத்தை மாற்றுவதற்கு அமெரிக்கப் பெண்கள் ஆர்வம் காட்டுகின்றனர் என்று அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

அமெரிக்க அதிபரின் மகளாக மட்டும் அறியப்பட்டவர் அல்லர் இவன்கா. மிகப்பெரும் தொழிலதிபர், மொடல் என்று பல துறைகளிலும் அவர் தனது ஆதிக்கத்தைச் செலுத்தி வருகிறார். இதனால் பலராலும் விரும்பப்படும் பெண்ணாக இவன்கா திகழ்கிறார். இவன்காவின் முகத்தைப் போன்று தமது முகத்தை மாற்றிக் கொள்வதற்கு அமெரிக்கப் பெண்கள் தற்போது அதிகளவில் ஆர்வம் காட்டுகின்றனராம்.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் மட்டும் சுமார் 50 பெண்கள் இவன்காவைப் போன்று தமது முகத்தை மாற்றியுள்ளனர். இந்த அறுவைச் சிகிச்சைக்காக இலங்கை மதிப்பில் சுமார் 75 லட்சம் ரூபா செலவாகிறதாம். (ம)



# மெக்சிக்கோவில் நிலநடுக்கம்

மெக்சிக்கன் சிற்றி, செப். 25

மெக்சிக்கோவில் நேற்று ரிச்டர் அளவில் 5.8 அளவில் நில அதிர்வு ஏற்பட்டது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. மெக்சிக்கன் சிற்றியில் இந்த நில அதிர்வு ஏற்பட்டுள்ளது. உயிரிழப்பு, பொருள் சேதம் தொடர்பில் எந்தத் தகவலும் வர வில்லை.



கடந்த 19ஆம் திகதி மெக்சிக்கன் சிற்றியில் 7.1 ரிச்டர் அளவில் ஏற்பட்ட நில அதிர்வால் 300 பேர் உயிரிழந்தனர். சுமார் 300 கட்டங்கள் சேதமடைந்தன. இந்த நிலையில் மீண்டும் மெக்சிக்கன் சிற்றியில் நில அதிர்வு ஏற்பட்டுள்ளமை அங்குள்ளவர்களுக்கு பீதியை ஏற்படத்தியுள்ளது. (ம)

# உலக அளவில் 15 கோ சிறுவர் தொழிலாளர்கள்

வொஷிங்டன், செப். 25

உலகளவில் சுமார் 15 கோடி சிறுவர் தொழிலாளர்கள் உள்ளனர் என்று பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பு தகவல் வெளி யிட்டுள்ளது.

பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பு மற்றும் பன்னாட்டுப் புலம் பெயர்வு அமைப்பு ஆகியவை இணைந்து உலகளவில் அடிமைத்தனத்தில் சிக்கி உள்ளவர்கள் றும் சிறுவர் தொழிலாளர்களின் குறித்து ஆய்வுநடத்தின. இதன் அறி ஐக்கிய நாடுகள் பொதுச்சபைக் கூட்ட கடந்த செவ்வாய்க்கிழமை வெளியி டது. இந்த அறிக்கையிலேயே சி தொழிலாளர்கள் பற்றிய தகவல் வந்துள்ளது. 'உலகளவில் 4 கோடி நவீன அடிமைத்தனத்தில் யுள்ளனர். அவர்களில் 2 கோ 90 லட்சம் பேர் கோடி பேர் கள் மற்றும் சிறுமிகள். போல் 15 கோடியே 20 சிறுவர் தொழிலாளர்கள் உ னர். இவர்களில் 7 கோ 50லட்சம் பேர் ஆபிரிக்காவில் உள்ளனர்' என்று அந்த அறிக்கையில்மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)





# நவீன ரக ஏவுகணையை சோதித்தது ஈரான்

தெக்ரோன், செப். 25

அமெரிக்காவின் எச்சரிக்கையை மீறி நவீன ஏவுகணைச் சோதனையை ஈரான் வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளது.

ஈரான் அணுவாயுதச் சோதனைகளுக்கும், ஏவுகணைச் சோதனைகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. அந்த நாட்டின் வருடாந்த நிதி ஒதுக்கீட்டில் போர்த் தளபாடங்கள், அது சார்ந்த திட்டங்களுக்கும் ஈரான் முன்னுரிமை கொடுத்து வருகிறது. அமெரிக்கா பலமுறை எச்சதித்துள்ள போதிலும், எதையும் பொருட்படுத்தாமல் தொடர்ந்து தனது திட்டங்களை ஈரான் செயற்படுத்தி வருகிறது. இந்த நிலையில் நேற்றுமுன்தினமும் அந்த நாடு ஏவுகணைச் சோதனையொன்றை மேற்கொண்டது. இந்தச் சோதனைக்கு அமெரிக்கா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. (ம)

# பொதுச் சபையில் ட்ரம்பின் உரை நாய் குரைப்பதுபோல் உள்ளதாம்

பியாங்யாங், செப். 25

"ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் நிகழ்த்திய உரை நாய் குலைப்பது போல் இருந்தது" என்று தெரிவித்தார் வடகொரியாவின் அயலுறவுத் துறை அமைச்சர் ரி யாங் கோ.




பன்னாட்டுச் சட்டதிட்டங்களை மீறி வடகொரியா தொடர்ந்து ஆயுத, அணுவாயுதச் சோதனைகளை நடத்தி வருகிறது. இந்தச் சோதனைகளை ஐக்கிய நாடுகள் சபை தொடர்ந்து கண்டித்து வருகிறது. வடகொரியா மீது கடும் பொருளாதாரத் தடைகளையும் ஐ.நா. விதித்துள்ளது. அமெரிக்கா, தென்கொரியா, ஜப்பான் ஆகியன கூட்டாக இணைந்தும் வடகொரியாவின் மீது தடை விதித்துள்ளன. அமெரிக்காவைத் தாக்குவதே வடகொரியாவின் இலக்கு என்று வடகொரியா பலமுறை அறிவித்த பின்னரும் அமெரிக்கா நம்ப முடியாத அளவுக்கு பொறுமை காத்து வருகிறது.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத் தொடர் நியூயோர்க் நகரில் அண்மையில் நடைபெற்றது. உலக நாடுகளின் அதிபர்கள் இதில் பங்குகொண்டனர். ட்ரம்ப் தனது உரையில் வடகொரியாவை கடுமையாக எச்சரித்தார். "வடகொரியா இவ்வாறு செயற்பட்டால் அதை அழிப்பதைத் தவிர தமக்கு வேறு வழி தெரியவில்லை" என்றும் அவர் தெரிவித்தார். ஐ.நா. பொதுச் சபையில் ஆயுத கலாசாரம் தொடர்பில் ட்ரம்ப் உரையாற்றிமை பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்த நிலையில், ட்ரம்பின் உரை "நாய் குரைப்பது போலுள்ளது" என்றார் வடகொரியாவின் அயலுறவுத்துறை அமைச்சர் ரி யாங் கோ.

"ட்ரம்ப் வடகொரியாவை குறைத்து மதிப்பிடுகிறார். அவருக்கு பல ஆச்சரியங்கள் காத்திருப்பது தெரியாது. ட்ரம்புக்கு உதவியாக இருக்கும் நாடுகளுக்கு நாங்கள் வருத்தத்தை தெரிவிப்பதை தவிர வேறு ஒன்றும் இல்லை" எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம)

# அணுவாயுதத் தடைக்கு 50 நாடுகள் இணக்கம்

## வல்லரசு நாடுகள் கடும் எதிர்ப்பு



வொஷிங்டன், செப். 25
ஐக்கிய நாடுகள் சபை கொண்டுவந்துள்ள அணுவாயுதத் தடை ஒப்பந்தத்தில் சுமார் 50 நாடுகள் கைச்சாத்திட்டுள்ளன. எனினும் அணுவாயுதங்களை வைத்திருக்கும் அமெரிக்கா, ரஷ்யா உள்ளிட்ட வல்லரசு நாடுகள் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவில்லை.

உலகில் பேரழிவை உருவாக்கவல்ல அணு ஆயுதங்களை ஒழிப்பதில் பல்வேறு நாடுகள் ஆர்வம் காட்டி வருகின்றன. இதற்காக சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பே பன்னாட்டு அளவில் அணு ஆயுதப்பரவல் தடை ஒப்பந்தமும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. எனினும் இத்தகைய ஆயுதப் பரவலுக்கு தகுந்த கடிவாளம் போட முடியவில்லை. வடகொரியா, ஈரான் போன்ற நாடுகள் தொடர்ந்து அணு ஆயுதச்சோதனைகள் மற்றும் தயாரிப்பில் ஈடுபட்டு வருகின்றன. எனவே அணு ஆயுதங்களுக்கு தடை விதிக்கும் நோக்கில் புதிய ஒப்பந்தம் ஒன்றை ஐ.நா. சபை தயாரித்துள்ளது.

இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் நாடுகள் எந்தச் சூழ்நிலையிலும் அணு ஆயுதங்களைத் தயாரித்தல், சோதித்தல், விற்பனை செய்தல், பிற நாடுகளிடம் இருந்து கொள்முதல் செய்தல், வைத்திருத்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட முடியாது.

இந்த ஒப்பந்தத்தின் அவசியத்தை சமீபத்தில் விளக்கிய ஐ.நா. பொதுச்செயலாளர் குத்தேரஸ், "அணு ஆயுதம் இல்லா ஒரு உலகத்தை உருவாக்குவதற்கான நோக்கத்தில் இது ஒரு முக்கியமான படிநிலை" என குறிப்பிட்டார். ஐ.நா. பொதுச் சபை கூட்டத்தில் பங்கேற்றுவரும் 50 நாடுகளின் தலைவர்கள் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளனர்.

எனினும், அணு ஆயுதங்களை வைத்திருக்கும் அமெரிக்கா, பிரான்ஸ், ரஷ்யா போன்ற வல்லரசு நாடுகளும், அவற்றின் நட்பு நாடுகளும் இந்த ஒப்பந்தத்தை புறக்கணித்து இருக்கின்றன. இந்த விவகாரத்தில் தடை நடவடிக்கை மூலம் எந்த நன்மையும் ஏற்படாது என அவை எதிர்ப்புத் தெரிவித்து உள்ளன. (ம)

## தொடர்கின்றன கலவரங்கள்

நைபிட்டோ, செப். 25
மியன்மாரில் ரொஹிங்ய முஸ்லிம்களுக்கு எதிரான கலவரங்கள் தொடர்ந்து கொண்டு வருகின்றன. நேற்றுமுன்தினம் மட்டும் சுமார் 20 வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

கடந்த மாதம் 25ஆம் திகதி ரொஹிங்ய ஆயுதக் குழு மியன்மார் இராணுவத்தின் மீது தாக்குதல் நடத்தியதில் சுமார் 10 சிப்பாய்கள் கொல்லப்பட்டனர். இதன் பின்னர் ரொஹிங்ய மக்கள் மீதான சித்திரவதைகளை பல மடங்காக அதிகரித்துள்ளது மியன்மார் இராணுவம். லட்சக்கணக்கான ரொஹிங்யர்கள் மியன்மாரை விட்டு வெளியேறியுள்ளனர். 4 லட்சம் வரையிலானோர் பங்களாதேஷுக்குள் தஞ்சமடைந்துள்ளனர். ரொஹிங்யர்களின் இருப்பிடங்களில் நிகழ்ந்த கலவரங்கள் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன என்று மியன்மார் அரசின் தலைமை ஆலோசகர் ஆங் சாங் சூகி அறிவித்துள்ள போதிலும் அங்கு கலவரங்கள் தொடர்கதையாகியுள்ளன. மயுங்கா இயான் சங் என்ற கிராமத்திலேயே 20 வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. முஸ்லிம் பள்ளிவாசலுக்கு அருகில் நேற்று முன்தினம் குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்றும் இடம்பெற்றுள்ளது என்று சொல்லப்படுகிறது. (ம)



உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# தமிழர்களின் காத்திருப்பை புரிந்துகொள்ளட்டும் மைத்திரி

சில தினங்களுக்கு முன்னர் ஐக்கிய நாடுகள் சபையில் உரையாற்றிய இலங்கையின் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, அரசியல் தொடர்பில் சில கடும்போக்காளர்கள் துரிதமான பயணத்தை, விரைவான தீர்வுகளை எதிர்பார்க்கிறார்கள், அவர்களின் விருப்பத்துக்கு ஏற்றவாறு செயற்படமுடியாது, துரிதமான பயணம் ஆபத்தானது, கடும்போக்காளர்கள் எதிர்பார்க்கும் துரிதமான உடனடித் தீர்வுகளை வழங்குவதில் உள்ள சிரமங்களை உலக நாடுகள் புரிந்துகொள்ளவேண்டும் என்றார்.

போருக்குப் பின்னர் நிரந்தர அமைதியை ஏற்படுத்துவதில் மைத்திரி அரசு காட்டிவரும் மெத்தனம் அண்மைக் காலமாக உலக நாடுகளின் குறிப்பாக மேற்கு நாடுகளின் விசனத்திற்கு உள்ளாகி வந்தன. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரும் இலங்கையின் போக்குக் குறித்து கடுமையான கருத்துக்களைத் தெரிவித்திருந்தார்.

அதிலும், பொறுப்புக்கூறல் விவகாரங்களில் கொழும்பின் தற்போதைய அணுகுமுறை தொடர்ந்தால் அது பன்னாட்டு நீதிமன்றில் கொழும்பு நிறுத்தப்படுவதற்கான வாய்ப்பு அதிகரிக்கும் என்று எச்சரித்திருந்தார்.

தீர்வு பின்தள்ளிப் போவது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தனும் அண்மைய நாள்களில் கடுமையான கருத்துக்களைத் தெரிவித்திருந்தார்.

இத்தகைய பின்னணியில்தான் கடும்போக்குவாதிகளின் எதிர்பார்ப்புக்கு ஏற்ப தீர்வை விரைவாக வழங்க முடியாது என்று பன்னாட்டுச் சமூகத்திடம் தெரிவித்திருக்கிறார் மைத்திரிபால சிறிசேன.

தீர்வை விரைவாக வழங்கவேண்டும் என்று எந்தச் சிங்களத் தரப்பினருமே வலியுறுத்தவில்லை. தமிழர்கள் மட்டுமே வலியுறுத்துகிறார்கள். தமிழர்களிலும் கடும்போக்குவாதிகள் என அடையாளப்படுத்தப்படுவோர் தீர்வு என்று கூறிக்கொண்டு அரசும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் மக்களை ஏமாற்றுகின்றன என்று கண்டிக்கிறார்களே தவிர, தீர்வை விரைவாக அரசு வழங்கவேண்டும் என்று வலியுறுத்தும் வகையில் நடந்து கொள்ளவில்லை. தமிழ் மக்கள் விரும்பும், ஏற்றுக்கொள்ளும் தீர்வு ஒன்று எட்டப்படவேண்டும் என்பதைத்தான் அவர்கள் வலியுறுத்துகிறார்கள்.

அப்படியிருக்கும்போது கடும்போக்குவாதிகள் என்று அரச தலைவர் மைத்திரிபால யாரைக் குறிப்பிட்டுக் கூறுகின்றார் என்பது தெளிவில்லாமலேயே இருக்கிறது. தீர்வு விரைவுபடுத்தப்படவேண்டும் என்றும் அதன் மூலம் தமது இயல்பு வாழ்வு திரும்பவேண்டும் என்றும் தமிழ் மக்கள் அனைவருமே விரும்புகிறார்கள், எதிர்பார்க்கிறார்கள். அப்படியானால் தமிழ் மக்கள் அனைவரையும்தான மைத்திரிபால சிறிசேன கடும்போக்குவாதிகள் என்று குறிப்பிட்டிருக்கவேண்டும்.

விரைவான தீர்வை விரும்பும் தமிழர்கள் அனைவரையும் அப்படி கடும்போக்குவாதிகளாகக் குறிப்பிடுவதற்கு முன்னர் அரச தலைவர் ஒன்றைப் புரிந்துகொள்ளவேண்டும், அது தமது அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காண 60 வருடங்களுக்கும் மேற்பட்ட காலமாகத் தமிழ் மக்கள் காத்திருக்கிறார்கள்.

கடந்த 30 ஆண்டுகளாக நடந்த ஆயுதப் போராட்டம் மட்டுமே தமிழர்களின் அரசியல் போராட்டமல்ல. அதற்கு முன்னாள் 30 ஆண்டுகளுக்கு மேலாக அவர்கள் அரசியல் தீர்வு ஒன்றை எதிர்பார்த்திருக்கிறார்கள். அதற்காகப் போராடுகிறார்கள். அதற்கான அறவழிப் போராட்டங்கள் கொழும்பு அரசுகளால் அடக்குமுறைக்குள்ளாக்கப்பட்டபோதுதான் ஆயுத, வன்முறை வழியில் 30 ஆண்டுகள் போராடினார்கள். எனவே போர் முடிந்த 7 வருடங்களாக மட்டுமே தமிழர்கள் தீர்வுக்காகக் காத்திருக்கிறார்கள், அவ்வளவு விரைவாகத் தீர்வைத் தரமுடியாது என்று அரசியல் தலைவர்கள் கருத்துத் தெரிவிப்பது பிரச்சினையின் அடிப்படையை அவர்கள் தவறாகப் புரிந்துவைத்துள்ளார்கள் என்பதன் அடையாளமாகும்.

பிரிட்டிஷாரின் பிடியில் இருந்துவிடுபட்ட இலங்கையின் நவீன வரலாறு முழுவதுமே தமிழர்கள் அரசியல் தீர்வுக்காகக் காத்திருக்கிறார்கள் என்பது ஒரு தலைமுறையின் மொத்தக் காலம். அதற்குப் பின்னரும் தமிழர்களுக்குத் தீர்வு கிடைக்கவில்லை என்பதால்தான் அதனை விரைந்து வழங்கவேண்டும் என்று ஐ.நா. போன்ற பன்னாட்டு அமைப்புகளும் மேற்கு நாடுகளும் அழுத்தம் கொடுக்கின்றன. அது தமிழர்களின் கடும்போக்குத்தனமான எதிர்பார்ப்பு அல்ல, மிக மெத்தமான எதிர்பார்ப்பு, இன்னமும் அதனைச் சாதிக்கத் தெரியாத ஓர் இனத்தின் எதிர்பார்ப்பு என்பதை அரச தலைவர் புரிந்துகொள்ளவேண்டும்.

# அகிம்சையின் உன்னத வடிவம் தியாக தீபம்

இதயச்சந்திரன்

செப்ரெம்பர் 26 ஆம் திகதி தமிழ் தேசிய விடுதலைப் போராட்ட வரலாற்றில் பெரும் மாறுதல்களுக்கு வழி ஏற்படுத்திக் கொடுத்தன. அந்த மாற்றங்களுக்கான முயற்சியாண்மையாக திகழ்ந்த இருபெரும் போராளிகள் சாவடைந்த தினமாக அவை முதன்மை பெறுகின்றன.

### இருபெருங் கரங்கள்

கேணல் சங்கர், லெப் கேணல் திலீபன் ஆகியோர் தமிழர்களின் உரிமை மீட்புக்கான போராட்டப் பாதைகளில் ஏற்படுத்திய அரசியல். இராணுவ ரீதியான பரிணாமக் கட்டமைப்புகள் விடுதலையை முன்னோக்கிக் கொண்டு சென்றன. போராட்டத்தை தாங்கும் இருபெரும் கரங்களாக திகழ்ந்தனர்.

ஐந்து கோரிக்கைகளை இந்தியவல்லாதிக்க அரசிடம் முன்வைத்து சாகும்வரை உணவு ஒறுப்புப் போராட்டத்தை மேற்கெண்ட திலீபன் தியாகச் செம்மலாய், தற்கொடையின் தனித்துவமாய் மிளர்கிறான்.

### ஐந்து அம்சக் கோரிக்கை

- தமிழ் மண்ணில் இருந்து இலங்கை இராணுவம் விலகிக்கொள்ளவேண்டும்.
- மணலாற்றில் முடுக்கி விடப்பட்டுள்ள சிங்களக் குடியேற்றம் தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.
- வட, கிழக்கில் இடைக்கால ஆட்சி அமையும்வரை சகல மீளமைப்பு வேலைகளும் நிறுத்தப்பட வேண்டும்.
- தமிழ்ப் பிரதேசத்தில் சிங்களவர்களைக் கொண்ட பொலிஸ் நிலையங்கள் திறக்கப்படுதல் நிறுத்தப்பட வேண்டும்.
- அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்.

### ஆதிக்கச் சுயநலம்

பண நோட்டுகளில் காந்தியை அமர்த்தியிருக்கும் பாரத தேசம், திலீபனின் காந்திய வழிப் போராட்டத்தைப் புரிந்து கொள்ளவில்லை. இந்தியாவின் பிராந்திய ஆதிக்கச் சுயநலம், திலீபன் கொண்ட அகிம்சைப் போராட்டத்தின் உள்ளார்ந்த ஆத்ம வலிமையை உணர்ந்து கொள்ளும் பக்குவத்தைக் கொண்டிருக்கவில்லை. அலட்சியம் செய்து தமிழர் வேண்டிய உரிமையின் உண்மையான நியாய பூர்வ உயில் வடிவங்களை கிழித்தெறிந்தது. தன் கோர முகத்தை வெளிக்காட்டிக்கொண்டது.

### வரலாற்றின் தொடக்கம்

திலீபனின் நினைவை நெஞ்சில் இருத்தி தாயகக் கவிஞன் புதுவை எழுதிய கவிதை மொழியின் நுட்பங்கள் உயிரோடு உரிமையின் தகிப்பை விடுதலையுறச் செய்கிறது.

*"மரணம் வாழ்வின் முடிவு*
*உனக்கு மரணமே வரலாற்றின் தொடக்கம்*
*நீ ஒரு வரலாறு*
*சரித்திரமே உன் சாவு"*

நசுக்கப்படும் இனக் குழுமத்திலிருந்து ஆயுதமேந்தியபடி விடுதலைப் பணியைத் தொடங்கிய திலீபன், பாரத தேசத்துக்குப் புரியும் வகையில் முன்னெடுத்த அகிம்சை வழியான தற்கொடைப் போராட்டத்தை பலவீனத்தின் வெளிப்பாடாகவே அது கருதியது.

### தியாகத்தின் அதி உன்னத மானுடம்

அகிம்சையின் அதி உச்ச, அதி உன்னதப் போராட்ட வடிவத்தை ஏளனம் செய்த இந்தியத் தூதர் ஜே.என். டிக்சிட் பின்னாளில், சுருட்டுக் கதை சொல்லி தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தினார் என்பதை தற்போது நாம் நினைவுகூரவேண்டும். திலீபன் தனது சாவை தானே நிர்ணயித்தான். அதற்கு முன்பாக,

"நான் என் உயிரிலும் மேலாக நேசிக்கும் மக்களே..! உங்களிடம் ஒரு பெரும் பொறுப்பை விட்டுச் செல்கிறேன். நீங்கள் அனைவரும் பரிபூரணமாகக் கிளர்ந்தெழ வேண்டும்.



> "மரணம் வாழ்வின் முடிவு
> உனக்கு மரணமே
> வரலாற்றின் தொடக்கம்
> நீ ஒரு வரலாறு
> சரித்திரமே உன் சாவு"

இங்கு ஒரு மாபெரும் புரட்சி வெடிக்கட்டும். அனைவரும் எழுச்சி அடைவார்களாயின் தமிழீழம் உருவாவதை எவராலும் தடுக்க இயலாது. எமது உரிமைகளை நாமே வென்றெடுக்க வேண்டும். இதற்கு வேறு யாருடைய தயவையும் எதிர்பார்க்கக் கூடாது." என்று அவன் கூறிய செய்தி இக்காலகட்டத்திற்கும் சரிவரப் பொருத்தமுறுவதை அவதானிக்கலாம்.

இது சாவு வாக்குமூலமல்ல. போராட்டப் பாதையை அழித்திட, அமைதிப்படை கொண்டு இந்தியா விதித்த தந்திரோபாயப் பொறி வலையை அறுத்தெறிய தனது உயிரையே அகிம்சையின் ஆயுதமாக்கிய போராட்டச் சித்தனின் மக்கள் புரட்சிக்கான அறைகூவலே.

ஆனாலும் நவீன உலகின் அகிம்சைப் போராட்ட பரிமாணத்துக்குச் சாவு மணி அடித்த பெருமை பாரத தேசத்தையே சாரும். இது மிகச் சோகமான விடயம். காந்தியின் போதனைகள் மட்டுமல்ல அவர் வாழ்ந்த குடிலும் போதனைகளின்றி இந்திய நூதனசாலைகளில் சமாதியாகி விட்டன.

ஆக, எவருடைய தயவையும் நாம் எதிர்பார்த்துக் காத்திருக்கக் கூடாதென்கிற திலீபனின் கூற்று ஆத்மார்த்தமான தீர்க்க தரிசனம். தமிழர்கள் அதனை ஏற்றுக் கொள்வும், இலட்சியமாய் சிந்தனை கொள்வும் வேண்டும். அதுவே சரியான நிலைப்பாடாக அமையும். விடுதலை தரும்.

சேரலாதன்



# சாது மிரண்டால் காடுகொள்ளாது என்பதை நிரூபிப்பாரா மைத்திரி

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, இயல்பாகவே எளிமை. இரக்கம், நேர்மை ஆகிய உயர்ந்த குணங்களைக் கொண்டவர். சந்தர்ப்பமும், சூழ்நிலையும் அவரது கைகளைக் கட்டிப் போட்டிருப்பதால் தமது இயல்பான குணவியல்புகளை அவரால் வெளிப்படுத்த முடியவில்லை.

அசைக்க முடியாதவர் எனப்பெயர்பெற்றவரான மகிந்த ராஜபக்ச அதிகாரத் திமிரும், ஆணவமும் கலந்த ஒரு கலவையாக மாறியிருந்தார். அவருக்குக் கீழ் ஓர் அமைச்சராகப் பணியாற்றியவர்தான் தற்போதைய அரசதலைவர். தலைமை அமைச்சர் பதவிக்குரிய தகைமைகள் அனைத்தும் இருந்த போதிலும் மைத்திரியால் அந்தப் பதவியை நெருங்க முடியவில்லை. மகிந்தவின் சகோதரர் ஒருவர் இதற்கு முட்டுக்கட்டை போட்டுக்கொண்டிருந்தார். ஆனால் அதைக் கூடத் தமது பொறுமையால் சகித்துக் கொண்டிருந்தார் மைத்திரிபால சிறிசேன. பலதருணங்களில் அவர் அவமரியாதைக்கும் உள்ளாக்கப்பட்டிருந்தார். இறுதியில் 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தன்னை அவமதித்தவர்கள், கண்ணீர் சிந்தும் வகையில் மகிந்தவைத் தோற்கடித்து அரசதலைவரானார்.

தமிழ் மக்களின் வாக்குகளால் தாம் நாட்டின் உயர்பதவிக்கு உயர்ந்ததை அவர் மறக்கவில்லை. பலதருணங்களில் இதை அவர் வெளிப்படையாகத் தெரிவித்துள்ளார். தமிழர்களுக்கு ஏதாவது நன்மை செய்யவேண்டும் என்ற எண்ணம் அவரது அடி மனதிலுள்ளது. ஆனால் அதைச் செயலுருவில் காட்டுவதற்கு அவரால் முடியவில்லை.

## ஐ.தே.கட்சியினரது மேலாண்மைப் போக்கு

ஐக்கிய தேசியக் கட்சியினர் முழு அதிகாரமும் தமது கைகளுக்கு மாற வேண்டும் என்பதில் விடாப்பிடியாக நிற்கின்றனர். அந்தக் கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்கவும் இதற்காகவே காத்திருக்கிறார். அரச தலைவர் பதவி அடிக்கடி அவரது கனவில் வந்து சலனத்தை ஏற்படுத்தி வருகின்றது. இதனால் மைத்திரிபால சிறிசேன ஐக்கிய தேசியக் கட்சியினரிடம் இருந்து மறைமுகமான நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றார்.

பெயருக்குத்தான் கூட்டு அரசே தவிர சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக்கட்சியும் முழுமனதுடன் இணைந்து ஆட்சி புரியவில்லை என்பதுதான் உண்மையாகும்.

இன்னொருபுறத்தில் மகிந்ததரப்பினர் சகல வகையான நெருக்கடிகளையும் குறைவின்றிக் கொடுத்தவாறு உள்ளனர். மகிந்த தம்மீது சுமத்தப்பட்டுள்ள மோசடிக்குற்றச்சாட்டுக்களை ஒருபுறம் தள்ளி வைத்துவிட்டு அரசை விமர்சிப்பதிலேயே கண்ணும் கருத்துமாக ஈடுபட்டுள்ளார். இது மக்கள் மத்தியிலும் நன்கு வேலை செய்வதை அவதானிக்க முடிகின்றது. விலைவாசி ஏற்றம் வேலையின்மை, தேசிய வருமானத்தில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி, அரசதிணைக்களங்களில் இடம்பெறுகின்ற ஊழல்கள், அமைச்சர்கள் சிலர் மீதான ஊழல் குற்றச்சாட்டுக்கள், புதிய அரசமைப்பின் உருவாக்கம் ஆகியவை தொடர்பாகக் கூட்டு எதிரணியினர் தெரிவித்து வருகின்ற குற்றச்சாட்டுக்களையும் மக்கள் நம்பத்தொடங்கியுள்ளனர். இதனால் அரசின் மீது மக்களின் வெறுப்பும் அதிகரித்துச் செல்வதை அவதானிக்க முடிகிறது. இதைச் சமாளிப்பது மைத்திரிதலைமையிலான அரசுக்குப் பெரிய தொல்லையாகவே மாறிவிட்டது.

## தமது புதிய கட்சிக்கு பேராதரவு கிடைக்குமென மகிந்த நம்பவில்லை

தற்போது மகிந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியைவிட்டு விலகிப் புதிய கட்சியொன்றை அமைத்துவிட்டார் எனக் கூறப்பட்டாலும் அதை உறுதியாக நம்ப முடியவில்லை. ஏனென்றால் இந்த முடிவு அவருக்குப் பாதகமாகவே அமைந்துவிடும். பல ஆண்டுகளாக சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு வாக்களித்துப் பழகிப் போன மக்கள் புதிய கட்சியை ஆதரிப்பதில் தயங்கவே செய்வார்கள். இது மகிந்தவுக்கும் தெரியும். ஆனால் சந்தர்ப்பத்துக்கு ஏற்ற வகையில் செயற்படுவதில் வல்லவரான அவர் தமது முடிவுகளை மாற்றினாலும் அதிசயப்படுவதற்கு ஒன்றுமில்லை. இந்த நிலையில் மைத்திரிபால சிறிசேனவால் தனியாக இயங்கி எதையாவது சாதிக்க முடியுமா? என்பது சந்தேகமே. அரச தலைவருக்கான தேர்தலின் போது மக்கள் அவருக்கு வழங்கிய ஆதரவை எதிர்காலத்திலும் எதிர்பார்க்க முடியாது. குறிப்பாகத் தமிழ் மக்கள் ஆதரவு வழங்குவார்களா? என்பது சந்தேகமே. தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படாத நிலையே தொடருவதால், அவர்கள் அரச தலைவர் மீதும், அரசின் மீதும் வெறுப்படைந்த நிலையில் காணப்படுகின்றனர்.

மைத்திரிபால சிறிசேன தமது அதிகாரங்களைத் தவறாகப் பயன்படுத்துகின்றார் என்பதற்கான ஆதாரங்கள் எவற்றையும் காண முடியவில்லை. தமது உடன் பிறந்த சகோதரன் ஒருவர் வாகன விபத்தொன்றில் இருவர் உயிரிழக்கக் காரணமாக இருந்ததை அறிந்துகொண்ட வேளையில் தமது தம்பிக்குச் சார்பாக அவர் நடந்து கொள்ளவில்லை. மாறாக உரிய சட்ட திட்டங்களைத் தமது சகோதரர் விடயத்திலும் கடைப்பிடிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். இது சட்டத்தை மதிக்கின்ற அவரது உயர்ந்த குணத்தை எடுத்துக் காட்டுகின்றது.

## சிங்கள ஆட்சியாளர்களது நிர்வாகத்தில் இனவாதமே மேலோங்கி இருந்தது

டி.எஸ். சோனநாயக்க தொடக்கம் மைத்திரிபால சிறிசேனவரை பல தலைவர்கள் இந்தநாட்டை ஆட்சிசெய்துள்ளனர். இவர்களில் பலர் இனவாதிகளாகவே இருந்துள்ளனர். நாடு பெரும் சோதனைகளையும், வேதனைகளையும் எதிர்கொண்டதற்கு இதுவே முதன்மைக் காரணமாகும். இன்று போர் முடிவுக்கு வந்து அமைதியானதொரு சூழ்நிலை நாட்டில் காணப்படுகின்றது. அமைதியான, ஆர்ப்பாட்டமில்லாத அரச தலைவர் ஒருவரும் வந்து வாய்த்திருக்கிறார். இவர் சுதந்திரமாகச் செயற்படுவாராயின், நாட்டில் நல்ல மாற்றங்களை எதிர்பார்க்க முடியும்.

இனவாதத்துக்கும், சந்தர்ப்பவாத அரசியலுக்கும் மக்கள் சமாதி கட்டவேண்டும். இனங்களுக்கிடையில் புரிந்துணர்வு ஏற்படுத்தப்படல் வேண்டும் இனவாதம் என்பது ஒரு கொடிய நோய் என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். சிறுபான்மையினரும் இந்த நாட்டின் பிரசைகள் என்ற எண்ணம் பெரும்பான்மையினரிடத்தில் தோன்றவேண்டும். அரச தலைவர் தமது அதிகாரங்களைத் தயங்காது பயன்படுத்துவதன் மூலமாக நாட்டுக்குக் கேடு விளைவித்துவருபவர்களை அடக்கி ஒடுக்கிவிட முடியும். சாதுமிரண்டால் காடுகொள்ளாது என்பார்கள். இதை மைத்திரிபால சிறிசேன நிரூபிக்க வேண்டும்.



## ஆசிரியருக்கான கடிதம்

### உள்ளூர் உற்பத்தி முயற்சிகள் ஊக்குவிக்கப்படுமா?

- மதுசாரம் நிறையப்பெற்ற மதுபானங்களுக்குப் பதிலாக, பியர், வைன் உற்பத்தி ஊக்குவிப்பு: அமைச்சர் ஜோன் அமரதுங்க நாடாளுமன்றில் தெரிவிப்பு.
- இலங்கையில் ஆண்டுதோறும் 713,048 மெற்றிக் தொன் சீனி நுகர்வு
- ஒரு வருடத்தில் ஒரு கோடி ரூபா செலவில் சமூகசேவை செய்யும் பனை, தென்னைவள கூட்டுறவுச் சங்கசமாசத்துக்கு நிபுணத்துவம் சார்ந்தோரின் ஆதரவு கிடைக்கப் பெற்றால் உள்ளூர் உற்பத்தியிலும் ஏற்றுமதியிலும் அதீத வளர்ச்சியடையலாம் எனச் சமாசத் தலைவர் தெரிவிப்பு.

என்கிற மூன்று செய்திகளும் அண்மையில் எனது கவனத்தை ஈர்த்தன. இவை ஒன்றுடன் ஒன்று வெளிப்படையாகத் தொடர்பற்றுக் காணப்படினும், உள்ளூர் உற்பத்திகள் என்ற வகையில் அவற்றுக்கிடையே ஒரு தொடர்பு இழையோடுவதை அவதானிக்கலாம். நாம் பனை, தென்னை வளங்களை உச்ச அ+ என்கிற செய்தி இந்த அறிவிப்புகளின் ஊடாகச் சொல்லப்பட்டிருப்பதனை உய்த்துணரலாம்.

713,048 மெற்றிக் தொன் சீனி நாட்டு மக்களின் உடல் நலத்தைக் கெடுக்க உதவுகின்றது. அதேவேளை பனங்கற்கண்டு, பனஞ்சீனி, கருப்பட்டி போன்றவை எமது உடல்நலத்துக்குத் தீங்கில்லாதவை என்பதையும் உணர்ந்து, அதன் உற்பத்தியை அதிகரிக்கவேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். இதனூடாக வைத்தியத்துக்குச் செலவு செய்யும் பணத்தையும் மிச்சப்படுத்தலாம்.

713,048 மெற்றிக் தொன் சீனிக்குப் பதிலாக அதில் ஒரு வீதமான பனம் உற்பத்திப்பொருள்களை எமது பிரதேசத்தில் உற்பத்தி செய்வதன் ஊடாக எமது பிரதேச பொருளாதார வளத்தைக் கட்டியெழுப்பலாம். அதற்கான ஆதரவை தென்னை, பனை, கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்க மாகாண அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அதேபோன்று மதுவகைகளும், பியர் வைன் போன்றனவும் எமது பிரதேசத்துக்குள் எடுத்துவருவதனைக் குறைத்துப் பதிலீடாக உடலுக்கு பெருமளவில் பாதிப்பில்லாத பனங்கள், தென்னங்கள் என்பவற்றை பழுதடையாது காத்துப் பயன்படுத்த வழி வகை செய்வதனூடாக உடல் நலன் ஓம்பப்படுவதுடன் பொருளாதாரத்தையும் கட்டியெழுப்ப இயலும்.

சம்பந்தப்பட்ட தரப்பினர்கள் இது குறித்து அக்கறை காட்டிச் செயற்படுவார்களா?

*உள்ளூரான்.*

# கடும்போக்காளர்கள் சகல இனங்களிலும் இருக்கின்றனர்

## லக்ஸ்மன் கிரியெல்ல ஆதங்கம்

கொழும்பு, செப். 25

அடிப்படைவாதிகள் அனைத்து நாடுகளிலும் இருக்கின்றார்கள். அனைத்து இனங்களிலும் இருக்கின்றார்கள். இவ்வாறு சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

புதிய அரசமைப்பில் 'ஏக்கிய' என்ற சொல்லுக்குப் பதிலாக 'எக்ஸத்' என்று சொல் உள்ளடக்கப்பட வேண்டும்.

இனப் பிரச்சினைக்கு அதனூடாகவே தீர்வைக் காண முடியும் என்று வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கூறியுள்ளார் என்று சிங்கள ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல மேற்கண்டவாறு கூறினார்.

'எங்கும் அடிப்படைவாதிகள் உள்ளனர். அனைத்து இனங்களிலும் அடிப்படைவாதிகள் இருக்கின்றார்கள். சிங்களவர்களிலும் அதில் விதிவிலக்கு இல்லை' என்று கிரியெல்ல பதிலளித்தார். (5)

# மாகாணசபைகளுக்கு வழங்கிய அதிகாரங்களை மீளப் பெறவும் ஏற்பாடு

## அரசமைப்பு உருவாக்க நிபுணர் ஜயம்பதி தெரிவிப்பு

அரசமைப்பின் ஊடாக மாகாண சபைகளுக்கு வழங்கப்படும் அதிகாரப் பகிர்வினால் பிரிவினைவாதம் உருவாகாது. மாகாணங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை திருப்பி எடுப்பதற்குக் கட்டுப்பாட்டுடனான ஏற்பாடுகளும் உண்டு. இவ்வாறு அரசமைப்பு உருவாக்கத்தில் ஈடுபட்ட நிபுணரும், ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி ஜயம்பதி விக்கிரமரத்ன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதிய அரசமைப்பின் ஊடாக மாகாணங்களுக்கு அதிகாரங்கள் வழங்கப்படுகின்றது. அதிகாரம் வழங்கப்படுவதால், பிரிவினைவாதம் உருவாக மாட்டாது. இதனால் இது தொடர்பில் அச்சம் கொள்ளத் தேவையில்லை.

தற்போதைய அரசமைப்பில் இல்லாத ஒரு அம்சம் புதிய அரசமைப்பில் சேர்க்கப்பட்டுள்ளது. மாகாணங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தைக் கொண்டு, நாட்டின் தேசிய நலனுக்கு எதிராகச் செயற்படுவதை அடையாளம் கண்டால், அந்த அதிகாரங்களை மீளப் பெற்றுக் கொள்ள முடியும். மாகாணசபையையே கலைத்துவிடவும் முடியும். எனவே இது தொடர்பில் பீதியடையத் தேவையில்லை - என்றார். (5)

# புதிய அரசமைப்புக்கு மக்களின் கருத்து மிகவும் முக்கியம்

## அஸ்கிரியபீடம் வலியுறுத்து

புதிய அரசமைப்பைத் தயாரிக்கும் போது மக்களின் கருத்தைக் கேட்டறிந்து கொள்வது அவசியமாகும். இவ்வாறு அஸ்கிரிய பீட போசகர் ஆனமடுவே சிறீ தம்மதஸ்ஸி தேரர் தெரிவித்தார்.

புதிய அரசமைப்பு உருவாக்குவதற்கு நியமிக்கப்பட்ட வழிநடத்தல் குழு தனது இடைக்கால அறிக்கையை கடந்த 21ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தது. இந்த இடைக்கால அறிக்கை, சபைத் தலைவர் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்லவினால், அஸ்கிரிய பீடத்தினரிடம் நேற்று முன்தினம் ஒப்படைக்கப்பட்டது. அத்துடன், மல்வத்துபீட மகாநாயக்கர் திப்பட்டுவாவே சிறி சுமங்கள தேரரிடமும் கையளிக்கப்பட்டது.

இதன்போதே, சிறீ தம்மதஸ்ஸி தேரர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். (5)



# அதிகாரப் பகிர்வுக்கு இரண்டு கட்சிகளும் இணங்கியதே வெற்றி

## அமைச்சர் ராஜித யாழ்ப்பாணத்தில் உரை

யாழ்ப்பாணம், செப். 25

நாட்டில் கொண்டுவரப்படவுள்ள புதிய அரசமைப்பில் நாட்டின் இரண்டு பிரதான கட்சிகளும் அதிகாரப் பகிர்வுக்கு முழுமையாக ஆதரவு வழங்கியிருப்பதே எமக்குக் கிடைத்த வெற்றி என்று சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சமர்ப்பிக்கப்பட்டுள்ள இடைக்கால அறிக்கை தொடர்பாக அரசியல் கட்சிகள் கலந்துரையாடி ஓர் இறுதி முடிவுக்கு வருவார்கள். அந்தக் கட்சிகளுடைய கருத்துக்களை இரண்டு வாரங்களுக்குள் பெற்று அரசமைப்பை இறுதியாக்கலாம் என எதிர்பார்க்கின்றோம்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி கூட அதிகாரப் பகிர்வு முன்மொழிவுகளுக்கு உடன்பட்டிருக்கின்றது. ஒரே ஒரு விடயத்தில் மாத்திரமே அந்தக் கட்சியானது ஏனைய கட்சிகளிலிருந்து வேறுபட்டுள்ளது. அதாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரச தலைவர் முறை பற்றிய விடயத்திலேயேயாகும்.

நிறைவேற்று அரச தலைவர் முறை நீக்கப்பட வேண்டுமா இல்லையா அல்லது அது இருந்தால் அது என்ன வடிவத்தில் இருக்க வேண்டும்? அரச தலைவர் மக்களால் தெரிவு செய்யப்பட வேண்டுமா அல்லது நாடாளுமன்றத்தால் தெரிவு செய்யப்பட வேண்டுமா அல்லது அரச தலைவர் முறையை நீக்க வேண்டுமா என்ற விடயத்தில் குழப்பம் தொடர்கின்றது.

ஆனாலும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியானது அதிகாரப் பகிர்வு முன்மொழிவுகளை ஆதரித்துக்கொண்டிருப்பது எமக்கு மகிழ்ச்சியளிக்கின்றது. பிரதான இரண்டு கட்சிகளுமே அதிகார பகிர்வு விடயத்தில் முதன் முதலாக உடன்பட்டு கொண்டிருப்பது புதிய அரசமைப்பு முயற்சிகளில் நாம் பெற்றுக்கொண்டுள்ள முதலாவது வெற்றியாகும் - என்றார். (5.32)

# உள்ளூராட்சி தேர்தலால் அரசுக்கு புதிய தலையிடி

கொழும்பு, செப். 25

2018ஆம் ஆண்டு ஜனவரியில் நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் தெரிவுசெய்யப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை 30 சதவீதத்தால் அதிகரிக்கப்படவுள்ளதால் உள்ளூராட்சிச் சபைகளை மறுசீரமைக்க வேண்டிய நிலைக்கு அரசு தள்ளப்பட்டுள்ளது.

இலங்கையில் 335 உள்ளூராட்சிச் சபைக்ள் காணப்படுகின்றன. கடந்த 2015 ஆம் ஆண்டு அவை கலைக்கப்படும்போது 4 ஆயிரத்து 486 உறுப்பினர்கள் அங்கத்தவர்களாக இருந்தனர்.

நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டுள்ள உள்ளூராட்சிச் சபைகள் சட்ட வரைவின் அடிப்படையில் தற்போது 6 ஆயிரத்து 619 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படவுள்ளதால் கட்டட வசதி முதல் நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்வதிலும் சிக்கல் நிலை தோன்றியுள்ளது.

விரைவில் புதிதாக அமைக்கப்படவுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான கட்டடங்களை அமைக்கவும், நிர்வாக வசதிகளை மேற்கொள்ள சிக்கல் நிலை தோன்றியுள்ள உள்ளூராட்சி சபைகளை மறுசீரமைப்பதற்கும் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

உள்ளூராட்சி ஆட்சிமுறையில் மேற்கொள்ளப்படவுள்ள வினைத்திறன்கள் இந்த முறை வரவு - செலவுத் திட்டத்தில் அதிகமான கரிசனை இடம்பெறும் என்று எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

அரசுக்கு இந்த விடயங்கள் புதிய தலைவலியாக உள்ளது எனவும் அரசின் தகவல் அறியும் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது. (5)

# ஓய்வைக்கழிக்கவும் இராணுவத்தினர் வெளிநாடு செல்ல முடியாத நிலை

## மகிந்த அணி உறுப்பினரின் கவலை இது

கொழும்பு, செப். 25

போர்க்குற்றச்சாட்டுக் காரணமாகப் படையினர் சிகிச்சைக்காகவோ ஓய்வைக் கழிக்கவோ அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறு மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் இந்திக அனுருத்த தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது நாடு இன்று ஆபத்தில் சிக்கியுள்ளது. 30 வருடப் பயங்கரவாதத்தால் அழிந்த இந்த நாட்டைக் காப்பாற்றிய படையினருக்கு எதிராகப் பன்னாட்டுச் சதி மேற்கொள்ளப்படுகின்றது. அவர்களைப் போர்க்குற்ற நீதிமன்றில் நிறுத்துவதற்குத் திட்டமிடப்படுகின்றது. முதல் கட்டமாக முன்னாள் இராணுவத் தளபதி ஜெகத் ஜயசூர்யாவுக்கு எதிராகப் போர்க்குற்ற வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஏனைய படையினருக்கும் இந்த நிலை விரைவில் ஏற்படும். சரத் பொன்சேகா அவரது தனிப்பட்ட நலனுக்காக முன்னாள் இராணுவத் தளபதி ஜெகத் ஜயசூரியவைப் பன்னாட்டுப் போர்க்குற்ற நீதிமன்றில் காட்டிக் கொடுக்கின்றார். தமிழீழத்தைக் கோரிப் போராடும் புலம்பெயர் தமிழர்களின் தேவைக்கு ஏற்ப சரத் பொன்சேகா செயற்படுகின்றார்.

போர்குற்றச்சாட்டுக்காரணமாகப் படையினர் சிகிச்சைக்காகவோ. ஓய்வைக் கழிக்கவோ அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அவ்வாறு சென்றால் அவர்கள் கைது செய்யப்படக்கூடிய ஆபத்து அந்த நாடுகளில் உள்ளது.

27ஆயிரம் படையினர் உயிரை இழந்து 14 ஆயிரம் படையினர் அங்கவீனமானதுதான் இந்தப் பயங்கரவாதத்தை ஒழித்து இந்த நாட்டு மக்கள் இப்போது நிம்மதியாக வாழ்வதற்கு வழியேற்படுத்தினர். இன்று அந்தப் படையினரின் நிலமை பரிதாபகரமானது.

போலிக் குற்றச்சாட்டுக்களைச் சுமத்திப் படையினரைச் சிறையில் அடைக்கின்றனர். பயங்கரவாதிகளைச் சிறையில் இருந்து விடுவிக்கின்றனர். உயிரிழந்த புலிகளின் குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்குவதற்கும் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இந்த அரசு புலிகளின் நலன்கள் மீதே அக்கறை கொண்டு செயற்படுகிறது.

மகிந்த ஆட்சி தொடர்ந்திருந்தால் நாட்டுக்கு இந்த நிலமை வந்திருக்காது.

மகிந்தாவின் ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட சதியில் இந்த நாட்டு மக்கள் அநியாயமாகச் சிக்கி இருக்கின்றனர் என்பதை மக்கள் இப்போது உணர்ந்துள்ளனர் - என்றார். (5.3)

# எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு 'செக்' வைக்கிறது மகிந்த அணி

கொழும்பு, செப். 25

கூட்டு அரசமைப்பதற்காக ஐக்கிய தேசியக் கட்சிக்கும், சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையே ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கை எதிர்வரும் டிசெம்பர் மாதத்துடன் முடிவுக்கு வருகின்றது. அதை அடிப்படையாகக் கொண்டு எதிர்க்கட்சித் தலைவர் பதவியைத் தமதாக்கிக் கொள்வதற்கு மகிந்த அணி திட்டம் போட்டு வருவதாக அறியமுடிகின்றது.

இது தொடர்பில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் மகிந்த அணி விரைவில் பேச்சு நடத்தும் எனவும் தெரியவருகின்றது.

2015ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் எந்தவொரு கட்சியாலும் பெரும்பான்மையைப் பெறமுடியாது போனமையால் ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து கூட்டு அரசை அமைத்திருந்தன.

கூட்டு அரசு அமைய பெற்றது முதல் ஐக்கிய தேசியக் கட்சிக்கும், சுதந்திரக் கட்சிக்கும் இடையில் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டாலும், ஆட்சி முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. சுயாதீனமாகச் செயற்பட்டுவரும் சுதந்திரக் கட்சியிலுள்ள மகிந்த ஆதரவு அணியினரால் சுதந்திரக் கட்சியின் அரசியல் இருப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

முன்னாள் அரச தலைவர் தலைமையிலான பொது எதிரணி தாமரை மொட்டு சின்னத்தில் தனியாகத் தேர்தலைச் சந்திக்க அனைத்து வியூகங்களையும் வகுத்து வருகின்றது. தேர்தல் அறிவிப்பு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்ட பின்னர் அரசிலுள்ள சிலர் மகிந்தவுடன் சங்கமிக்கலாம் என்று எதிர்பார்க்கப்பட்டு வருகின்றது. இதைத் தடுப்பதற்குரிய முயற்சியில் மைத்திரி அணியும் தீவிரம்காட்டிவருகின்றது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் பேரம் பேசுவதற்குரிய யோசனையை தினேஷ் குணவர்தனவிடம் மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் முன்வைத்துள்ளனர். எதிர்க்கட்சித் தலைவர் பதவியைப் பெறுவதற்கு வழிவகைகளை அரச தலைவர் ஏற்படுத்திக் கொடுப்பாரானால் அவருடன் இருக்கும் உறுப்பினர்களை இணைக்கமாட்டோம் என்ற உத்தரவாதத்துடன் தான் இந்தப் பேச்சை முன்னெடுப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. எனினும், மைத்திரி தரப்பில் இருந்தும் இதற்கு இன்னும்சாதகசமிக்ஞைகள் காட்டப்படவில்லை. (5)

# புதிய தேர்தல்முறைமையால் கூட்டமைப்பு, மகிந்த அணி வாக்குகளைப்பெற முடியாது

## கணக்குப் போடுகிறது ஐ.தே.க

தொகுதிவாரி முறைமையால் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் மகிந்த அணி ஆகிய கட்சிகளுக்கு இனி வரும் தேர்தல்களில் வாக்குகளை பெற முடியாது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சி சபைத் தேர்தலை நாம் வேண்டுமென்றே ஒத்திப்போடவில்லை. கடந்த ஆட்சியில் மேற்கொள்ளப்பட்ட எல்லை நிர்ணயக் குளறுபடியே இதற்கு காரணம். மகிந்தவின் தேவைக்கு ஏற்பவே எல்லை நிர்ணயம் செய்யப்பட்டது அதைத் திருத்துவதற்காகவே தேர்தலை ஒத்திப்போட்டோம்

அனைவராலும் எதிர்பார்க்கப்பட்ட உள்ளூராட்சி திருத்தச் சட்டம் இப்போது நிறைவேற்றப்பட்டுள்ளது. அடுத்தது தேர்தல்தான். தேர்தலுக்கு அனைவரும் தயாராகுங்கள். இந்தத் தேர்தலில் வெற்றி வாய்ப்பு எமக்கே அதிகம். உள்ளூராட்சி சபைகளில் எமது ஆட்சி மலரும்.

புதிய தேர்தல் முறைமையால் ஐக்கிய தேசிய கட்சி, சுதந்திரக் கட்சி மற்றும் மக்கள் விடுதலை முன்னணி ஆகிய கட்சிகளுக்கு மாத்திரம்தான் வாக்குகள் கிடைக்கும். தொகுதிவாரி முறைமையால் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் மகிந்த அணியால் இனி வரும் தேர்தல்களில் வாக்குகளை பெற முடியாது.

ஏழை மக்களின் பணத்தைக் கொள்ளையடித்த மகிந்த தரப்பினரால் மீண்டும் ஆட்சியைப் பிடிப்பதற்கு இந்த நாட்டு மக்கள் ஒருபோதும் அனுமதிக்க மாட்டார்கள். இவர்களின் அரசியல் வாழ்க்கை முடிந்துவிடும். இனி வரும் அனைத்துத் தேர்தல்களிலும் நாமே வெற்றி பெறுவோம்.

மக்கள் எமக்கு ஐந்து வருட ஆணையை வழங்கியுள்ளனர். முதல் இரண்டு வருடங்கள் மிகவும் கடினமான காலமாக அரசுக்கு இருந்தது. இப்போது அந்தக் கடினத்திலிருந்து தப்பிவிட்டோம். 2020ஆம் ஆண்டு அல்ல 2025ஆம் ஆண்டு வரை செல்வதுதான் எமது இலக்கு. அந்த இலக்கை நோக்கி நாம் செல்கிறோம். அதை எவராலும் தடுக்க முடியாது. எமது பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் எல்லாம் இனித்தான் மக்களால் உணரக் கூடியதாக இருக்கும் - என்றார். (5,3)

**வேலை ஆள்கள் தேவை**

யாழ்ப்பாணத்தில் உள்ள Hotel ஒன்றுக்கு சமையலில் முன் அனுபவம் உள்ள சமையல் ஆள் தேவை. (உணவு மற்றும் தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும்)

**076 852 2913**

**விற்பனைக்கு**

யாழ் ஆஸ்பத்திரி வீதியில் பஸ்தரிப்பிடத்திற்கு முன்பாக 30அடி அகலமும் 240 அடி நீளமும் (2½ பரப்பு) கொண்ட வெற்றுக் காணியும், யாழ் பிறவுண் வீதியில் 2½ பரப்புக் காணியும் யாழ் கஸ்தூரியார் வீதியில் 3 பரப்புக் காணியும், யாழ் சிவப்பிரகாசம் வீதியில் 4 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.

**077 723 2535**

**மணமகன் தேவை**

RC மதம் 1981 இல் பிறந்த மணமகளிற்கு நிரந்தர தொழிலுடைய மணமகன் உள்நாட்டிலோ வெளிநாட்டிலோ தேவை.

**077 071 1898**

# பிக்குகளில் அடிப்படைவாதிகளும் உண்டு

## கூறுகிறார் சந்திரிகா அம்மையார்

கொழும்பு, செப். 25

பௌத்த பிக்குமார் மத்தியிலும் சில அடிப்படைவாதிகள் இருப்பதாக முன்னாள் அரச தலைவர் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

நிட்டம்புவ பிரதேசத்தில் நடைபெற்ற வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இனங்களுக்கு இடையில் ஐக்கியத்தை ஏற்படுத்தப் பெரிய சேவைகளை மேற்கொண்டு வரும் பௌத்த பிக்குமாரும் இருக்கின்றனர்.

சிங்கள பிள்ளைகளுக்குத் தமிழ் கற்பிக்கும் நாயக்க தேரர் ஒருவரை நாங்கள் அம்பாறையில் சந்தித்தோம். இப்படி மக்கள் மத்தியில் ஐக்கியத்தை ஏற்படுத்தப் பெரிய சேவைகளைச் செய்யும் பௌத்த பிக்குமார் உள்ளனர்.

பௌத்த பிக்குகள் அனைவரும் சிங்கள அடிப்படைவாதிகள் என்று நாம் எண்ணுகிறோம். அப்படியான சிலர் இருக்கின்றனர் என்பது உண்மை.

சில அடிப்படைவாதி கள் இருந்தாலும் நாட்டில் பெரும்பா ன்மையான பிக்குமார் அடிப்படைவாதிகள் அல்ல - என்றார். (5)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

எமது கல்லூரியின் ஆங்கில ஆசிரியையாக கடமையாற்றி ஆறு வருட சேவையினை இனிதே நிறைவு செய்து 22.09.2017 இல் தனது 56 ஆவது அகவையில் சுயவிருப்பில் ஓய்வு பெறும்

திருமதி

**ஜெயலட்சுமி மகேஸ்வரன்**

அவர்களை வளமும் நலமும் பெற்று பல்லாண்டு காலம் மன மகிழ்வுடன் வாழ எல்லாம் வல்ல செருக்கல் விநாயகர் துணை நாடி அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

சேவையாளர் சங்கம்
யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி.



**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

ஈச்சமோட்டையை வதிவிடமாகக் கொண்ட யாழ்.பரியோவான் கல்லூரியின் பழைய மாணவன்

**கனகரத்தினம் சிவபாதசுந்தரம்**

அவர்கள் இலங்கை நீதி அமைச்சினால் சமாதான நீதிவான் பதவி வழங்கப்பட்டு 12.09.2017 அன்று யாழ்.மாவட்ட நீதிவான் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டமையையிட்டுப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:- பழைய மாணவர்கள்,
பரியோவான் கல்லூரி, யாழ்ப்பாணம்.



**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

நாளை (26.09.2017)
செவ்வாய்க்கிழமை
BMICH இல்
நடைபெறவுள்ள நிகழ்வில் எமது வித்தியாலய பிரதி அதிபரும் தமிழ் ஆசானுமாகிய

**செல்வராசா சுந்தரலிங்கம்**

அவர்கள் இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III (தமிழ்) இல் பதவியேற்பதையிட்டு ஆசி கூறி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:-
ஆசிரியர் நலன்புரி சங்கம்
மு/ பாரதி மகாவித்தியாலயம்.






**ICBT HND QUANTITY SURVEYING**

TVEC REGISTERED

» Entry Qualifications
- G.C.E. A/L or Equivalent
- Certificate in related field

» Duration: 2 Years

Why Study ICBT ?
- Qualified Lecturer Panel
- High Quality Learning Experience
- Cafeteria/Library/Computer Laboratory/ Recreation Area/Modern Lecture Halls.
- Easy Payment schemes

BIRMINGHAM CITY University

Accredited by RICS

**BSc (Hons) Quantity Surveying**

» Entry Qualifications
- HND or Equivalent Qualifications Acceptable to the University
- Progression Routes for NDT, NDES(Civil), C&G (Civil), NCT(Civil / QS)

UGC RECOGNIZED

» Duration: 1 Year

Week End Part Time Classes

0770 746 553 | 0769 289 784

ICBT CAMPUS JAFFNA
580, Hospital Rd., Jaffna
Tel: (+94)214 777 888
Fax: (+94)654 777 890
Email : jaffna@icbtcampus.edu.lk

National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013
Gold Award Winner
Education Service Sector




# கமலாசினி வித்தியாலயத்தில் மாணவர் நாடாளுமன்ற அமர்வு

தென்மராட்சி, செப்.25

மட்டுவில் கமலாசனி வித்தியாலய மாணவர் நாடாளுமன்ற பதவியேற்பும் கன்னி அமர்வும் இன்று திங்கட்கிழமை பி.ப.1.45 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.

சபாநாயகர், அவைத் தலைவர், தலைமை அமைச்சர் மற்றும் அமைச்சர்கள் பதவியேற்பார்கள்.

வித்தியாலய அதிபரும் மாணவர் நாடாளுமன்றச் செயலாளர் நாயகமுமான ஐ.தேவராஜன் தலைமையில் அமர்வுகள் நடைபெறும்.

முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சுப்பிரமணியம் சுந்தரசிவமும், சிறப்பு விருந்தினராக வித்தியாலய பழைய மாணவியும் துணுக்காய் கல்வி வலய ஓய்வுநிலை தமிழ்ப் பாட உதவிக் கல்விப் பணிப்பாளருமான திருமதி வளர்மதி நகுலேஸ்வரராஜா, சிறப்புறு விருந்தினராக தேசிய சேமிப்பு வங்கியின் ஓய்வுநிலை கிளை முகாமையாளரான வ.தர்மகுலசிங்கம் ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

(ய-9)

## மரண அறிவித்தல்

## விஸ்வலிங்கம் இராஜேஸ்வரன்



பிறப்பு 14.02.1940 இறப்பு 24.09.2017

வேதரடைப்பு, காரைநகரைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், ஆனைப்பந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட விஸ்வலிங்கம் இராஜேஸ்வரன் நேற்று (24.09.2017) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் நாகேஸ்வரி (கமலா)யின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம் - மாணிக்கம் தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான தளையசிங்கம் - கனகாம்பாள் தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்றவர்களான வி.அருளானந்தம் (அதிபர்), பாலசுப்பிரமணியம், கனகேந்திரம் (அதிபர்) மற்றும் தர்மபாலசிங்கம், சிவபாக்கியம் (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரரும் மதியழகி (கனடா), மதிமதனி (பிரான்ஸ்), தர்மினி (கொலன்ட்), கல்யாணி (கனடா) ஆகியோரின் தந்தையும் பிரியா (வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை), பிரணவி, கயானி, சபீனா, விஷாகன், அபிஷேக், அஸ்வினி, அபிநயா, சஜ்ஜிவ், சாஜீப் ஆகியோரின் பேரனும் த.பாலசுந்தரத்தின் (ஜேர்மனி) மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**122/4, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.**

**தகவல்: குடும்பத்தினர். 0212227352**












# யாழ். இந்துக்கல்லூரியில் குருதிக்கொடை முகாம்

யாழ்ப்பாணம், செப்.25

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி யூத்விங் (2012 உயர்தரம்) மாணவர்களின் ஏற்பாட்டில் குருதிக்கொடை முகாம் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நேற்று இடம்பெற்றது.

கல்லூரியின் பழைய மாணவரான தியாக தீபம் இராசையா பார்த்தீபன் (திலீபன்) இந்தக்காலப் பகுதியில் மக்களுக்காக உணவை ஒறுத்து உயிர்த் தியாகம் செய்தார். அவரின் நினைவேந்தல் இடம்பெறும் வேளையில் குருதிக் கொடை முகாம் முன்னெடுக்கப்பட்டது.

நிகழ்வில் தெல்லிப்பழை குருதி வங்கி மருத்துவர் ம.பிரதீபன் தலைமையிலான குழுவினர் பங்கேற்றனர்.

(ய-10)

**காணி தேவை**


யாழ். மாநகரப் பகுதியினுள்
1½- 2 பரப்புக் காணி உடனடியாக தேவை.
தரகர் வேண்டாம்

**தொடர்பு :- 076 989 2761**

# மரண அறிவித்தல்

# வல்லிபுரம் சிவயோகநாதன்

**(ஓய்வு பெற்ற நிர்வாக உத்தியோகத்தர் - வீடமைப்புத்திணைக்களம், சமாதான நீதிவான்)**



யாழ்ப்பாணம் சங்கானையைப் பிறப்பிடமாகவும், மானிப்பாய் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் சிவயோகநாதன் ( ஓய்வு பெற்ற நிர்வாக உத்தியோகத்தர் - வீடமைப்புத்திணைக்களம், சமாதான நீதிவான்) நேற்று (24.09.2017) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - இராசம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - கண்மணி தம்பதியரின் அன்புமருமகனும் நோனாம்பிகையின் அன்புக்கணவரும் ஜானகி (துறைத் தலைவி நிதியியலும், கணக்கியலும் துறை சிரேஷ்ட விரிவுரையாளர், வவுனியா வளாகம் யாழ். பல்கலைக்கழகம்), வாசுகி(BSE,கனடா), கலாநிதி முகுந்தன் (பொறியியலாளர் கனடா) ஆகியோரின் அன்புத்தந்தையும் சாமுவேல் தேவரூபன் (வர்த்தகர், வவுனியா), கருணபாலன் (Computer Programmer,கனடா), கோமதி (கனடா) ஆகியோரின் அன்புமாமனாரும் ஜெகப்பிரகாஷன் (மாணவன் - வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம்), ஜெகப்பிரியா (மாணவி வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி), யுவானி (கனடா), வாமணன், யாதவன் (கனடா) ஆகியோரின் அன்புப்பேரனும் கமலநாதன் (ஓய்வு பெற்ற அதிகாரி, கனிப்பொருள் மணல் கூட்டுத்தாபனம் புல்மோட்டை), கணேசநாதன் (லண்டன்), சண்முகநாதமுதலி (ஓய்வு பெற்ற முகாமையாளர் - மக்கள் வங்கி), ஸ்ரீபத்மநாதன் (லண்டன்), நல்லைநாதன் (லண்டன்), மகேந்திரன் (சுவிஸ்),. இரத்னமலர் (வவுனியா) காலஞ்சென்ற சுப்பிரமணியம் (லண்டன்) ஆகியோரின் அன்புச்சகோதரரும் றஞ்சியின் வளர்ப்புத்தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை இன்று (25.09.2017) திங்கட்கிழமை பி.ப. 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்ற பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**'நாகலிங்க வாசா'**
**மானிப்பாய் மேற்கு, மானிப்பாய்.**

**தகவல்: குடும்பத்தினர்.**



# மீண்டும் நஸ்ரியா

மலையாள நடிகர் பகத் பாஷிலை திருமணம் முடித்த பிறகு நடிப்பதில் இருந்து ஓய்வு பெற்றிருந்த நடிகை நஸ்ரியா மீண்டும் சினிமாவில் நடிக்க வருகிறார்.

'நேரம்' படத்தின் மூலம் தமிழில் அறிமுகமானவர் நடிகை நஸ்ரியா நாசிம். முதல் படமே வெற்றிப்படமாக அமைந்ததை அடுத்து நஸ்ரியாவுக்கு தொடர்ந்து படவாய்ப்புகள் வந்த வண்ணமாக இருந்தன. அவரது நடிப்பில் அடுத்தடுத்து வெளியான 'ராஜா ராணி' படத்தின் மூலம் ரசிகர்களின் அபிமானத்தை வென்றார். அதனைத் தொடர்ந்து 'நையாண்டி', 'வாயை மூடி பேசவும்' உள்ளிட்ட படங்களில் நடித்தார். மேலும் மலையாளத்தில் பல படங்களிலும் நடித்தார். இந்த நிலையில், மலையாள படஉலகின் முன்னணி நடிகராக வலம் வரும் பகத் பாஷிலுடன் நஸ்ரியாவுக்கு திருமணம் நடந்தது. அதுமுதல் படங்களில் நடிப்பதை தவிர்த்து வந்த நஸ்ரியா நீண்ட இடைவேளைக்கு பிறகு மீண்டும் மலையாள படம் ஒன்றில் நடிக்க ஒப்பந்தமாகி இருக்கிறார். தொடர்ந்து தமிழ் படங்களிலும் அவர் நடிப்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)



யாரையும் இகழ்ச்சியாக ஒதுக்கி வைத்து விடாதீர்கள்... எதேச்சையாக அவர்கள் உங்களையும் ஒருநாள் ஒதுக்கி வைத்து விடலாம்!




பிரச்சினை இல்லாவிட்டால்
அவன் மனிதன் இல்லை

சண்டைகள் போடாவிட்டால்
அவர்கள் கணவன் மனைவி இல்லை

அன்பைப் பொழியாவிட்டால்
அவர்கள் பெற்றவர்கள் இல்லை..

தொல்லைகள் தராவிட்டால்
அவர்கள் பிள்ளைகள் இல்லை

தம்மைப் புரிந்துகொண்டால்
அவர்கள் உறவினர்கள் இல்லை

எம்மைப் புரிந்துகொள்ளாவிட்டால்
அவர்கள் நண்பர்கள் இல்லை.








**மேடம்:** அன்பால் அனைவரையும் அரவணைப்பீர்கள். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விட வருமானம் உயரும். பணியாளர்கள் நிர்வாகத்தினரின் நன்மதிப்பை பெற்று மகிழ்வர்.

**இடபம்**: அறிமுகம் இல்லாதவரிடம் நெருக்கம் வேண்டாம். தொழில் வியாபாரம் செழிக்க கடின உழைப்பு தேவைப்படும். இலாபம் சுமாராக இருக்கும்.

**மிதுனம்:** வீண் பேச்சு பேசுபவரிடம் விலகுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் வருமானம் சீராக இருக்கும். பணியாளர்கள் பணிச் சுமைக்கு ஆளாகலாம்.

**கடகம்:** இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் பணவரவும் நன்மையும் அதிகரிக்கும். பணியாளர்கள் சுதந்திர உணர்வுடன் பணியாற்றுவர்.

**சிங்கம்:** முக்கிய பணிகளை விரைந்து முடிப்பீர்கள். உறவினர்களின் உதவி கிடைக்கும். பணியாளர்கள் பணி விஷயமாக வெளியூர் செல்வர்.

**கன்னி:** பிறர் கூறும் குறைகளை பொருட்படுத்த வேண்டாம். தொழில் வியாபாரத்தில் இலாபம் சராசரி அளவில் இருக்கும். சொத்து ஆவணம் பிறர் பொறுப்பில் தரக் கூடாது.

**துலாம்:** உதவி பெற்றவர் கூட நன்றி மறந்து செயல்படுவர். தொழில் வியாபாரத்தில் திடீர் பொறுப்பு அதிகரிக்கும். இலாபம் சுமாராக இருக்கும்.

**விருச்சிகம்:** வளர்ச்சிக்கான வாய்ப்பு கிடைக்கப் பெறுவீர்கள். பிறர் வியக்கும் வகையில் தொழிலில் அமோக லாபம் கிடைக்கும். பணியாளர்கள் விரும்பிய இடமாற்றம் கிடைக்கப் பெறுவர்.

**தனுசு:** திட்டமிட்ட பணி விரைவாக நிறைவேறும். தொழிலில் உருவாகிற இடையூறை முறியடிப்பீர்கள். இலாபம் உயரும். பணியாளர்கள் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கப் பெறுவர்.

**மகரம்:** நண்பரின் அன்பும், ஆதரவும் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் இலாபம் திருப்திகரமாக இருக்கும். பணியாளர்களுக்கு பாராட்டு, வெகுமதி கிடைக்கும். பெண்கள் புகுந்த வீட்டினரால் பெரிதும் மதிக்கப்படுவர்.

**கும்பம்:** ஒருமுகத் தன்மையுடன் பணியில் ஈடுபடுவது அவசியம். தொழில் வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். பெண்கள் குடும்ப நலனுக்காகப் பாடுபடுவர்.

**மீனம்:** இனிய பேச்சால் பிறரைக் கவர்ந்திழுப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். பணியாளர்கள் பணிகளை விரைந்து முடிப்பர்.



பேசாமலே இருந்து விட்டால் அழிந்து போவது மொழிகள் மட்டும் அல்ல, உறவுகளும்தான்!










## சுடோக்கு
எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 7 | 3 | | 5 | | | | |
| 5 | | | | | | 8 | 7 | |
| | 6 | | | 7 | | | | 5 |
| | | 4 | 1 | | | | | 7 |
| | 5 | | 9 | 4 | 6 | | 1 | |
| 3 | | | | | 7 | 6 | | |
| 2 | | | | 8 | | | 4 | |
| | | 5 | | | | | | |
| | | | | 9 | | 7 | 8 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 6 | 4 | 8 | 1 | 2 | 7 | 5 | 3 |
| 2 | 5 | 3 | 4 | 7 | 9 | 8 | 1 | 6 |
| 8 | 7 | 1 | 5 | 6 | 3 | 9 | 2 | 4 |
| 3 | 8 | 9 | 2 | 4 | 7 | 5 | 6 | 1 |
| 6 | 2 | 5 | 1 | 9 | 8 | 4 | 3 | 7 |
| 1 | 4 | 7 | 6 | 3 | 5 | 2 | 9 | 8 |
| 5 | 9 | 6 | 3 | 8 | 4 | 1 | 7 | 2 |
| 7 | 1 | 8 | 9 | 2 | 6 | 3 | 4 | 5 |
| 4 | 3 | 2 | 7 | 5 | 1 | 6 | 8 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை.

# மனதில் உறுதி வேண்டும்




ஒரு அரசனுக்கு திடீரென இரண்டு கண்களும் குருடாகி விட்டன. அதைக் குணப்படுத்த மலை உச்சியில் உள்ள மூலிகை ஒன்றை எடுத்து வரவேண்டும். அதை எடுப்பதற்கு அந்த மலையடிவாரத்து தேவதை வழிகாட்ட வேண்டும். அந்த அரசனுக்கு மூன்று குமாரர்கள் அவர்களில் மூத்தவன் தான் மூலிகையைக் கொண்டு வருவதாகப் புறப்பட்டான். தேவதை தான் வழிகாட்டிச் செல்ல ஒரு நிபந்தனை விதித்தது. " நான் உன் பின்னால் வருவேன். நான் இடது பக்கம் திரும்பு என்றால் நீ இடது பக்கம் திரும்ப வேண்டும். வலது பக்கம் திரும்ப வேண்டுமென்றால் வலது பக்கம் திரும்ப வேண்டும். எது நடப்பினும் பின்னால் திரும்பிப் பார்க்கக் கூடாது. நிபந்தனை மீறப்பட்டால் நீ கற்சிலையாகி விடுவாய்" என்றது. நிபந்தனையை ஏற்றவன் தேவதை முன்னால் நடந்தான். திடீரென பின்னால் வரும் தேவதையின் காற்சலங்கை ஒலி கேட்கவில்லை. "என்னாயிற்று" என அவன் தன்னையறியாமலே திரும்பிப்பார்த்தான். உடனே அவன் கற்சிலையானான். அடுத்து இரண்டாமவன் புறப்பட்டான். பாதித் தூரம் அவன் தாண்டும் போது அவனின் பின்புறம் இருந்து சிலிப்பொலி கேட்டது. ஆர்வம் மிகுதியால் திரும்பினான். அவனும் கற்சிலையானான். இறுதியாக மூன்றாமவன் தொடர்ந்து செல்கையில் பின்னே அலறல் சத்தம் சிரிப்பொலி இப்படி பல சத்தங்கள் கேட்டும் அவன் திரும்பிப் பாராது தொடர்ந்து சென்று வெற்றி பெற்று மூலிக்கையையும் கைப்பற்றி தந்தையின் கண்களுக்கு ஒளி கொடுத்தான்.

**எந்த ஒரு வெளிக்காரணிகளையும் பொருட்படுத்தாமல் எவனொருவன் இலக்கை மட்டும் கருத்தில் கொண்டு பயணிக்கிறானோ அவனே வாழ்வில் வெற்றி அடைவான்.**



# புள்ளிகளை இணைத்து உருவைப் பூர்த்தி செய்க





# ஒரே மாதிரியான மிருகங்களுக்கு வட்டமிடுங்கள்



# அந்தரத்தில் தொங்கும் பாறை

பன்னெடுங்காலமாக ஒரு பாறை தரை மட்டத்தில் படாமல் அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருக்கிறது. சவூதி அரேபியாவில் உள்ள அல்-கசனா பகுதியில் ஒரு கிராமத்திலேயே இந்த அதிசயப் பாறை உள்ளது. 1989ஆம் ஆண்டு ஒரு சம்பவம் நடந்தது. அதாவது இந்தப் பாறையின் பின்புறத்தில் மறைந்திருந்த ஒரு ஆயுததாரி சுட்டுக் கொல்லப்பட்டான்.

இன்றும் கூட சுடப்பட்டவரின் உடலிலிருந்து சிதறிய குருதி மறையாமல் அப்படியே உள்ளது. இந்த அதிசயப் பாறையின் மற்றொரு அதிசயம் என்னவென்றால் சூழலின் தட்ப வெட்ப நிலைக்கு ஏற்ப இந்தப் பாறை மேலும் கீழுமாக அசைகிறதாம்.

# அறிவுக்கு விருந்தாகும் விடுகதைகள்

1. உயிரைக் காக்கும் கொடை புண்ணியம் தரும் கொடை, ஆபத்தில் இருப்பவருக்குத்தான் தெரியும் இதன் மதிப்பு. விடை தெரியுமா?
2. சுவையை உணர வைக்கும் என்னுடைய பேச்சால் பயனடைந்தவர்களும் உண்டு. பாதிப்படைந்தவர்களும் உண்டு. நான் யார் தெரியுமா?
3. தலையைச் சீவினால் தாகம் தீர்ப்பான் அவன் யார்?
4. கால் உண்டு நடக்க முடியாது அது என்ன?
5. மண்ணுக்குள் கிடப்பவள் மங்களகரமானவள் அது என்ன?
6. முட்டு விட்டுக்குள்ளே தட்டுப் பலகை அது என்ன?
7. பந்திக்கு வரும் முந்தி. வெளியே வரும் பிந்தி அது என்ன?
8. அடி மலர்ந்து நுனி மலராத பூ அது என்ன?
9. சீருடை இல்லாத காவலாளி. சம்பளம் கேட்காத காவலாளி அவன் யார்?
10. தன்னிடம் சேருபவனைத் தன்னைப் போலவே மாற்றுவன் அவன் யார்?
11. தீக்குளித்துச் சாகிறவன் காற்றைக் குடித்தும் சாவான் அவன் யார்?

## விடைகள்

1. குருதிக்கொடை
2. நாக்கு
3. இளநீர்
4. நாற்காலி
5. மஞ்சள்
6. நாக்கு
7. வாழை இலை
8. வாழைப் பூ
9. நாய்
10. நெருப்பு
11. பலூன்

# சிரிப்போம்; சிந்திப்போம்



ஒரு ஊரில் ஒரு ஆட்டிறைச்சிக் கடை இருந்தது. ஒவ்வொரு நாளும் முதலாளி கடையை மூடப் போகும் சமயம் ஒரு தலைக்கனம் பிடித்தவன் அந்தக் கடைக்கு வந்து கடைக்காரரிடம் "முதலாளி.... மூளையிருக்கா? என்று கேட்பான். அதற்கு முதலாளியோ "இல்லை" என்பார். அவனோ "என்ன முதலாளி இன்றும் உங்களிடம் மூளை இல்லையா?" என்று கிண்டலுடன் சொல்லிவிட்டுச் செல்வான்.

இதையே வழக்கமாகக் கொண்டிருந்த அவனை எப்படியாவது தானும் மட்டம் தட்டிப் பேச வேண்டும் என அவர் நினைத்திருந்தார். நாள்கள் நகர்ந்தன. ஒரு நாள் அந்தக் கடைக்காரருடன் ஒன்றாகப் படித்த நண்பர் ஒருவர் அந்தக் கடைக்கு வந்திருந்தார். அவரிடம் அந்தக் கடைக்கார நண்பர் தினமும் தன்னை ஒருவன் கேலி பேசி வருவதாகக் கூறினார். இதனைக் கேட்ட நண்பர் "அட இவ்வளவு தானா? இதை நான் பார்த்துக் கொள்கிறேன்" என்று கூறினார். கடையை மூடப் போதும் சமயம் வழக்கம் போல தலைக்கனம் பிடித்தவன் வந்தான். "முதலாளி மூளையிருக்கா என்று வழக்கம் போலக் கேட்டான். அதற்கு கடைக்காரரின் நண்பர் அவனைப் பார்த்து "இதுவரை வந்த அனைவருக்கும் மூளை இருந்தது. ஆனால் துரதிஷ்ட வசமாக உங்களுக்குத் தான் அது இல்லை" என்றான். தலைக்கனம் பிடித்தவ்னுக்கு உச்சம் தலையில் யாரோ குட்டியது போலிருந்தது. நண்பனின் சாதுரியமான பதிலைக் கேட்ட கரைக்காரர் முகத்திலும் மகிழ்ச்சி தெரிந்தது.

## அதியுச்ச...

முறைக்கு வரும்.

தற்போது இடைக்கால அறிக்கையின் பின்னிணைப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு வெளிவந்துள்ளது.

ஏற்றுக்கொள்ளத்தக்கதொரு கருத்தொருமிப்பை அடைவதற்கான நலன்கருதி இடைக்கால அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டுள்ள முதன்மைக் கோட்பாடுகளை இரண்டு முதன்மைக் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இருக்குமாயின், அவற்றுடனான இணக்கத்தைப் பரிசீலிப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயாராக உள்ளது. புதிய அரசமைப்பு உருவாக்கப் பணிகள் முழுமையாக வெற்றிபெறவேண்டும்

புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கையில் ஒற்றையாட்சிக்கு முடிவு கட்டப்பட்டுள்ளது. இலங்கை இனிமேல் ஒருமித்த நாடு. எனவே, பிரிபடாத மற்றும் பிரிக்க முடியாத நாட்டுக்குள் கூட்டாட்சிக் கோட்பாடுகளுக்கு இணங்க அதியுச்ச அதிகாரங்கள் பகிரப்படவேண்டும். தமிழ் பேசும் மக்களின் தாயகமான வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் மீளிணைக்கப்பட்டு ஒரு மாகாணமாக அமைதல் வேண்டும். இந்த நிலைப்பாட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுதியாக இருக்கின்றது. இவ்வாறானதொரு தீர்வையே கூட்டமைப்பு ஏற்றுக் கொள்ளும் - என்றார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை.சோ.சேனாதிராசா தலைமையில் அம்பாறை மாவட்டத்தின் கல்முனை வாடிவீட்டு விடுதியில் அமைந்துள்ள ஜெயா மண்டபத்தில் கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் நடைபெறவுள்ள உள்ளூராட்சிசபைத் தேர்தல் மற்றும் மாகாண சபைத் தேர்தலை எவ்வாறு எதிர்கொள்வது என்பது தொடர்பிலும் பேசப்பட்டுள்ளது. (வ-5)

## இடைக்கால...

அவர் அனுப்பி வைத்த ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

'உத்தேச அரசமைப்புத் திருத்தத்துக்கான இடைக்கால அறிக்கை வெளிவந்துள்ள நிலையில் தமிழர் தரப்பிலிருந்து பரவலான அதிருப்தியும் எதிர்ப்பும் கிளம்பியுள்ளதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இது தொடர்பில் தங்களது நிலைப்பாடு என்ன?'

பதில் முழுமையாக ஆவணத்தைப் பரிசீலிக்க எனக்கு நேரம் போதவில்லை.

எனது அவதானம், ஒருவர் நோயுற்றிருந்தால் அந்தநோய் என்ன? என்று முதலில் அறிந்து கொள்ள வேண்டும். அதன்பின் அந்த நோய்க்கு எவ்வாறான சிகிச்சை அளிக்கவேண்டும் என்று ஆராயவேண்டும். அந்த ஆராய்வின் முடிவில் சிகிச்சை ஆரம்பிக்கப்பட்டு நோயைத் தீர்க்கமுயற்சிக்கவேண்டும்.

இப்போது எமது நோயைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்பதே எனது கருத்து. நோயைப் புரிந்து கொள்ளாது மருந்துகளைப் பற்றிய சர்ச்சையில் ஈடுபட்டுள்ளோம். நோயைப் புரிந்து கொள்ள நோயின் சரித்திரம் மிகஅவசியம். எவ்வாறான பின்புலம் இன்றைய நோயை ஏற்படுத்தியது என்று அறிந்தால்தான் உரிய சிகிச்சையைப் பரிந்துரைக்கலாம். நோயைப் புரிந்துகொள்ளாது சிகிச்சையில் நாம் ஈடுபட்டுள்ளோம் என்பதே எனது அவதானம்.

இடைக்கால அறிக்கை நோயை அறிந்ததாகவோ, தீர்க்கப் போதுமானதாகவோ தென்படவில்லை. நோயை அறியாத சிகிச்சை தோல்வியில் முடியும்.

இடைக்கால அறிக்கை தமிழர்களுக்கு மிகுந்த ஏமாற்றத்தையும் அதிருப்தியையும் ஏற்படுத்தும் என்பது திண்ணம். சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை உறுதிப்படுத்துவதாகவே உள்ளது. எதனைப் புறக்கணித்து நாம் எழுபது வருடங்களுக்கு மேலாகப் போராடி வந்தோமோ அதனை வலியுறுத்துவதாகவே அறிக்கை அமைந்துள்ளது. சிங்களத் தலைவர்கள் அரசியல் அதிகாரத்தைத் தம்வசம் எடுத்துக் கொண்டு தாம் செய்ததே சரியென்ற அடிப்படையில் இதுவரை காலமும் நடந்துகொண்டதே எமது அரசியல் நோய்க்கு மூல காரணம்.

ஒற்றையாட்சியை நிராகரித்து தமக்குரிய அரசியல் தீர்வாக கூட்டாட்சிக் (சமஷ்டி) கோரிக்கையைத் தமிழர்கள் முன்வைத்துள்ள நிலையில் தொடர்ந்தும் ஒற்றையாட்சி முறைமையைத் தக்கவைக்கும் பொருட்டு வார்த்தைப் பிரயோகங்களில் ஏமாற்ற முற்பட்டுள்ளமை அருவருப்பை ஏற்படுத்துகின்றது. ஒருநாட்டினுடைய ஆட்சிக் கட்டமைப்பைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் பன்னாட்டு ரீதியில் ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய ஒரு பொருத்தமான வார்த்தையைப் பயன்படுத்தாது 'ஏகியரட' என்கின்ற சிங்களச் சொற்பதத்தைப் பயன்படுத்தியிருக்கின்றார்கள். 'எக்சத்' என்ற பதத்தைப் பாவிக்காது 'ஏகியரட' என்று கூறியமை அறிக்கை ஆக்கியோரின் கபடத் தனத்தை வெளிக்காட்டுகின்றது.

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்டு இணைந்த வடக்கு - கிழக்கில் கூட்டாட்சி அடிப்படையிலான அதிகாரம் பகிரப்படவேண்டும்என்கின்றதமிழ்மக்களின்கோரிக்கை இந்த இடைக்கால அறிக்கையில் முற்றாக நிராகரிக்கப்பட்டுள்ளதாகவே கருதமுடியும்.

'தமிழ்த் தேசிய கூட்டமைப்புத் தேர்தல் காலத்தில் வாக்குறுதி அளித்தவாறு வடக்கு கிழக்கு இணைப்புபற்றியும் ஐக்கிய இலங்கை மாகாணங்களின் ஒன்றிணைப்புப் பற்றியும் பின்னிணைப்பில் வலியுறுத்தியுள்ளதே அது பற்றி தாங்கள் என்ன நினைக்கிறீர்கள்?'

பதில்: அறிக்கையின் ஆங்கிலப் பிரதியைப் பார்த்தீர்களானால் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஏறத்தாழ 70 வருடங்களாக தமது உரிமைகளுக்காகப் போராடிக் கொண்டிருக்கும் எமது இனத்தின் கோரிக்கைகளை வெறும் ஒன்றே கால் பக்கத்துக்குள் அடக்கியிருக்கின்றது என்பது தெரியவருகின்றது. வேறு அறிக்கைகளைக் குறிப்பிட்டுள்ளதே தவிர திடமாகத் தமக்கு வேண்டியவற்றைக் கூறத் தவறியுள்ளது. வடக்கு மாகாண சபையும் தமிழ் மக்கள் பேரவையும் போதுமான விவரங்களுடன் தமது அறிக்கைகளைச் சமர்ப்பித்திருந்தன.

மத்திய அரசுக்கும் மாநிலத்துக்கும் இடையே அதிகாரங்கள் பகிரப்படவேண்டும் எனக் கூறப்படுகின்றதே தவிர, என்னென்ன அதிகாரங்கள் மாநிலத்துக்கு ஒதுக்கப்படவேண்டும் என்பன பரிந்துரை செய்யப்படவில்லை. ஒட்டு மொத்தத்தில் இந்த இடைக்கால அறிக்கையானது தமிழரின் இனப் பிரச்சனை தொடர்பான பயணத்தை பின்னோக்கி நகர்த்தியுள்ளதாகவே கருதலாம்.

'இந்த இடைக்கால அறிக்கைக்கு நீங்கள் ஆதரவு வழங்குவீர்களா?'

பதில் நோய்க்கு மருந்து கொடுக்காவிட்டால் நோய் தீராது. தொடரப் போகும் நோய்க்கு ஆதரவு வழங்கச் சொல்கிறீர்களா? அரைகுறைத் தீர்வு ஒரு போதும் நோய்க்கு மருந்தாகாது. தொடர்ந்து போராட வேண்டிய நிர்ப்பந்தத்தையே இந்த இடைக்கால அறிக்கை எமக்கு நல்கியுள்ளது. (வ-5)

## குருதி...

வது: புதிய கருத்தாடல்களை சமூகங்களுக்கு இடையே தோற்றுவிப்பதன் ஊடாக புதிய அரசமைப்பிலுள்ள விடயங்களை மூடிமறைப்பதற்கு தற்போதைய அரசு முயற்சித்து வருகின்றது. இது நாட்டுக்குப் பெரும் அச்சுறுத்தலாகவே அமையும். நாடு பிரிந்திருப்பதையே தமிழ்ப் பிரிவினைவாதிகள் விரும்புகின்றனர். புதிய அரசமைப்பின் ஊடாக அந்த இலக்கை அடைவதற்கு அவர்கள் முற்படுவார்கள்.

மேலும், புதிய அரசமைப்பு ஊடாக தமிழ், முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் தீரப்போவதில்லை. பன்னாட்டுச் சமூகமே வடக்கை ஆளப் போகின்றது.

இன்று ரணில் விக்கிரமசிங்க புதிய அரசமைப்பை மக்கள் வாக்கெடுப்பு இல்லாது தமது அதிகாரத்தை மாத்திரம் கொண்டு நிறைவேற்றப் பார்க்கின்றார்.

நீதிமன்றத்தில் ஒற்றையாட்சி என்று அடையாளப்படுத்திவிட்டு, அதனை நிறைவேற்றும் போது கூட்டாட்சி என்ற அடிப்படையில் கொண்டுவரவே அரசு முயற்சிகின்றது. பொலிஸ், காணி, நிதி முகாமைத்துவம் அனைத்தும் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டு மத்திய அரசைப் பெயரளவில் செயற்படுத்தவே அரசு முயற்சித்து வருகின்றது.

ஒன்பது துண்டுகளாக நாடு பிரிக்கப்பட்ட பின்னர் நாடு எவ்வாறு ஐக்கியப்படும். வடக்கு கிழக்கில் ஒரு சட்டமும் ஏனைய பகுதியில் வேறு விதமாகவும் செயற்படுத்தவா எமது இராணுவத்தின் 27 ஆயிரம் உயிர்கள் காவுகொடுக்கப்பட்டன? மக்கள் இப்போதும் அமைதி காத்து இந்த அரசமைப்புக்கு இடம் கொடுத்தால் நாடு பிளவுபடும்.

தமிழ் பிரிவினைவாதிகளுக்கு ஏற்ற வகையில் இந்த நாட்டை குருதி வெள்ளத்தில் மீண்டும் மூழ்கடிக்கச் செய்யும் செயற்பாடுகளைத் தடுக்க வேண்டும் - என்றார். (வ-5,31)

## புதிய...

கொண்டுவருவதற்கு முயற்சிக்கப்படுகின்றது. இதற்கு மகிந்த அரசு இடமளிக்காது என்பதாலேயே அவரது அரசு திட்டமிட்ட அடிப்படையில் தோற்கடிக்கப்பட்டது.

நாட்டுக்குச் சாவுப்பொறியாக அமைந்துள்ள புதிய அரசமைப்பைத் தயாரிக்கும் பணிக்கு முற்றுப்புள்ளி வைக்காவிட்டால் பிறகு மாற்று வழியைத் தேடுவதற்குக்கூட சந்தர்ப்பம் இருக்காது. நாடும் எஞ்சியிருக்குமா? என்று தெரியவில்லை.

போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயம் வழங்கவேண்டுமாயின் முதலில் அதிகாரப்பகிர்வை வழங்க வேண்டும் என்று ஐ.நா. மனித உரிமைகள் சபையும் பரிந்துரை செய்துள்ளது. பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கிவிட்டு போர்க்குற்றம் இடம்பெற்றதாக உறுதிப்படுத்தி இராணுவத்தினர் மீது பழிதீர்க்கும் முயற்சிகளும் இடம்பெற்று வருகின்றன.

தற்போதைய அரசின் பயணம் நாட்டில் பொருத்தமற்ற ஒரு பயணம் என்பதே உண்மையான விடயமாகும். அதனால் இந்தப் பயணத்தை நிறுத்துவதற்கான முழு அவதானத்தைச் செலுத்தவேண்டியது மிகவும் அவசியமான ஒன்றாகும் -என்றார். (வ-5)

## அரசியல்...

கத் தொடரும் வழக்கை வேறு நீதிமன்றங்களுக்கு இடமாற்ற வேண்டாம் எனக் கூறி தமிழ் அரசியல் கைதிகள் மூவர் உணவு ஒறுப்புப் போராட்டம் கடந்த மாதம் நடத்தியிருந்தனர். இருப்பினும் அந்த வழக்கை அநுராதபுரம் மேல் நீதிமன்றுக்கு மாற்றுமாறு சட்டமா அதிபர் திணைக்களத்தால் வவுனியா மேல் நீதி மன்றுக்கு கடந்த 13ஆம் திகதி கடிதம் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

இன்றிலிருந்து தொடர்ந்து மூன்று தினங்களுக்கு வழக்கை நடத்த வவுனியா மேல் நீதிமன்றம் தீர்மானித்து, 70 சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பியிருந்த நிலையிலேயே, சட்டமா அதிபர் திணைக்களத்தால் வழக்கை இடமாற்றுமாறு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

இதற்கு அமைவாக இன்றைய தினம் அரசியல் கைதிகள் மூவரும் அநுராதபுரம் மேல் நீதிமன்றுக்கே அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

அநுராதபுரம் நீதிமன்றில் மொழிப் பிரச்சினை இருப்பதாகவும், ஏற்கனவே மொழிப் பிரச்சினை காரணமாகவே தாம் சந்தேகநபர்களாக இந்த வழக்கில் சிக்குண்டிருப்பதாகவும் தெரிவித்த தமிழ் அரசியல் கைதிகள், அநுராதபுரம் மேல் நீதிமன்றில் ஏற்கனவே வழக்குகள் இழுத்தடிக்கப்பட்டு வரும் நிலையில் தமது வழக்கு மாற்றப்படுவதை தாம் விரும்பவில்லை என்றும், இதற்கு எதிராக மீண்டும் உணவு ஒறுப்பில் ஈடுபடப் போவதாகவும் தெரிவித்துள்ளனர்.

செங்கன் எனப்படும் இராசதுரை திருவரன், மதியழகன் சுலக்சன், கணேசன் தர்சனன் மூவரும் அநுராதபுரம் சிறைச்சாலையில் 8 ஆண்டுகளாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். 2013ஆம் ஆண்டு வவுனியா மேல்நீதிமன்றில் இவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. விசாரணை நடைபெற்று வருகின்றது. வழக்கை வவுனியா மேல் நீதிமன்றிலிருந்து மாற்றுவதற்கு சட்டமா அதிபர் திணைக்களம் நடவடிக்கை எடுத்திருந்தது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த தமிழ் அரசியல் கைதிகள் மூவரும், உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். வழக்கு கடந்த தவணை விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன், வவுனியா மேல் நீதிமன்றில் வழக்கை விசாரிப்பதற்கான திகதியை அறிவித்திருந்தார். இதனையடுத்து அவர்கள் உணவு ஒறுப்புப் போராட்டத்தைக் கைவிட்டிருந்தனர். (வ-5)

## கடலுக்கு...

இரவு படகில் தொழிலுக்குச் சென்று நேற்றுக் காலை கரைக்குத் திரும்பிக் கொண்டிருந்த போது, அவருக்கு நெஞ்சுவலி ஏற்பட்டதாகவும் பின்னர் மயங்கிவிட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது. கரையை அடைந்ததும் உடனடியாக அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். எனினும் முன்னரே அவர் உயிரிழந்துவிட்டார் என்று மருத்துவ சோதனையில் தெரிவிக்கப்பட்டது. விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (வ-4,8,ரி1)

## நாடு...

கொழும்பு, செப். 25

"பிக்குகளின் வாயை அடைப்பதற்காக அரசு நாடு முழுவதும் உள்ள அனைத்து விகாரைகளுக்கும் நிதி உதவிகளைச் செய்து வருகின்றது. இவ்வாறான செயற்பாடுகளால் பிக்குகளின் வாயை அடைத்துவிட்டு தமது நிகழ்ச்சி நிரலை அரசு முன்கொண்டு செல்லவுள்ளது. இந்த நாடு பிளவுபடா மல் பாதுகாக்க விகாரை களில் நாளைமறுதினம் புதன் கிழமை சிறப்பு வழிபாடுகள் முன்டுக்கப்படும்" என்று பிக்குகள் பாதுகாப்பு அமைப்பு தெரிவித்தது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அதன் தலைமை ஏற்பாட்டாளரான முருத்தெட்டுவே ஆனந்த தேரர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது நாட்டைப் பிளவுபடுத்துவதற்கு பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. நாட்டைப் பிளவுப்படுத்தும் வேலைத்திட்டத்துக்கு இடமளிக்க மாட்டோம். பிக்குகளின் வாயை அடைப்பதற்காக அரசு நாடு முழுவதிலும் உள்ள அனைத்து விகாரைகளுக்கு நிதி உதவிகளை செய்து வருகின்றது. இவ்வாறான செயற்பாடுகளால் பிக்குகளின் வாயை அடைத்துவிட அரசு முயற்சிக்கின்றது. தற்போது பிக்குகள் நாட்டின் பாதுகாப்புக்காக போராடி வருகின்றனர். இதனைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு பிக்குகளின் வாயை அடைக்க அரசு திட்டமிட்டு வருகிறது.

இவ்வாறான செயற்பாடுகளின் ஊடாக தமது நிகழச்சி நிரலை முன்னெடுத்துச் செல்வதே அரசின் முக்கிய நோக்கமாகும். பௌத்த பிக்குகள் அவதானமாகச் செயற்பட வேண்டும். நாடு பிளவுபடாமல் பாதுகாக்க வேண்டும்.

இந்த நாடு பிளவுபடாமல் பாதுகாக்க இந்த வாரம் விகாரைகளில் சிறப்பு வழிபாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன. பௌத்த சாசன பாதுகாப்புக்கான வழிபாட்டுக் கட்டளைகளை கதிர்காமம் மற்றும் களனி விகாரைகளை முன்வைத்து வழிபாடுகளைச் செய்யவுள்ளோம். இந்த நிகழ்வை நாளைமறுதினம் புதன்கிழமை ஏற்பாடு செய்துள்ளோம் - என்றார். (வ-5,31)

## வடக்கு...

அறிய முடிகின்றது.

கடந்த மாதம் 7ஆம் திகதி, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் ஒன்றுகூடி தீர்மானம் எடுத்திருந்தனர். வடக்கு மாகாண அமைச்சரவையில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி பங்கேற்பதில்லை என்றும், அந்தத் தீர்மானத்தை மீறி யாராவது உறுப்பினர்கள் அமைச்சரவையில் பங்கேற்றால் அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் முடிவு எடுத்திருந்தனர்.

இந்த முடிவு கட்சியின் மையச் செயற்குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. மையச் செயற்குழு அதற்கு ஒப்புதல் வழங்கியதும், அது நடைமுறைக்கு வரும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதற்காக அவசர அவசரமாக கடந்த மாதமே மையச் செயற்குழு கூட்டம் நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டது. அது இரண்டு தடவைகள் ஒத்தி வைக்கப்பட்டது. இந்த நிலையில் நேற்றைய கூட்டத்தில் இந்த விடயம் ஆராயப்படலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனாலும், அந்த விவகாரம் எடுத்துக் கொள்ளப்படவில்லை. (வ-5)

## துன்னாலையில்....

டுத்து அங்கு குழப்பமான நிலை ஏற்பட்டது. அதன்போது சாலைகளில் ரயர் போட்டுத் தீ மூட்டி எரித்தனர். பாதுகாப்புப் பிரிவினரின் வாகனம் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. தற்காலிக பொலிஸ் பிரிவு சேதமாக்கப்பட்டது.

இதனுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் சுமார் 100 பேர் வரையில் பொலிஸாரால் தேடப்படுகின்றனர். அவர்களில் நேற்றிரவுவரை 42 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். முன்னர் கைது செய்யப்பட்ட 39 பேரும் விளக்கமறியலில் உள்ளனர். நேற்றுக்காலை ஒருவரும் நேற்றிரவு குறித்த இருவரும் கைது செய்யப்பட்டனர். இருவரும் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அவர்கள் இன்று நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ-4,26)

(ஏற்கனவே கிடைத்த செய்தி 3ஆம் பக்கத்தில்)

## தியாக...

திய இராணுவத்துக்கு எதிராக அகிம்சை வழியில் 12 நாள்கள் உணவு ஒறுப்புப் போராட்டம் நடத்தி வீரச்சாவடைந்த லெப். கேணல் தியாக தீபம் திலீபனின் 30ஆம் ஆண்டு நினைவேந்தலின் இறுதி நாள் நிகழ்வுகள் நாளை செவ்வாய்க்கிழமை இடம்பெற உள்ளன.

நல்லூர் ஆலய பின்வீதியில் அமைந்துள்ள நினைவிடத்தில் அஞ்சலி நிகழ்வுகள் முற்பகல் 10.15 மணியளவில் ஆரம்பமாகும். பொது மக்கள், அரச, அரச சார்பற்ற மற்றும் தனியார் துறை சார்ந்தவர்கள் மற்றும் பொது அமைப்புக்களையும் கலந்து கொள்ளுமாறு தியாகி திலீபன் நினைவேந்தல் ஏற்பாட்டுக் குழு அழைப்பு விடுத்துள்ளது. (வ)

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்



| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 600 | 700 | 1000 | 1000 |
| நண்டு | 400 | 400 | 400 | 400 |
| கணவாய் | 800 | 600 | 800 | 1000 |
| பாரை | 600 | 500 | 700 | – |
| சுறா | 600 | 700 | 1000 | 800 |
| சீலா | 400 | 400 | 400 | 600 |
| விளை | 600 | 400 | 450 | 400 |
| முரல் | 350 | 350 | 400 | – |
| கும்பிளா | 350 | 300 | 400 | 600 |
| கிளாக்கன் | 800 | – | 600 | – |
| ஓரா | 350 | 300 | 500 | 300 |
| திரளி | 250 | 200 | 200 | 200 |
| நகரை | 250 | 150 | 400 | – |
| சூடை | 150 | 100 | 200 | 150 |
| ஒட்டி | 200 | 200 | 300 | 300 |
| திருக்கை | 350 | 200 | 400 | – |
| மதனம் | 250 | 150 | 250 | – |
| கொய் | 150 | 70 | 80 | 100 |
| பாலை | 150 | 200 | 500 | 400 |
| வாளை | 150 | 200 | 400 | 300 |

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | சாவகச்சேரி | சுன்னாகம் | மருதனார்மடம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 60 | 60 | 80 | 60 | 60 |
| கத்தரி | 160 | 120 | 140 | 140 | 140 |
| மரவள்ளி | 70 | 80 | 80 | 60 | 60 |
| பயிற்றை | 100 | 80 | 80 | 80 | 120 |
| பாகல் | 200 | 300 | 300 | 400 | 180 |
| க.கிழங்கு | 80 | 100 | 100 | 120 | 100 |
| பெ.வெங்காயம் | 120 | 100 | 240 | 120 | 90 |
| சி.வெங்காயம் | 250 | 250 | 140 | 220 | 190 |
| பூசணி | 30 | 40 | 40 | 30 | 40 |
| தக்காளி | 200 | 140 | 120 | 160 | 160 |
| வாழைக்காய் | 100 | 80 | 100 | 80 | 80 |
| கீரை | 30 | 40 | 40 | 30 | 40 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 30 | 30 |
| ப.மிளகாய் | 250 | 280 | 250 | 220 | 240 |
| புடோல் | 70 | 80 | 100 | 80 | 80 |
| கோவா | 80 | 120 | 100 | 100 | 100 |
| வெண்டி | 60 | 80 | 50 | 100 | 80 |
| போஞ்சி | 140 | 180 | 160 | 180 | 200 |
| லீக்ஸ் | 120 | 140 | 120 | 120 | 160 |
| தேங்காய் | 70 | 75 | 90 | 90 | 80 |
| உ.கிழங்கு | 120 | 120 | 110 | 110 | 120 |
| தேசிக்காய் | 250 | 100 | 120 | 110 | 120 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 15 | 15 |
| கறிமிளகாய் | 140 | 140 | 120 | 160 | 160 |
| கரட் | 80 | 140 | 160 | 120 | 160 |
| முருங்கைக்காய் | 200 | 150 | 160 | 200 | 160 |



# மழைக்காலத்தில் ஏற்படும் சேற்றுப்புண்களை குணமாக்க எளிய வழிமுறைகள்

மழைக்காலத்தில் எம்மைத் தொந்தரவு செய்யும் முக்கிய பிரச்சினைகளில் ஒன்று சேற்றுப்புண். சாலைகளில் தேங்கிக் கிடக்கும் சேறு சகதி, கழிவு நீர் கலந்த மழைநீரை மிதித்து நடப்போருக்கும், சேற்றில் நின்றுகொண்டு வேலை செய்பவர்களுக்கும் எளிதில் இந்தப் பாதிப்புத் தொற்றிகொள்ளும். சேற்றுப்புண், சாதாரணமாகத் தொடங்கும். படிப்படியாக அதன் தாக்கம் அதிகமாகிவிடும். இயல்பு வாழ்க்கையைப் பாதிக்கம். காலணிகள், பயன்படுத்த முடியாது. நடப்பதற்கே சிரமமாகிவிடும்.

சேறு, நீண்ட நாள் தேங்கிய தண்ணீர், கழிவு நீர் ஆகியவற்றிலிருந்து உருவாகும் நுண்கிருமிகளின் தொற்றினால் காலில் உண்டாகும் புண்களையே சேற்றுப்புண் என்கிறோம். மண், சேறு, சகதியில் உள்ள பக்டீரியா, நுண்கிருமிகள் கால் விரல்களின் இடுக்குகளில் தங்கிவிடும். வியர்வை காரணமாக வேகமாக வளரத்தொடங்கும். கால்களை சரியாக சுத்தப்படுத்தாமல் விட்டால், சேற்றுப்புண் ஏற்படும். இந்த புண்கள் பெரும்பாலும் பாதங்களிலும், விரல்களின் நடுப்பகுதியிலும் கடியை ஏற்படுத்தும்.

### முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்

- காலணிகளை நன்றாகக் கழுவிய பின் சுத்தம் செய்து உலர்ந்த பின்பு மீண்டும் பயன்படுத்தலாம். வெந்நீரில் சிறிதளவு உப்புக் கலந்தோ அல்லது எலுமிச்சை பழச் சாறு கலந்தோ கால்களைக் கழுவலாம்.
- ஒரு கைப்பிடி அளவு வேப்பிலையுடன் நீர் சேர்த்து, அதை கொதிக்க வைத்த பின் அந்த நீரைக்கொண்டும் பாதங்களைக் கழுவலாம்.
- வீட்டில் அரிசியை அலசும் தண்ணீரை சேகரித்து அதை கொதிக்க வைத்து அந்தத் தண்ணீரை கொண்டு பாதங்களை கழுவிய பின்பு ஈரப்பதம் இல்லாமல் துடைத்து விட வேண்டும்.
- தேங்காய் எண்ணெயுடன் மஞ்சளைக் சேர்த்து, குளிப்பதற்கு முன்பாக காலில் பூசிக் குளித்தால் சேற்றுப்புண் ஏற்படாது.

## இது புதுசு





ஆண்களுக்கான ரி சேர்ட் வகைகள் சில அறிமுகமாகியுள்ளன. இவை ஆயிரம் ரூபாவிலிருந்து ஆயிரத்து 500 ரூபா வரை விற்பனை செய்யப்படுகிறன.

## தாளித்த தயிர் சாதம்



**தேவையானவை:**
பச்சரிசி - ஒரு கோப்பை, கடுகு, உளுத்தம்பருப்பு, கறிவேப்பிலை, இஞ்சித் துருவல், எண்ணெய் - தாளிக்க தேவையான அளவு, காய்ச்சி ஆற வைத்த பால், தயிர் - அரை கோப்பை, உப்பு - தேவையான அளவு.

**செய்முறை:**
பச்சரிசியை நன்கு குழைய வேகவிடவும். கடாயில் எண்ணெய் விட்டு கடுகு, உளுத்தம்பருப்பு, கறிவேப்பிலை, இஞ்சித் துருவல் தாளித்து சாதத்துடன் கலந்துகொள்ளவும் இதனோடு பால், தயிர், உப்பு சேர்த்து நன்கு கலக்கவும். தாளித்த தயிர் சாதம் தயார்.

## நவராத்திரி உணவுகள்



### நெய் அப்பம்

**தேவையான பொருள்கள் :**

அரிசி - 2 கோப்பை
வெல்லம் - 2 கோப்பை
தேங்காய்த் துருவல் - அரைக் கோப்பை
வாழைப்பழம் - 2
ஏலக்காய் - 4
சோடா உப்பு - ஒரு சிட்டிகை
நெய் - அரை கோப்பை

**செய்முறை :**

அரிசியைச் சுத்தம் செய்து ஊறவைத்து, கெட்டியாக அரைத்துக்கொள்ளுங்கள். வெல்லத்தைக் கரைத்து, கெட்டிப் பாகாக உருக்கி அதை அரிசிமாவில் விட்டுக் கலந்துகொள்ளுங்கள்.
இந்தக் கலவையுடன் தேங்காய்த் துருவல், ஏலக்காய்ப் பொடி, சோடா உப்பு, வாழைப்பழத் துண்டுகளைச் சேர்த்து நன்றாகக் கலந்துகொள்ளுங்கள்.
பணியாரச் சட்டியை அடுப்பில் வைத்து, குழிகளில் ஒரு தேக்கரண்டி நெய் விட்டு உருகியதும், பாதி அளவுக்கு மாவு விடுங்கள். ஒருபுறம் வெந்ததும் திருப்பிவிட்டு, பொன்னிறமானதும் எடுத்துப் பரிமாறுங்கள். நவராத்திரியில் அம்மனுக்கு இந்த நெய் அப்பத்தைப் படையலிடுவார்கள்.

### சம்பா அவல்



**தேவையானவை:**
அவல் - ஒரு கோப்பை, நெய் - 4 தேக்கரண்டி, முந்திரிப் பருப்பு - 10, கடுகு, கறிவேப்பிலை - தாளிக்க தேவையான அளவு, மிளகு, சீரகம்-தலாஒருதேக்கரண்டி (பொடித் துக் கொள்ளவும்), பச்சை மிளகாய் - ஒன்று (பொடியாக நறுக்கவும்), எண்ணெய், உப்பு - தேவையான அளவு.

**செய்முறை:**
அவலை 5 நிமிடங்கள் நீரில் ஊறவிடவும். வாணலியில் நெய் விட்டு, முந்திரிப் பருப்பை வறுக்கவும். அதே வாணலியில் நெய்யுடன் எண்ணெய் சிறிதளவு கலந்து கடுகு, கறிவேப்பிலை, பொடியாக நறுக்கிய பச்சை மிளகாய் சேர்த்து வதக்கவும். ஊற வைத்த அவல், பொடித்த மிளகு, சீரகம், உப்புச் சேர்த்து நன்கு வதக்கி இறக்கினால் சம்பா அவல் தயார்.

## சக்திவேல் வி.கழக முடிவுகள்

யாழ்ப்பாணம், செப். 25

கொடுக்குளாய் சக்திவேல் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத்தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சில ஆட்டங்களின் முடிவுகள் வருமாறு.

கட்டைக்காடு சென். மேரிஸ் விளையாட்டுக் கழக 'ஏ' அணியை எதிர்த்து ஆழியவளை அருணோதய விளையாட்டுக் கழக அணி மோதிய ஆட்டத்தில், கட்டைக்காடு சென். மேரிஸ் விளையாட்டுக் கழக 'ஏ' அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. ஆட்டநாயகனாக சென். மேரிஸ் அணியின் கஸ்ரோ தெரிவானார்.

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் உடுத்துறை பாரதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக் கழக அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இண்டு அணிகளும் தலா ஒரு கோலைப் பதிவுசெய்தமையால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 3:2 என்ற கோல் கணக்கில் செந்தமிழ் அணி வெற்றிபெற்றது. ஆட்டநாயகனாக செந்தமிழ் அணியின் மயூரன் தெரிவானார்.

மற்றுமொரு ஆட்டத்தில் கல்லாறு கடல்மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து செம்பியன்பற்று சென். பிலிப்நேரிஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. செம்பியன்பற்று சென். பிலிப்நேரிஸ் விளையாட்டுக் கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. அயன் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.



தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் கிராஞ்சி செல்சிற்றி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பரந்தன் இளைஞர் வட்டம் விளையாட்டுக் கழக அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் கோல்கள் எதையும் பதிவுசெய்யாததை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது பரந்தன் இளைஞர் வட்டம் அணி. ஆட்டநாயகனாக நிருசிகன் தெரிவானார். (ம-23)

## இளைஞர் அபாரம்

யாழ்ப்பாணம், செப். 25

நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் அண்ணா சிலையடி இளைஞர் அணி வெற்றிபெற்றது.

கலைமதி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் அண்ணா சிலையடி இளைஞர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் அண்ணா சிலையடி இளைஞர் விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றது. (ம)

சூதாட்டக் குற்றச்சாட்டுத் தொடர்பில்

# இலங்கை மீது விசாரணைகள்



2011ஆம் ஆண்டு உலகக்கிண்ணத் தொடரில் இலங்கை அணி தோல்வியடைந்தமைக்கு சூதாட்டமே காரணம் என்று சில கருத்துக்கள் வெளிவந்திருந்த நிலையில், இந்த விடயம் தொடர்பில் விசாரணை நடத்த முடிவெடுத்துள்ளது பன்னாட்டு கிரிக்கெட் சபை.

இலங்கை அணியின் முன்னாள் தலைவர் ரணதுங்க இந்தக் கருத்தை கடந்த சில வாரங்களுக்கு முன்னர் தெரிவித்திருந்தார். அவரின் இந்தக் கருத்து பல அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்தது. இதையடுத்து விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர, "ரணதுங்க இந்த விடயத்தை எழுத்து மூலம் தந்தால் விசாரணைகள் நடத்தத் தயாராகவுள்ளோம்" என்று தெரிவித்தார். நாள்கள் நகர்ந்து செல்ல இந்தப் பிரச்சினை அப்படியே அடங்கிப்போனது. இந்த நிலையில் இலங்கை அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளரும், முன்னாள் தேர்வாளருமான விக்ரமசிங்க அண்மையில் சூதாட்டம் தொடர்பாக தனது முறைப்பாட்டையும் பதிவுசெய்தார். இதையடுத்து இந்த விடயத்தில் விசாரணை நடத்த முடிவெடுத்துள்ளது பன்னாட்டு கிரிக்கெட் சபை. இந்த விடயத்தை பன்னாட்டு கிரிக்கெட் சபையின் ஊழல் தடுப்புப் பிரிவு உறுதிப்படுத்தியுள்ளது. (ம)

## கலைமதியின் தொடரில் இன்றைய ஆட்டங்கள்

நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஆதிசக்தி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கலைமதி விளையாட்டுக் கழக 'ஏ' அணி மோதவுள்ளது. மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கலைமதி விளையாட்டுக் கழக 'பி' அணியை எதிர்த்து சென். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-422)

## மீண்டும் வென்றது இந்தியா

ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான மூன்றாவது ஒரு நாள் ஆட்டத்திலும் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றுவதை உறுதி செய்தது இந்திய அணி.

5 ஆட்டங்களைக் கொண்ட இந்தத் தொடரின் முதல் இரண்டு ஆட்டங்களிலும் இந்திய அணியே வெற்றிபெற்ற காரணத்தால் நேற்று நடைபெற்ற ஆட்டம் உட்பட எஞ்சியுள்ள அத்தனை ஆட்டங்களிலும் வென்றால் மட்டுமே ஆஸ்திரேலிய அணியால் கிண்ணம் வெல்ல முடியும் என்ற நெருக்கடி நிலைமை இருந்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடி ஆஸ்திரேலிய அணி 6 இலக்குகளை இழந்து 293 ஓட்டங்களைக் குவித்தது. காயத்தில் இருந்து மீண்டு வந்திருந்த பின்ஞ் 124 ஓட்டங்களைக் குவித்தார். சிமித் 63 ஓட்டங்களையும், வோர்ணர் 42 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பும்ரா, குல்தீப் இருவரும் தலா இரண்டு இலக்குகளைக் கைப்பற்றினர். சாகல், பாண்டியா இருவரும் தலா ஒரு இலக்கைக் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இந்திய அணி முன்வரிசையின் சிறப்பான ஆட்டத்தால் பதற்றம் எதுவும் இல்லாமல் 13 பந்துகள் மீதமிருக்க இலக்கை எட்டியது. பாண்டியா 78 ஓட்டங்களையும், ரோகித் 71 ஓட்டங்களையும், ரகானே 70 ஓட்டங்களையும் பெற்றனர் (ம)



# யாழ். பல்கலை மகுடம் சூடியது



யாழ்ப்பாணம், செப். 25

அனைத்துப் பல்கலைக் கழகங்களின் ஆண்கள் அணிகளுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக அணி கிண்ணம் வென்றது.

பதுளை வின்சன் டயஸ் பொது விளையாட்டு மைதானத்தில் நேற்று இடம்பெற்ற இறுதியாட்டத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக அணியை எதிர்த்து பேராதனை பல்கலைக் கழக அணி மோதியது. ஆட்டத்தின் 10ஆவது நிமிடத்தில் பல்கலையின் முதல் கோல் கரனால் பதிவு செய்யப்பட்டது. யாழ்ப்பாணப் பல்கலை 1:0 என்று ஆதிக்கம் செலுத்த முடிவுக்கு வந்தது முதல் பாதி.

ஆதிக்கத்தைத் தக்கவைக்கும் முனைப்பில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக அணி. பதிலடி கொடுக்கும் முனைப்பில் பேராதனை பல்கலைக் கழக அணி. ஆரம்பமானது இரண்டாவது பாதி. பேராதனை பல முறை முயற்சி செய்ய போதிலு எதுவும் பயனற்றுப் போக முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது.


யாழ்ப்பாணப் பல்கலைக் கழக அணி காலிறுதி ஆட்டத்தில் தென்கிழக்குப் பல்கலைக் கழக அணியையும், அரையிறுதியில் மொறட்டுவ பல்கலைக் கழக அணியையும் வீழ்த்தியமை குறிப்பிடத்தக்கது. (ம-23)

ENGLISH
திருமணமாகி U.K. செல்வோருக்கான பரீட்சை
IELTS-LIFE SKILLS - (A1) - வகுப்புக்கள்
SPOKEN ENGLISH - பேசுவதற்கு 100% பயிற்சிகள்
BASIC ENGLISH - அடிப்படையிலிருந்து ஆங்கிலம்
DIPLOMA IN ENG. - பூரண பயிற்சி நெறி
ENGLISH WAY
44, பலாலி வீதி, யாழ்.
077 977 3050

Life Skills - A1 U.K.
2 நாள்களில்
இலகு வழி தயார்படுத்தலும்
100 % இறுதி பரீட்சை போன்ற மாதிரி பரீட்சையும்
30,01 ஆம் திகதிகளில் 9a.m. 2p.m
1000/= மட்டுமே
முன்பதிவினை மேற்கொண்டு பங்குபற்ற முடியும்
076 697 3040/077 050 4446/ 021 221 2410
ELAS Sir Pon.Ramanathan Rd, Thirunelveli, Jaffna. (பல்கலை எதிரில்)

SAAMSON Experts in English Training
SPOKEN ENGLISH
நேரடி உரையாடல் மூலமான பயிற்சி
இம்முறை A/L எழுதியோர், இளைஞர், யுவதிகள், பல்கலை புகுமுகமாணவர்கள் தொழில்புரிவோர், ஆசிரியர்கள் வெளிநாடுசெல்வோர் இணையமுடியும்.
பாடப்புத்தகங்கள், மற்றும் VIDEO DVD என்பன முற்றிலும் இலவசம்.
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 30.09.2017 சனிக்கிழமை
1. காலை 08.00-10.00 3. பி.ப 01.00- 03.00
2. காலை 10.00-12.00 4. மாலை 03.00-05.00
வார நாள் (திங்கள், புதன்) பிரிவுகள் ஆரம்பம் 25.09.2017 , 27.09.2017
1. காலை 8.00 – 10.00 2. காலை 10.00 – 12.00
SAAMSON Experts in English Training
403, வெலிங்டன் சந்தி அருகில், யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

MCS IT CAMPUS வழங்கும் மாபெரும் சந்தர்ப்பம்
Special Offer
Entry Fee 8000 only
A/L க.பொ.த உயர்தரப்பரீட்சை தோற்றியோருக்கு ஒரு கற்கைநெறிக்கு மட்டும் கட்டணத்தை செலுத்தி விரும்பிய அனைத்து கற்கை நெறிகளையும் கற்கலாம்
BIT,Comp.Eng,CIMA
Sinhala, Web Designing, Hardware, Networking Autocad, Accounting Package, Diploma in English
விஜயதசமி வரை.....!
Type<Name><Course><District><Send to 772395895
MCS IT CAMPUS Near University Of Jaffna



# மரின் சம்பியன்

ஜப்பான் பூப்பந்தாட்டத் தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவில், சம்பியனானார் ஸ்பெய்ன் வீராங்கனை கரோலினா மரின். டோக்கியோ நகரில் நடைபெற்று வந்த இந்தத் தொடரின் இறுதியாட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. சீன வீராங்கனை ஹி பிங்ஹியாவோவை எதிர்த்து ஸ்பெய்ன் வீராங்கனை மரின் மோதினார். மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது செற்றை 23:21 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார் மரின். அவர் இரண்டாவது செற்றையும் 21:14 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியதை அடுத்து மூன்றாவது செற்றுக்கு வேலை வைக்காமல் 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்றார். (ம)

# றேஞ்சர்ஸ், சரஸ்வதி அணிகள் அசத்தல்

யாழ்ப்பாணம், செப். 25

மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் றேஞ்சர்ஸ், சரஸ்வதி அணிகள் வெற்றிபெற்றன.

அன்ரனிஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக் கழக அணி மோதியது.

3:1 என்ற கோல் கணக்கில் றேஞ்சர்ஸ் அணி வெற்றிபெற்றது. ஆட்டநாயகனாக றேஞ்சர்ஸ் அணியின் மாதுயன் தெரிவானார்.

இரண்டாவது ஆட்டத்தில் உழவர் ஒன்றியம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உரும்பிராய் சரஸ்வதி விளையாட்டுக் கழக அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் தலா ஒரு கோலைப் பதிவுசெய்தமையால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 4:2 என்ற கோல் கணக்கில் சரஸ்வதி அணி வெற்றிபெற்றது. ஆட்டநாயகனாக சரஸ்வதி அணியின் கோல் காப்பாளர் தெரிவானார். (ம-23-108)

# திக்கம் இளைஞரின் தொடரில் போராடி வெற்றிபெற்றது ஐயனார்

யாழ், செப். 25

திக்கம் சனசமூக நிலையத்தின் வைர விழாவை முன்னிட்டு திக்கம் இளைஞர் விளையாட்டு கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் ஐயனார் அணி வெற்றிபெற்றது. பிறிதொரு ஆட்டம் சமநிலையில் முடிந்தது. முதலாவது ஆட்டத்தில் கொலின்ஸ் அணியை எதிர்த்து துறையூர் ஐயனார் அணி மோதியது. கோல்கள் எதுவும் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியின் 12ஆவது நிமிடத்தில் ஐயனார் அணியின் விதுசன் ஒரு கோலைப் பதிவுசெய்தார். முடிவில் துறையூர் ஐயனார் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற ஆட்டத்தில் கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி மோதியது. தரன் பதிவு செய்த கோலால் முதல் பாதியில் 1:0 என்று முன்னிலை வகித்தது யங்கம்பன்ஸ். இரண்டாவது பாதியின் ஐந்தாவது நிமிடத்தில் நவஜீவன்ஸ் அணியின் கௌதமன் ஒரு கோலைப் பதிவு செய்ய ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. (ம-422)

வீடு, காணி விற்பனைக்கு
வீட்டுடன் காணி விற்பனைக்குண்டு.
இடம் : கொழும்புத்துறை வீதி, பாண்டியன் தாழ்வு . யாழ்ப்பாணம்.
076 785 1067

மணமகள் தேவை
கௌரவ கிறிஸ்தவ சர்வதேச தரத்தில் மென்பொருள் தயாரிப்பாளராக 38 + மணமகனுக்கு (6-12வயது) வித்தியாசத்தில் அழகிய படித்த மணமகள் தேவை. (மதம்மாற விரும்பும் இந்துக்களும் ஏற்கப்படுவர்.)
View www.seaaav.com ME Call 077 242 0337

அதிபர் சேவை வகுப்பு III க்கான வினைத்திறன் தடைதாண்டல் (EB) பரீட்சைக்கான
வழிகாட்டல் வகுப்புக்கள் - 2017
ஆரம்பம்
07/10/2017 சனி 9.00 மணி
பிரதி சனி, ஞாயிறு 9.00 - 1.00 மணிவரை
☆ பாடசாலை நிதி நிர்வாகம் மற்றும் நிதி ஒழுங்கு கோவை.
திரு.செ.நாகராஜா (ஓய்வுநிலை கணக்காளர்)
☆ தாபனவிதிகோவையின் ஒழுங்கு விதிமுறைகள் மற்றும் அரச சேவை ஆணைக்குழுவின் செயற்பாடு ஒழுங்கு விதிமுறைகள்.
திரு.இ.அருள்நேசன் (நிர்வாக உத்தியோகத்தர்)
Note: அனுமதிகளை மட்டுப்படுத்தப்பட்டுள்ளமையால் அனுமதிகளை முற்கூட்டியே பதிவுசெய்யவும்.
நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ்.நகர்.
T.P. 077 469 6695

வீடு வாடகைக்குண்டு
செல்லையா சீவரத்தினம் என்பவருடைய No.98, ஜின்னா வீதி, மானிப்பாய் றோட்டில் உள்ள மேல்மாடியில் உள்ள வீடு வாடகைக்கு உண்டு. சிறிய குடும்பம் விரும்பத்தக்கது.

பணியாளர் தேவை
கிளிநொச்சியில் இயங்கும் பிரபல றெஸ்ரோறன்ஸ் இற்கு சுத்திகரிப்பாளர் (Room Boy) தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
077 839 2107

ஆசிரியர் வே.அன்பழகன் அவர்களின்
தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2018 வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன
யாழ்ப்பாணத்தில்:
அன்பொளி கல்வியகம், யாழ்.இந்துக் கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.
சாவகச்சேரியில்:
அன்பொளி கல்வி நிலையம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.
அனுமதிகளை 25.09.2017 திங்கட்கிழமையிலிருந்து 02.10.2017 திங்கட்கிழமை வரை பிற்பகல் 3.00 - 5.30 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.
குறிப்பு: பெற்றோர் கலந்துரையாடலுடன் வகுப்புக்கள் ஆரம்பிப்பது பற்றிய மேலதிக விவரங்கள் நேர அட்டவணை நேரில் வழங்கப்படும்.
"சின்ன விழி அசைத்துச் சிரித்து வரும் சித்திரங்களை அள்ளி அணைத்து அரிய கல்வி மகிழ்வுடன் ஊட்டிடுவோம்"
இயக்குநர்கள்

வேலை வாய்ப்பு
JOB
யாழ்ப்பாணம் வேம்படிச்சந்திக்கு அருகாமையில் அமைந்திருக்கும் எமது (KINGS ELECTRONICS(PVT) LTD) நிறுவனத்திற்கு
விற்பனை பிரதிநிதிகள்(பெண்)
கணக்கு உதவியாளர்(பெண்)
(கணினி அறிவு விரும்பத்தக்கது)
பணியாளர்கள் உடன் தேவை 01.10.2017ஆம் திகதிக்கு முன்னர் சுயவிபரக்கோவையுடன் நேரில் சமூகமளிக்கவும்.



KINGS ELECTRONICS (PVT) LTD
12, Point Petro Road, Jaffna. TEL-021-4546699

## மரண அறிவித்தல்



### தம்பு சண்முகநாதன்

(இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்)

மட்டுவில் தெற்கு சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், செட்டிகுறிச்சி, சுழிபுரம் வடக்கினை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு சண்முகநாதன் நேற்று (24.09.2017) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு - லக்சுமி தம்பதியினரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான கனகசபை - பொன்னாச்சிப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற இராஜலட்சுமியின் அன்புக் கணவரும், றதிறட்ணா, இராஜசுசினா, இராஜவதனா ஆகியோரின் அன்புத் தந்தையும், சோதிலிங்கம், கிரிதரன், பாலகிருஷ்ணன் ஆகியோரின் மாமனாரும், டசீகரன், கார்த்திகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.09.2017) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சம்பில்துறை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

செட்டிகுறிச்சி,
சுழிபுரம் வடக்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.09.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.